# புதிய ஜனநாயகம்

நவம்பர் 2016
ரூ. 15.00



# மாஃபியாவின் ஆட்சி !



# சோசலிசம்:

# முதலாளித்துவத்தின் கொடுங்கனவு! பாட்டாளி வர்க்கத்தின் கலங்கரை விளக்கம்!

“இத்தனை நாடுகளில் தோல்வியடைந்த பின்னரும் சோசலிசம் என்ற இந்தக் கருதுகோள் வெவ்வேறு வடிவங்களில், வெவ்வேறு நாடுகளில் தலையெடுப்பது ஏன்?” என்று ஆராய்ச்சி நடத்துகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம்.

இது நவம்பர் புரட்சி நூற்றாண்டின் துவக்கம். 1917, நவம்பர் 7 - உலகின் முதல் தொழிலாளிவர்க்க அரசு அமைந்த நாள்.

இது கலாச்சாரப் புரட்சியின் ஐம்பதாண்டு நிறைவு. மே 1966-இல் தான் சோசலிசத்தை உள்ளிருந்தே கவிழ்க்கும் முதலாளித்துவ மீட்புக்கு எதிரான சீன கலாச்சாரப் புரட்சி தொடங்கியது.

இது நக்சல்பாரி எழுச்சியின் ஐம்பதாம் ஆண்டு. மே, 1967-இல்தான், திருத்தல்வாத கம்யூனிஸ்டு தலைமையின் நாடாளுமன்ற சரணடைவுப் பாதைக்கு எதிரான போர்க்குரலாக நக்சல்பாரி உழவர் எழுச்சி தொடங்கியது.

இது கார்ல் மார்க்ஸின் பிறந்தநாளின் 200-வது ஆண்டு தொடக்கம். முதலாளித்துவத்தின் மரணத்தையும், தொழிலாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தையும் முன்னறிவித்த பேராசான் மார்க்ஸின் பிறந்த நாள் மே-5, 1818.

ஐம்பதாம் ஆண்டு, நூறாம் ஆண்டு போன்றவை ஒருங்கே அமையப் பெறுவது ஒரு தற்செயல் நிகழ்வுதான். ஆனால் அந்தக் குறிப்பிட்ட காலத்தில் நடைபெற்ற குறிப்பிட்ட நிகழ்வுகளும், அவற்றுக்கு இடையிலான உறவும் தற்செயலானவைகள் அல்ல. அவ்வகையில் இந்நான்கு நிகழ்வுகளும் ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்தவை.

1917 ரசிய சோசலிசப் புரட்சி என்பது முதலாளித்துவம் முயன்றாலும் மறக்கவே முடியாத கெட்ட கனவு. மனித சமூகத்தை தலைமை தாங்கி வழிநடத்திச் செல்வதாகக் கூறிவந்த முதலாளித்துவ வர்க்கத்தை, அதிகாரத்திலிருந்து அகற்றியது மட்டுமல்ல, அது சமூகத்துக்குத் தேவைப்படாத வர்க்கம் என்பதையும் சமூக முன்னேற்றத்தின் தடைக்கல் என்பதையும் நடைமுறையில் நிரூபித்தார் நவம்பர் புரட்சியின் நாயகன் தோழர் லெனின்.

இன்று சோசலிசம் தோற்றுவிட்டதாக முதலாளித்துவம் தனக்குத்தானே தைரியம் சொல்லிக் கொள்கிறது. இருப்பினும் அரசியல், பொருளாதாரம், சமூகம், பண்பாடு - என ஒவ்வொரு துறையிலும் சோசலிசம் நிகழ்த்திய சாதனைகள் தொல்பொருட்களாகப் புதைந்து விடவில்லை. அவை பல்வேறு வடிவங்களில் உலகெங்குமுள்ள தொழிலாளி வர்க்கத்தின் உரிமைகளாக உயிருடன் உலவுகின்றன.

தொழிலாளிகளுக்கான பணி உத்திரவாதம், ஓய்வூதியம், வேலையின்மைக்கான உதவித்தொகை, பெண்களுக்கான உரிமைகள் என சோசலிச ரசியா முன்னோக்கி எடுத்து வைத்த ஒவ்வொரு அடியும் முதலாளித்துவத்தின் மீது இடியென இறங்கியது. இன்று மேற்கு ஐரோப்பிய நாடுகளில் மட்டுமின்றி, உலகின் பல நாடுகளிலும் தொழிலாளி வர்க்கம் பெற்றிருக்கும் பல உரிமைகள், அன்று தத்தம் நாடுகளில் சோசலிசப் புரட்சியைத் தடுக்கும் பொருட்டு முதலாளித்துவம் மேற்கொண்ட தற்காப்பு நடவடிக்கைகளே.

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

# 110 - மாஃபியாவின் ஆட்சி!

''எனக்குப் பிறகு... பேரழிவு'' என்று பிரெஞ்சுப் புரட்சியில் தலையை இழந்த மன்னன் பதினான்காம் லூயி கூறியதாகச் சொல்வதுண்டு. எம்.ஜி.ஆரும் சரி, ஜெயலலிதாவும் சரி, இருவருமே தனக்குப் பின் கட்சி இருக்க வேண்டும் என்று விரும்பியவர்கள் அல்ல. தனக்குப் பின்னர் கட்சியும் ஆட்சியும் சீர்குலைந்தால்தான் தனது அருமையை உலகம் உணரும் என்பதே அவர்களது மனோபாவம். தனக்கு அடுத்தபடி இன்னார் என்று சொல்வது கூட, இன்னொரு நபரை ''தனக்கு நிகரானவர்'' என்று தானே ஒப்புக் கொண்டதாகிவிடும் என்று அஞ்சுபவர்கள். இவர்கள், தன்னுடன் சேர்த்து தனது மனைவிமார்களையும் அடிமைகளையும் பிரமிடுக்குள் புதைக்கச் சொன்ன எகிப்திய மன்னர்களைப் போன்றவர்கள்.

இந்திய ஜனநாயகத்தின் போலிப் பெருமையையும், பிரதமர்கள், நீதியரசர்கள், ஐ.ஏ.எஸ். - ஐ.பி.எஸ். அதிகாரிகள் உள்ளிட்ட அவற்றின் பிரதிநிதிகளுடைய போலி கவுரவத்தையும், முச்சந்திக்கு இழுத்து அசிங்கப்படுத்தியதிலும், இந்த அரசமைப்பின் நிர்வாண சொரூபத்தை அதன் பக்தர்களுக்குத் தரிசிக்கத் தந்ததிலும் ஜெயலலிதாவுக்கு ஈடு சொல்ல இந்திய அரசியலில் அநேகமாக வேறு யாரும் இல்லை. அந்த திசையில் இப்போது புதிய எல்லைகளைக் காட்டி வருகிறார் ஜெயலலிதா.

செப்.-22 அன்று ஜெயலலிதா அப்போலோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நாள் முதல் இன்று வரை கவர்னர், அமைச்சர்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் உள்ளிட்ட யாரும் அவரைப் பார்ப்பதற்கே அனுமதிக்கப்படவில்லை. மருத்துவர்களைத் தவிர சசிகலாவும் மன்னார்குடி கும்பலைச் சேர்ந்த சிலரும் மட்டுமே அவரைப் பார்ப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. காய்ச்சல், நீர்ச்சத்துக் குறைவு - இரண்டு நாளில் வீடு திரும்புவார் என்றார்கள். அங்கிருந்தே பணிகளை கவனிக்கிறார் என்றார்கள். ''அப்படியானால் புகைப்படத்தை வெளியிடலாமே'' என்று கருணாநிதி கேட்டவுடன் முதல்வரின் உடல்நிலைய அரசியலாக்குகிறார் என்று குற்றம் சாட்டினார்கள். கேட்பவர்கள் மீது வைகோ, தா.பா. போன்ற அடிப்பொடிகளை ஏவினார்கள். சமூக ஊடகங்களில் எழுதுவோர் மீது வதந்தி பரப்புவதாக வழக்கு போட்டுக் கைது செய்தார்கள்.

அரசு முடங்கிவிட்டது என்று கருணாநிதி அறிக்கை விட்டவுடனே, முதல்வர் ஆலோசனைப்படி அவரது துறைகள் ஓ.பன்னீர் செல்வத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக கவர்னரின் அறிக்கை வந்தது. ஜெயலலிதாவை கவர்னர் சந்திக்கவில்லை, ஜெ. கையெழுத்திட்ட கடிதமும் தரப்படவில்லை என்பது நாடறிந்த உண்மை. அடுத்தபடியாக மூன்று தொகுதிகளுக்கான வேட்பாளர்களை அங்கீகரித்து ஜெயாவின் ரேகை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இதையும் தேர்தல் ஆணையம் அங்கீகரித்திருக்கிறது. ரேகை வைத்து சொத்துகள் பினாமி பெயருக்கு மாற்றப்படுவதாகவும் செய்திகள் வருகின்றன.

சசிகலா குடும்பம் சார்ந்த கும்பலும், ஓய்வு பெற்ற அதிகாரியான ஷீலா பாலகிருஷ்ணனும்தான் அரசின் முடிவுகள் அனைத்தையும் எடுக்கிறார்கள் என்றும் ராம் மோகன ராவ் மூலம் அவை அதிகாரபூர்வ முடிவுகளாக்கப்படுகின்றன என்றும் கூறுகின்றன பத்திரிகைகள். ஒருவகையில் பார்த்தால் இதில் புதிய செய்தி ஒன்றுமில்லை. தேர்தல் வெற்றியில் தொடங்கி ஆட்சி நிர்வாகம் வரை அனைத்துமே சட்டவிரோதமாகவும் முறைகேடாகவும்தான் நடந்து வருகின்றன. கொடநாட்டிலும், பையனூர் பங்களாவிலும், போயஸ் தோட்டத்திலும் நடந்து வந்த கும்பலாட்சி, இப்போது அப்போலோவுக்கு இடம் மாறியிருக்கிறது. அவற்றையெல்லாம் அங்கீகரித்து வக்காலத்து வாங்கிய பார்ப்பனக் கும்பலும், ஊடகங்களும் இப்போதும் வக்காலத்து வாங்குகின்றன.

சட்டமன்ற விவாதம், அமைச்சர்களின் அதிகாரம் உள்ளிட்ட அனைத்தையும் 110 என்ற விதியைக் கொண்டு முறியடித்தவர் ஜெயலலிதா. 110 என்ற எண்ணுக்குப் பின்னால் திரைமறைவிலிருந்து அந்த முடிவுகளை எடுத்து வந்த வந்த மாஃபியா இப்போது வெளியே வந்திருக்கிறது. மாஃபியா ஆட்சி நடத்துகிறது. ராஜ முத்திரையாக அம்மாவின் கட்டைவிரல் ரேகை.

●


**புதிய ஜனநாயகம்**

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

**தொகுதி: 32 இதழ்: 1**

**நவம்பர் 2016**

தனி இதழ்: ரூ. 15.00

ஆண்டு சந்தா: ரூ.180.00

வடிவமைப்பு : மு.துரை



தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண் : 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

# நரேந்திர மோடி:
# “வளர்ச்சியின்” நாயகனா, கொள்ளைக்கூட்டத் தலைவனா?

**பண்டிகை காலங்களில் தனியார் ஆம்னி பேருந்துகளில் நடக்கும் கட்டணக் கொள்ளையை விஞ்சி நிற்கிறது, ரயில்வேயின் சிறப்பு ரயில்கள் கட்டண உயர்வு.**

பயணிகளின் பர்ஸை காலி செய்வதில் தனியார் ஆம்னி பேருந்துகளைத் தூக்கிச் சாப்பிட்டுவிடும் அளவிற்கு பயணக் கட்டணங்களை உயர்த்தியிருக்கிறது, இந்திய ரயில்வே துறை. சனி, ஞாயிறு உள்ளிட்ட தொடர் விடுமுறை தினங்கள் மற்றும் பண்டிகை நாட்களையொட்டி இயக்கப்படும் சிறப்பு ரயில்களின் டிக்கெட் விலை, இந்திய ரயில்வே துறை பயணிகள் சேவையைக் கைகழுவிவிட்டு, ஏலக் கம்பெனியாக மாறிவிட்டதை எடுத்துக் காட்டுகிறது. பொருளுக்குள்ள கிராக்கியைப் பொருத்து ஏலத்தொகை ஏறிக் கொண்டே போவதைப் போல, பயணிகளின் கூட்டத்தைப் பொருத்து சுவிதா ரயில்கள் என்றழைக்கப்படும் சிறப்பு ரயில்களின் கட்டண வீதம், வழமையான கட்டணத்தைக் காட்டிலும் 20 சதவீதம், 40 சதவீதம் என ஏறிக்கொண்டே போகும் வண்ணம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

தனியார் ஆம்னி பேருந்துகளின் பண்டிகைக் காலக் கொள்ளைக்கு எதிராக நீதிமன்றத்தில் முறையிடும் வாய்ப்பாவது இருக்கிறது. ஆனால், இந்த ஒப்புக்குச் சப்பாணியான வாய்ப்பைக்கூட, இந்திய ரயில்வே துறை அறிமுகப்படுத்தியுள்ள வளர்வீதக் கட்டணத்திற்கு எதிராகப் பொதுமக்கள் பயன்படுத்த முடியாது. ஏனென்றால், அரசே அறிவிப்பதால் இந்த வளர்வீதக் கட்டண வீதத்திற்குச் சட்டபூர்வ அந்தஸ்து கிடைத்துவிடுவதோடு, சிறப்பு ரயில்கள் மற்றும் துரந்தோ, சதாப்தி, ராஜ்தானி உள்ளிட்ட அதி விரைவு சொகுசு ரயில்கள்; மேலும், எதிர்காலத்தில் இயக்கப்படவுள்ள புதிய அதிவிரைவு ரயில்கள் அனைத்திற்கும் வளர்வீதக் கட்டணம்தான் நிர்ணயிக்கப்படும் என்பதைக் கொள்கையாகவே அறிவித்துவிட்டது, இந்திய ரயில்வே துறை. இத்தகைய ‘‘வளர்ச்சி’’யை முன்னிறுத்தும் அரசின் கொள்கை முடிவுகளை நீதிமன்றங்கள் கேள்விக்குள்ளாக்குவதுமில்லை, தலையிடுவதுமில்லை.

**ரயில் பயணத்திற்குத் திரளும் கூட்டத்தைக் கொண்டு, ரயில்வே துறையை மாபெரும் கொள்ளைக்கார நிறுவனமாக மாற்றி வருகிறது மோடி அரசு.**



தனியார் விமான நிறுவனங்கள் அதிரடி இலாபத்தை அடையும் நோக்கில் அறிமுகப்படுத்தியதுதான் இந்த வளர்வீதக் கட்டணம். இக்கட்டண முறையைக் கொஞ்சம் பச்சையாகச் சொன்னால், புதுப்பட ரிலீஸ் நாளன்று தியேட்டர் வாசலில் கூடுதல் விலையில் விற்கப்படும் கள்ள டிக்கெட்டுக்கும், இதற்கும் அதிக வேறுபாடில்லை. கூட்டத்தைப் பொருத்து டிக்கெட்டின் ரேட்டை தியேட்டர் வாசலில் தீர்மானித்தால், அது கள்ள டிக்கெட். அதையே கவுண்டருக்குப் பின்னால் உட்கார்ந்துகொண்டு செய்தால், அதன் பெயர் வளர்வீத கட்டண முறை. இந்த நெறியற்ற, முறைகேடான வர்த்தக யுத்தியைத்தான் இந்திய ரயில்வே துறைக்குள் புகுத்தியிருக்கிறது, மோடி அரசு.

சென்னையிலிருந்து மதுரைக்குச் செல்லும் பாண்டியன் அதிவிரைவு ரயிலில் படுக்கை வசதி டிக்கெட் கட்டணம் ரூ.315/-. இதுவே சுவிதா ரயில் என்றால், அதே படுக்கை வசதி டிக்கெட் விலை ரூ.1,105/-க்கு எகிறிவிடும். தூரமோ, வண்டியின் வேகமோ, பயண நேரமோ மாறாதபொழுது, டிக்கெட் விலை மட்டும் மூன்று மடங்காக வீங்கிப் போவதன் சூட்சமத்தைப் புரிந்துகொள்ள பொருளாதார அறிவெல்லாம் தேவையில்லை. பதுக்கி வைத்திருக்கும் சரக்கைக் கொஞ்சம் கொஞ்சமாகவும் படிப்படியாக விலையை ஏற்றியும் சந்தையில் விற்கும்

பதுக்கல் வியாபாரிகளின் கிரிமினல் வியாபார யுத்தியைத்தான் மோடி அரசும் பயன்படுத்தி வருகிறது.

ஓரளவு குறைந்த கட்டணத்தில் ரயில் பயணம்; முதியவர்கள், குழந்தைகள், பெண்கள், மாணவர்கள் உள்ளிட்டோருக்கு பயணச் சலுகைகள் என இதுகாறும் பொதுமக்கள் பெற்றிருந்த உரிமைகளை ரத்து செய்துவிட்டு, ரயில்வே துறையைத் தனியார்மயத்திற்கு ஏற்றவாறு அதிரடி இலாபம் தரும் துறையாக மாற்றியமைப்பதுதான் மோடி அரசின் திட்டம். அதற்கான பரிசோதனைக் களமாக இருப்பதுதான் சுவிதா ரயில்கள்.

முதலாவதாக, சுவிதா ரயில்களில் டிக்கெட் கட்டணம் வழமையான கட்டணத்தைப் போல் அல்லாமல், தட்கல் கட்டணத்திற்கு இணையாக அதிக விலையில்தான் நிர்ணயிக்கப்படுகிறது. இரண்டாவதாக, இந்த தட்கல் கட்டணத்தின்படியும் ரயிலின் மொத்த டிக்கெட்டுகளும் விற்கப்படுவதில்லை. ரயிலின் மொத்த இருக்கைகளில் முதல் இருபது சதவீத இடங்கள் மட்டுமே இந்த தட்கல் கட்டணத்தில் விற்கப்படுகின்றன. அவை விற்ற பிறகு, அடுத்த 20 சதவீத இடங்கள், முந்தைய கட்டணத்தைவிட 1.5 மடங்கு அதிகமாக நிர்ணயிக்கப்பட்டு விற்கப்படும். அவை விற்ற பிறகு, அடுத்த இருபது சத இடங்கள் தட்கல் கட்டணத்தைப் போல இரு மடங்கு விலையிலும், அடுத்த இருபது சதவீத இடங்கள் 2.5 மடங்கு விலையிலும், கடைசி 20 சதவீத இடங்கள் மூன்று மடங்கு விலையிலும் விற்கப்படும்.

கூட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு கட்டணக் கொள்ளை அடிப்பது மட்டும் மோடி அரசின் நோக்கமல்ல. ஓரளவு குறைந்த கட்டணத்தில் ரயில் பயணம், முதியவர்கள், குழந்தைகள், பெண்கள், மாணவர்கள் உள்ளிட்டோருக்கு பயணச் சலுகைகள் என இதுகாறும் பொதுமக்கள் பெற்றிருந்த உரிமைகளை ரத்து செய்துவிட்டு, ரயில்வே துறையைத் தனியார்மயத்திற்கு ஏற்றவாறு அதிரடி இலாபம் தரும் துறையாக மாற்றியமைப்பதுதான் மோடி அரசின் திட்டம். அதற்கான பரிசோதனைக் களமாக இருப்பதுதான் சுவிதா ரயில்கள்.

சுவிதா ரயில்களில் குழந்தைகளுக்குக்கூட முழு டிக்கெட்தான் எடுக்க வேண்டும். முதியவர்களுக்குத் தரப்படும் சலுகைக் கட்டணம் கிடையாது. முன்பதிவு செய்த டிக்கெட்டுகளை ரயில் புறப்படுவதற்கு ஆறு மணி நேரத்திற்கு முன்னால் மட்டுமே ரத்து செய்ய முடியும்; அதற்கும் 50 சதவீதக் கட்டணம்தான் திருப்பித் தரப்படும். ஆறு மணி நேரத்திற்குள் ரத்து செய்ய நேர்ந்தால் கட்டணம் திரும்பக் கிடைக்காது. இவை எல்லாவற்றையும்விடக் குரூரமானது என்னவென்றால், சுவிதா ரயில்களில் பொதுப் பெட்டிகளே கிடையாது. இதன் மூலம் சுவிதா ரயில் சேவை மிகச் சாதாரணமான, எளிய பயணிகளைத் தீண்டத்தகாதவர்களாக ஒதுக்கி வைக்கிறது.

வழமை போலவே, பயணிகள் ரயில் சேவையால் அரசுக்கு நட்டமேற்படுகிறது என்ற அழுகுணித்தனமான காரணத்தை முன்வைத்து, இந்த வளர்வீதக் கட்டண முறையை மோடி அரசும் அதனின் துதிபாடிகளும் நியாயப்படுத்தி வருகிறார்கள். இலாப நோக்கோடு நடத்துவதற்கு பயணிகள் ரயில் சேவை வியாபாரம் கிடையாது. அது அரசின் தார்மீகப் பொறுப்பும் கடமையுமாகும். இதுவொருபுறமிருக்க, பயணிகள் ரயில் சேவையால் நட்டமேற்படுகிறது என்பதால், ரயில்வே துறையே நட்டத்தில் இயங்கி வருவதாகக் கூறவும் முடியாது.

2015-16 ஆம் ஆண்டு ரயில்வே பட்ஜெட்டைத் தாக்கல் செய்த மோடி அரசு, அதற்கு முந்தைய ஆண்டில் ரயில்வே துறை மைய அரசுக்கு 8,008 கோடி ரூபாயை இலாப ஈவாகத் தந்திருப்பதாகவும், இதற்கு அப்பால் ரயில்வே 3,740 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியிருப்பதாகவும் அப்பட்ஜெட்டிலேயே அறிவித்தது.

பயணிகள் சேவையைக் குறைந்த கட்டணத்தில் தருவதற்கான மானியத்தை மைய அரசு தனது கையிலிருந்து தருவதில்லை. மாறாக, சரக்குக் கட்டணத்திலிருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து அந்த மானியத்தை ரயில்வே துறை தானே ஈடு செய்து கொள்கிறது. இந்த உள்மானியத்தையும் (cross subsidy) ரயில்வேயின் இலாபத்தோடு சேர்த்துக் கணக்கீட்டால், ஒவ்வொரு ஆண்டும் ரயில்வே துறை 30,000 கோடி ரூபாய்க்கு மேல் இலாபமீட்டும் பொன் முட்டையிடும் வாத்தாகும்.

ரயில்வே துறையின் வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்தில்
சாதாரண பெட்டிகளைக் கழட்டிவிட்டு விட்டு,
அவற்றின் இடத்தில் இணைக்கப்படும் நவீன எல்.எச்.பி. பெட்டிகள்



பெட்ரோல், டீசலுக்குத் தரப்பட்டு வந்த உள்மானியத்தை முற்றிலுமாக ரத்து செய்து, அப்பொருட்களைச் சந்தை விலைக்கு வாங்க வேண்டிய நிலையை உருவாக்கியதைப் போல,





வசதி படைத்தவனுக்குச் சொகுசு பயணம்; ஏழைகளுக்கு மரணத்தோடு விளையாடுகின்ற பயணம்: ரயில்வே சேவையில் காணப்படும் வர்க்க ஏற்றத்தாழ்வு.

ரயில் கட்டணத்தையும் மாற்றியமைக்கத் தீவிரமாக முயன்று வரும் மோடி அரசு, அதனைப் பல்வேறு வழிகளில் நடைமுறைப்படுத்தியும் வருகிறது.

பண்டிகை மற்றும் விடுமுறை நாட்களையொட்டி வழமையான கட்டணத்தில் சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டதைக் கைவிடுவதை காங்கிரசு கூட்டணி அரசு தொடங்கி வைத்தது என்றால், சுவிதா ரயில்கள் மட்டுமே இனி சிறப்பு ரயில்களாக இயக்கப்படும் என்பதைக் கொள்கை முடிவாகவே அறிவித்திருக்கிறது, மோடி அரசு. அவரது தலைமையில் வலதுசாரி பார்ப்பன-பனியா ஆட்சி அமைந்தவுடனேயே, ரயில் பயணக் கட்டணம் 14 சதவீத அளவிற்கு உயர்த்தப்பட்டது. தொழிலாளர்களும் ஊழியர்களும் பயன்படுத்திவரும் மாதாந்திர பயணக் கட்டணமும் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரிக்கப்பட்டது. பயணக் கட்டணம் மட்டுமின்றி, நடைமேடைக் கட்டணமும் இரு மடங்காக, ரூபாய் பத்தாக உயர்த்தப்பட்டு, ரயில்வே நிலையத்திற்குள் நுழைவதே சூதாட்ட கிளப்புக்குள் தலையைக் கொடுப்பது போன்ற நிலைமை உருவாக்கப்பட்டது.

மேலும், பயணக் கட்டணத்திற்கு மேல் சூப்பர் பாஸ்ட் கட்டணம், சேவை வரி, கல்வி வரி, தூய்மை இந்தியா வரி, விவசாய நல வரி என மறைமுகக் கட்டணங்கள் ஏற்றப்பட்டன. சில்லரை பிரச்சினையைத் தீர்ப்பது என்ற பெயரில் டிக்கெட் கட்டணம் அனைத்தும் ஐந்து ரூபாய்களின் மடங்குகளாக மாற்றம் செய்யப்பட்டன. பிரீமியம் சிறப்பு ரயில், தட்கல் பிரீமியம் சிறப்பு ரயில், தட்கல் சிறப்பு ரயில் எனப் பெயர்களை மாற்றிமாற்றிப் போட்டு, கட்டணக் கொள்ளைக்கான ரயில்களை அறிமுகப்படுத்துவது வாடிக்கையாகிப் போனது.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் பயணிகள் வருமானத்தை 46,000 கோடி ரூபாயிலிருந்து 51,000 கோடி ரூபாயாக உயர்த்த வேண்டும் என அறிவித்தகையோடு, ராஜ்தானி, துரந்தோ, சதாப்தி சொகுசு ரயில்களில் இரண்டாம் வகுப்பு மற்றும் மூன்றாம் வகுப்புக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. வளர்வீதக் கட்டண முறையைக் கொண்ட சுவிதா ரயில்கள் மட்டுமே சிறப்பு ரயில்களாக இயக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. ராமேஸ்வரம் விரைவு ரயில் உள்ளிட்டுப் பல்வேறு விரைவு ரயில்களை அதிவிரைவு ரயில்களாக அறிவித்து, மறைமுகக் கட்டண உயர்வு திணிக்கப்பட்டது.

ரயில்வேயை நவீனமயமாக்குவது என்ற முகாந்திரத்தில் நீளம் குறைந்த சாதாரண பெட்டிகளை அகற்றிவிட்டு, அதனிடத்தில் நீளம் அதிகமான, படுக்கை வசதி கொண்ட இருக்கைகளின் எண்ணிக்கை அதிகம் கொண்ட, ஜெர்மன் நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட எல்.எச்.பி. பெட்டிகள் படிப்படியாக இணைக்கப்படுகின்றன. அதேசமயத்தில், ரயிலின் மொத்த நீளம் அதிகமாகவதைத் தவிர்ப்பதற்காக, மாற்றுத் திறனாளிகளுக்கும், பெண்களுக்கும் ஒதுக்கப்படும் தனிப் பெட்டிகளை அகற்றுவது, பொதுப் பெட்டிகளின் எண்ணிக்கையைக் குறைப்பது என்றவாறு சாதாரண பயணிகளின் உரிமைகள் ரத்து செய்யப்படுகின்றன. இதன் மூலம் முன்பதிவு செய்ய இயலாத ஏழைகள் அல்லது திடீர்ப் பயணம் மேற்கொள்ள வேண்டியவர்கள் விலங்குகளைப் போல மட்டுமே ரயிலில் பயணம் செய்ய முடியும் என்ற நிலை உருவாக்கப்படுகிறது.

துரந்தோ, சதாப்தி, ராஜ்தானி சொகுசு ரயில்களின் கட்டண உயர்வின் மூலம் மட்டும் ரயில்வேக்கு இந்த ஆண்டில் 500 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் கிட்டும் என்றும்; ஒவ்வொரு சுவிதா ரயிலின் மூலமும் கிடைக்கும் வருமானம், அந்த ரயிலை இயக்குவதற்கு ஆகும் செலவிற்கு அப்பால், 4 சதவீத இலாபத்தைத் தருகிறதென்றும் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இதற்கும் மேலாக, அனைத்துவிதமான பொதுப் பெட்டிகள் மற்றும் முன்பதிவு பெட்டிகளின் இடத்தில்

குளிரூட்டப்பட்ட பெட்டிகளைக் கொண்டு வருவதன் மூலம் பயணிகள் சேவையை அதிரடி இலாபமீட்டும் துறையாக மாற்றத் திட்டமிடுகிறது, மோடி அரசு. இதன் தொடக்கமாக, அனைத்தும் ஏ.சி. பெட்டிகளாகக் கொண்ட ஹம்ஸஃபர் ரயில்கள் அறிமுகமாகவுள்ளன.

இது குறித்த தொலைக்காட்சி விவாதத்தின்பொழுது பா.ஜ.க. பிரமுகர் நாராயணன், ''யாரால் முடியுமோ, அவர்களிடமிருந்துதான் நாங்கள் கூடுதல் கட்டணம் வசூலிக்கிறோம்'' எனப் பதில் அளித்தார். மிகச் சாதுர்யமாகச் சொல்லப்பட்டிருப்பதைப் போலத் தோன்றும் இந்த பதில் ஒரு மோசடி.

ஏ.சி. பெட்டிகளின் பயணச் சீட்டுக் கட்டணம் விமான கட்டணத்திற்கு இணையாக இருப்பதால், மேல்தட்டு வர்க்கத்தினர் ரயிலைவிட, விமான பயணத்திற்கு முன்னுரிமை தருகின்றனர். நடுத்தர வர்க்கமும்அதற்கும் கீழாக உள்ள ஏழைகளும் மட்டுமே இன்னமும் தமது பயணத்திற்கு அரசு பேருந்துகளையும் ரயில்களையும்தான் நம்பியுள்ளனர். குறிப்பாக, வேலை தேடி, வாழ்வாதாரம் தேடி இலட்சக்கணக்கான ஏழைகள் இந்தியாவின் நான்கு திசைகளிலும் உள்ள நகரங்களை நோக்கி விசிறியடிக்கப்படும் நிலையில், அந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அவசரத் தேவைகளுக்கோ, வருடத்துக்கு ஒரிரு முறையோ தமது சொந்த கிராமத்துக்குச் சென்று திரும்புவதற்கு எளிமையான, கொஞ்சம் வசதியான போக்குவரத்துச் சாதனமாக ரயில்தான் இருந்து வருகிறது. நகரமயமாக்கம் தீவிரமடைய, தீவிரமடைய, அதற்கு நேர்விகிதத்தில் பயணிகள் கூட்டமும் அதிகரித்துச் செல்கிறது. இந்த நிலையில், ரயில் கட்டணத்தைச் சந்தையின் சூதாட்டத்துக்கு ஏற்ப உயர்த்திக்கொண்டே போவது ஏழைகளுக்கு, தொழிலாளர்களுக்கு எதிரான போர் என்றுதான் சொல்ல முடியும்.

● செல்வம்

# தமிழ் மக்களின் வயிற்றலடிக்கும் மோடி!

**தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தைத் தமிழகத்தின் மீது திணித்து, ரேஷன் பொருட்கள் விநியோகத்தில் தமிழக அரசின் தனியுரிமையைத் தட்டிப் பறித்திருக்கிறது, மோடி அரசு.**

2013 செப்டம்பரில் மைய அரசால் கொண்டுவரப்பட்ட தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை எதிர்வரும் நவம்பர் 1 முதல் தமிழகத்தில் அமல்படுத்துவதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறது, அ.தி.மு.க.அரசு. இச்சட்டம் தமிழகத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பொது விநியோக முறைக்கு எதிராக இருப்பதைக் குறிப்பிட்டு, அதனைத் தமிழகத்தில் நடைமுறைப்படுத்த கடந்த மூன்றாண்டுகளாக மறுத்து வந்தது தமிழக அரசு. இந்நிலையில், தமிழகத்திற்கு மாதாந்தோறும் ஒதுக்கீடு செய்து வரும் மொத்த அரிசி ஒதுக்கீட்டில் 1.26 இலட்சம் டன் அரிசியை, ஒரு கிலோ ரூ.8.30-க்குப் பதிலாக, சந்தை விலையில் ரூ.22.53-க்கு மட்டுமே இனி தருவோம் எனக் கட்டளையிட்டு, அ.தி.மு.க. அரசைப் பணிய வைத்துவிட்டார், மோடி.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்த ஒப்புதல் தெரிவித்திருக்கும் அறிக்கை அம்மாவின் பெயர் இல்லாமல், தமிழக அரசின் பெயரில் வெளியிடப்பட்டிருக்கிறது. கேவலம், அரிசியின் விலையை உயர்த்துகிறேன் என மோடி சொன்னவுடன், உணவுப் பாதுகாப்புச் சட்டத்திற்கு ஒப்புதல் வழங்குவது அம்மாவின் துணிச்சலுக்குக் களங்கத்தை ஏற்படுத்தக் கூடும் என்பதாலோ அல்லது தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை ஆதரித்த கருணாநிதியை எதிர்த்து மூன்றாண்டுகளுக்கு முன்பு அம்மா அறிக்கை

தனியார்மயம் ஏற்றுக்கொள்ளாத அனைவருக்குமான பொது விநியோக முறை நடைமுறையிலுள்ள தமிழகத்தின் ரேஷன் விநியோகம்.




போர் நடத்திய வரலாறு காரணமாகவோ இந்த ஒப்புதல் அவரது பெயரில் வெளியிடப்படவில்லை.

**இ**ந்தியாவிலேயே இரண்டு மாநிலங்கள்தான் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குச் சம்மதம் தெரிவிக்காமல் இருந்து வந்தன. அதிலொன்று, தமிழகம்; மற்றொன்று கேரளம். இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் இருப்பதால், தமிழகமோ, கேரளமோ பொது விநியோக முறையில் பின்னுக்குப் போய்விடவில்லை. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டமும் வாராது வந்த மாமணியல்ல.

> தனியார்மயத்திற்குச் சார்பான தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தைத் தமிழகத்தின் மீது வலிந்து திணிக்கும் மோடி அரசு, தமிழக விவசாயிகளின் நலன்களையும் உரிமைகளையும் ஓரளவிற்காவது பிரதிபலிக்கும், சட்டத்துக்கு இணையான காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பைச் செயல்படுத்த மறுக்கிறது.

1990-களில் தனியார்மயம்-தாராளமயம் நடைமுறைப்படுத்தப்பட்ட சில ஆண்டுகளிலேயே நாடு தழுவிய அளவில் செயல்படுத்தப்பட்டு வந்த அனைவருக்குமான பொது விநியோக முறையைக் கைகழுவுமாறு மாநிலங்களுக்கு உத்தரவிட்ட அப்போதைய நரசிம்ம ராவ் அரசு, வறுமைக் கோட்டுக்குக் கீழே, மேலே எனக் குடும்ப அட்டைகளை இரண்டாகப் பிரித்து, வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் குடும்ப அட்டைகளைப் பெற்றவர்களுக்கு மட்டுமே மானிய விலையில் அரிசி, கோதுமை வழங்கப்படும் என அறிவித்தது. இதன் மூலம் மானியத்தின் பயன்கள் உண்மையான ஏழைகளை மட்டுமே சென்றடையும் என்று கூறி, இந்தப் பாகுபாட்டை நியாயப்படுத்தியது. ஆனால், இந்த நடைமுறை ஏழைகளுக்கு எதிரானதாகவே அமைந்து, நாட்டின் பல்வேறு பகுதிகளில் பட்டினிச் சாவுகளும், நோஞ்சான் குழந்தைகள், தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்களின் எண்ணிக்கையும் அதிகமானது.

இந்த நிலையில், இந்திய மக்கள் அனைவருக்கும் படியளக்கப் போவதாகக் கூறிக்கொண்டு, மன்மோகன் சிங்-சோனியா காந்தி கூட்டணியால் கொண்டுவரப்பட்டதுதான் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம். முந்தையது வறுமைக் கோடு என்ற மோசடிக் குறியீடை முன்வைத்து குடும்ப அட்டைகளை இரண்டாகப் பிரித்த தென்றால், பிந்தைய உணவுப் பாதுகாப்புச் சட்டம் சதவீதக் கணக்கீடுகளை வைத்து பொது விநியோக முறையை இரண்டாகப் பிளந்தது.




''படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில்'' என்பார்களே, அது போல, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் என்ற நாமகரணத்தைச் சூட்டிக் கொண்டுள்ள இச்சட்டம், இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பது அளிப்பதை அடியோடு ரத்து செய்கிறது. அனைவருக்குமான பொது விநியோக முறைக்கு மாறாக, நகர்ப்புறங்களில் 50 சதவீதப் பேருக்கும், கிராமப்புறங்களில் 75 சதவீதப் பேருக்கும் மட்டுமே மானிய விலையில் தானியங்கள் அளிக்கப்பட வேண்டும் என வரையறுத்துள்ள இச்சட்டம், அரிசி கிலோ ரூ.3.00, கோதுமை ரூ.2.00, மோட்டா ரக தானியம் கிலோ ரூ.1.00 என்ற விலையில், குடும்ப அட்டையில் உள்ள ஒவ்வொரு தனிநபருக்கும் ஐந்து கிலோ வீதம் இந்த தானியங்களுள் ஏதாவது ஒன்று விநியோகிக்கப்பட வேண்டும் எனக் கூறுகிறது.

தமிழகத்தில் இவை இரண்டுக்கும் நேர் எதிரான பொது விநியோக முறைதான் நடைமுறையில் இருந்து வருகிறது. தற்பொழுது தமிழகத்திலுள்ள இரண்டு கோடியே மூன்று இலட்சம் குடும்ப அட்டைகளுள் ஒரு கோடியே தொண்ணுத்தொரு இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு விலையில்லா அரிசி வழங்கப்படுகிறது. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், ஒரு குடும்ப அட்டைக்குக் கிடைக்கக்கூடிய குறைந்த பட்ச தானியத்தின் அளவு ஐந்து கிலோ மட்டும்தான். ஆனால், தமிழகத்திலோ இந்தக் குறைந்தபட்ச அளவு 12 கிலோவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஒரு குடும்பம் மூன்று நபர்களைக் கொண்டிருந்தாலே தமிழகத்தில் 20 கிலோ அரிசி வழங்கப்படுகிறது. ஆனால், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தால், நபர் ஒருவருக்கு ஐந்து கிலோ என்ற வீதத்தில் இந்த அளவு 15 கிலோவாகக் குறைந்துவிடும்.

தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் குடும்ப அட்டைகளுக்கு அதிகபட்சமாக 50 கிலோ வரை தானியங்கள் பெற முடியும். ஆனால், தமிழகப் பொது விநியோக முறையின் கீழ் அதிகபட்ச அளவு 20 கிலோதான். இந்த வேறுபாடு இருந்தாலும், தமிழகத்தில் நடைமுறையிலுள்ள பொது விநியோக முறை

யின் கீழ் இந்த 20 கிலோ அரிசியையும் இலவசமாகப் பெற முடியும். ஆனால், தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வரும் பொது விநியோக முறையில் வறுமை கோட்டுக்குக் கீழே வாழும் அட்டையைப் பெற்றவர்கள்கூட, கிலோ ஒன்றுக்கு மூன்று ரூபாய் பணம் கொடுத்துதான் தானியங்களைப் பெறமுடியும்.

இந்தியாவில் இரண்டே இரண்டு மாநிலங்களில் மட்டுமே நடைமுறையில் உள்ள அனைவருக்குமான பொது விநியோக முறையைத் தனியார்மய-தாராளமயச் சீர்திருத்தத்திற்கு ஏற்ப ஒழித்துக்கட்டி விட வேண்டும் என்பதுதான் மைய அரசின் தீய நோக்கம். அதனைச் செயற்படுத்தும் முதல்படியாக, தமிழகத்தில் ஏறத்தாழ ஒரு கோடி குடும்ப அட்டைதாரர்கள் வறுமைக் கோட்டைத் தாண்டிவிட்டதாகவும், அந்த அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்காக ஒதுக்கப்படும் அரிசியை, இனி சந்தை விலையில் மட்டுமே ஒதுக்கீடு செய்ய முடியும் எனக் கட்டளையிட்டுக் காரியத்தைச் சாதித்துவிட்டது, மோடி கும்பல்.

தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தை ஏற்றுக்கொண்டாலும், அனைவருக்குமான பொது விநியோக முறையும், விலையில்லா அரிசித் திட்டமும் தொடரும் எனத் தமிழக அரசு அறிவித்திருக்கிறது. இதன் காரணமாக, 2,100 கோடி ரூபாய் கூடுதல் மானியச் செலவு ஏற்படும் எனக் கூறப்படுகிறது. அதாவது, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தின்படி ரேஷன் கார்டுகள் இரண்டாகப் பிரிக்கப்படுவதைத் தமிழக அரசு ஏற்றுக்கொள்ளாததால், தமிழகத்துக்கு ஒதுக்கப்படும் மொத்த அரிசியில் 1.26 இலட்சம் டன் அரிசியைத் தமிழகம் சந்தை விலையில் வாங்க வேண்டிய கூடுதல் செலவு தமிழக அரசின் மீது திணிக்கப்பட்டிருக்கிறது.

இந்த நிதிச்சுமைகூட இரண்டாம்பட்சமானதுதான். அரசின் தண்டச் செலவுகளையும் வரி ஏய்ப்புகளையும் தடுத்துவிட்டால், இந்தக் கூடுதல் மானியச் செலவைச் சமாளித்துவிட முடியும்தான். ஓரளவு நீதியான, சமத்துவமான ரேஷன் முறையை, அனைவருக்குமான பொது விநியோக முறையை நடைமுறைப்படுத்தி வந்ததற்காகத் தமிழகம் தண்டிக்கப்பட்டிருக்கிறது என்பதும், ரேஷன் விநியோகத்தைத் தீர்மானிக்கும் உரிமை தமிழகத்திடமிருந்து பறிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் இப்பிரச்சினையின் மையம்.

''படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில்'' என்பார்களே, அது போல, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் என்ற நாமகரணத்தைச் சூட்டிக் கொண்டுள்ள இச்சட்டம், இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பது அளிப்பதை அடியோடு ரத்து செய்கிறது.




தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைப் படுத்த மறுத்தால், தமிழகத்திற்குக் குறைந்த விலையில் அரிசி வழங்க முடியாது எனக் கறார் காட்டும் மோடி அரசு, காவேரி விவகாரத்தில் கர்நாடகத்தின் மீது இதில் கடுகளவாவது பாய்ந்திருக்குமா? மாறாக, காவேரி மேலாண்மை வாரியம் அமைக்க உச்சநீதி மன்றம் உத்தரவிட முடியாது என்று கூறி, கர்நாடகாவைக் காப்பாற்றியிருக்கிறது. ஒரு காகிதச் சட்டத்தை விட, காவேரி மீதான தமிழகத்தின் உரிமையும் பல இலட்சம் தமிழக விவசாயிகளின் வாழ்வாதாரமும் எந்த விதத்தில் தாழ்ந்து போய்விட்டது?

தனியார்மயத்திற்குச் சார்பான தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டத்தைத் தமிழகத்தின் மீது வலிந்து திணிக்கும் மோடி அரசு, தமிழக விவசாயிகளின் நலன்களையும் உரிமைகளையும் ஓரளவிற்காவது பிரதிபலிக்கும், சட்டத்துக்கு இணையான காவேரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பைச் செயல்படுத்த மறுக்கிறது. ஜல்லிக்கட்டை அனுமதிக்குமாறு தமிழகத்திலிருந்து எழும் கோரிக்கையை உச்சநீதி மன்ற உத்தரவைக் காட்டி ஒதுக்கித் தள்ளும் மோடி அரசு, காவேரி விவகாரத்தில் தமிழகத்திற்கு ஆதரவாகத் தரப்பட்ட உச்சநீதி மன்ற உத்தரவை அமல்படுத்த மறுக்கிறது.

திராவிடக் கொள்கைகளால்தான் தமிழகம் சீரழிந்து நிற்பதாக முதலைக் கண்ணீர் வடிக்கும் தமிழகத்துப் பார்ப்பனக் கும்பல், அதற்கு மாற்றாகத் தேசியத்தையும், பா.ஜ.க.வையும் முன்னிறுத்துகிறது. ஆனால், ரேஷன் அரிசி விநியோகம் தொடங்கி மருத்துவ படிப்புக்கு மாணவர்களைச் சேர்ப்பது வரை, காவிரியில் தமிழகத்தின் உரிமை தொடங்கி மாநில அரசின் வரி விதிப்பு உரிமை ஈறாக, மோடியின் ஆட்சியில் தமிழகத்தின் உரிமைகள் ஒவ்வொன்றாக அடுத்தடுத்துப் பறிக்கப்படுகின்றன. கூடங்குளத்தில் அடுத்தடுத்து அணு உலைகள், சமஸ்கிருதத் திணிப்பு, நெய்வேலி நிலக்கரி நிறுவனத்தின் பெயர் மாற்றம் என வரிசைக் கட்டி வரும் மோடி அரசின் ஒவ்வொரு நடவடிக்கையும் பார்ப்பன இந்துத்துவா கும்பலுக்குத் தமிழக மக்களின் மீது இருக்கும் காழ்ப்புணர்ச்சியையும் வெறுப்பையும் எடுத்துக் காட்டுகின்றன. ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பலும், மோடியும் தமிழக மக்களின் எதிரியாக நிற்பதை அம்பலப்படுத்துகின்றன.

● குப்பன்

# காவேரி:

# தத்துவஞானி சமஸ் சாப்பிடுவது சோறா, கழிவா?

**''தமிழகத்துக்குள்ளான நீராதாரங்களைக் கொண்டே நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது என்று மிகவும் பொறுப்புடன் பேசுவது போன்ற தோரணையில் சமஸ் கூறும் கருத்தின் உட்பொருள், தமிழகத்துக்கு காவிரி இரவல் நதி'' என்பதுதான்.**

சமஸ் ஒரு தத்துவ ஞானி. சாம்பாரில் உப்பு குறைவாக இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள். ''ஏம்பா கொஞ்சம் உப்பு கொண்டு வா'' என்று எளிமையான முறையில் அதற்குத் தீர்வு கண்டுவிடுவீர்கள். அவரைப் பொருத்தவரை அப்படி தீர்வு காண்பது அவரது தகுதிக்கு குறைவானது. உப்பு ஏன் குறைந்தது? இது தமிழ்ச் சமூகம் சொரணை மரத்துப் போனதன் குறியீடா? அன்றி உப்புக்கே உவர்த் தன்மை குறைந்து வருகிறதா என்பன போன்ற அறவியல், அறிவியல் சார்ந்த வினாக்களை எழுப்பி, குறைந்தபட்சம் அரைப்பக்க அளவிலாவது ஒரு கட்டுரை எழுதாமல், அவரால் சாம்பாரில் கை நனைக்க முடியாது.

உப்புப் பெறாத விசயங்களுக்கே அப்படி என்றால், காவிரி பிரச்சினையின்பால் அவர் தனது கவனத்தைத் திருப்பினால் என்ன நடக்கும் என்பதை யோசித்துப் பாருங்கள். ''காவிரியில் நமக்கு உரிமை இருக்கிறது சரி, உரிமைகளைப் பேசும் தகுதி இருக்கிறதா'' என்று தமிழ் இந்துவில் அக். 21, 2016 அன்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

கட்டுரையின் முதல் பத்தி பாரதிராஜா படம் மாதிரி காவிரியில் புதுப்புனல் வரும் சீனுடன் தொடங்குகிறது. அப்புறம் தஞ்சை விவசாயிகளின் வியர்வை மணத்தை உலகுக்கு காட்டிய கும்பகோணம் தி.ஜானகிராமனுக்கு ஒரு துதி. அடுத்த பாராவில் அப்படியே காமெரா வைத் திருப்பி மணற்கொள்ளை, ரசாயனக்கழிவு, சாக்கடை, புதர்கள் மண்டிய காவிரியைக் காட்டுகிறார். ''எந்தச் சமூகமாவது சாப்பாட்டுத் தட்டின் ஓரத்தில் கழிவுகளை வலிய எடுத்து வைத்துக் கொண்டு சாப்பிடுமா? நாம் சாப்பிடுகிறோம்! உரிமை குறித்து முழங்குவதற்கான தகுதி தமிழர்களுக்கு இருக்கிறதா?'' என்று டெர்ரராக உறுமுகிறார்.

பொத்தேரியை ஆக்கிரமித்தது யார்? ராமச்சந்திரா மருத்துவமனைக்கு போரூர் ஏரியைத் தாரை வார்த்தது யார்? அச்சமூக விரோதிகளின் பெயர்கள் சமஸுக்குத் தெரியாதா? அல்லது அவர்களுடைய புனிதத் திருநாமங்களை உச்சரிக்கக் கூடாது என்பதற்காக நாம் என்று தமிழ்ச் சமூகத்தின் மீது பழி போடுகிறாரா?

**நாம் என்பது யார் சமஸ் அவர்களே!**

ரொம்ப நியாயமான கோபம்தான். ஆனால் ''நாம் நாம்'' என்று சொல்கிறாரே சமஸ் அந்த ''நாம்'' யார்? அவரா, நீங்களா, நானா?

பொத்தேரியை ஆக்கிரமித்தது யார்? ராமச்சந்திரா மருத்துவமனைக்கு போரூர் ஏரியை தாரை வார்த்தது யார்? மணற் கொள்ளை ஆறுமுக சாமியும், பாஸ்கரும், கரூர் பழனிச்சாமியும் யார்? நீங்களா, நானா, நாமா?

தலைமைச் செயலர் முதல் தாசில்தார் வரை இவற்றுக்கு ஒத்துழைக்கும் அதிகாரிகள் யார்? நாமா?

மணற் கொள்ளைகளை ஆசீர்வதித்து அனுமதி வழங்கிய நீதிபதிகள் யார், நாமா?

மணற் கொள்ளை உள்ளிட்ட சகல விதமான கொள்ளைகளையும் தலைமை தாங்கி நடத்தும் அம்மா யார்? நாமா?

மேற்படி சமூக விரோதிகளின் பெயர்கள் சமஸுக்கு தெரியாதா? அல்லது அவர்களுடைய புனிதத் திருநாமங்களை உச்சரிக்கக் கூடாது என்பதற்காக ''நாம்'' என்று தமிழ்ச் சமூகத்தின்மீது பழி போடு

பத்திரிகையாளர் சமஸ்.



கிறாரா? யாருடைய நலனுக்காக அவர்களை மறைக்கிறார் சமஸ்?

அவர்களுடைய பெயர்களை தமிழ் இந்துவில் சமஸ் வெளியிடுவாரா? அல்லது கல்வி நிறுவனங்களின் விளம்பரங்களை வெளியிடுவதற்கு முன் அவை ஏரி குளங்களை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டவையா என்று விசாரித்து, அவ்வாறாயின் அத்தகைய சமூக விரோதிகளின் விளம்பரங்களை நிராகரிக்க வேண்டும் என்று தனது நிர்வாகத்திடம் கோருவாரா?

தன்னுடைய ஊதியத்தையும் வாழ்க்கையையும் காப்பாற்றிக் கொள்வதற்காக, அரசியல்வாதிகள், அதிகாரிகள், முதலாளிகள் உள்ளிட்ட எல்லா ரகங்களையும் சார்ந்த சமூக விரோதக் கழிசடைகள் யார் என்று தெரிந்தாலும், அவர்களுக்கு முன்னால் பல்லிளித்து நிற்பதையும் அவர்களை கவுரவப்படுத்துவதையும் தமது தொழில் தருமமாகவே கொண்டிருக்கும் சமஸ் போன்றோர் தமிழ்ச் சமூகத்தைப் பற்றிப் பேசுமுன் தங்கள் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொள்ள வேண்டாமா?

**உங்களுக்கும் கருத்துக் கூற உரிமை இருக்கிறது தகுதி இருக்கிறதா?**

தனது சாப்பாட்டுத் தட்டின் ஓரத்தில் தமிழ் மக்களா கழிவுகளை எடுத்து வைத்துக் கொண்டார்கள்? எடுத்து வைத்தவர்கள் சமூக விரோதிகள். முதல்வரென்றும், தொழிலதிபரென்றும், வெங்காயமென்றும் போற்றிப் புகழ்ந்து அத்தகைய குற்றவாளிகளை புனிதர்களாக அடையாளம் காட்டி மக்களை மடமையில் ஆழ்த்தி வைக்கிறீர்களே அந்த சமூக விரோதிகள்தான். அவர்கள் விட்டெறியும் விளம்பரக் காசிலும், இந்த மக்கள் விரோத அரசின் தயவிலும் வயிறு வளர்க்கும் நாளேடுகளுடைய கருத்து கந்தசாமிகள், தங்களுடைய சாப்பாட்டுத் தட்டில் நிரம்பியிருப்பது சோறா, கழிவா என்பதை முதலில் முகர்ந்து பார்க்கட்டும்.

காவிரி உரிமை கிடக்கட்டும். கருத்துரிமை கூட எல்லோருக்கும்தான் இருக்கிறது சமஸ் அவர்களே, அந்த உரிமையைப் பயன்படுத்தும் ''தகுதி'' உங்களுக்கு இருக்கிறதா என்று முதலில் சிந்தியுங்கள். அப்புறம் பொங்கலாம்.



முன்னாள் மத்திய நீர்வளத்துறை செயலர் ராமசாமி ஆர். ஐயர்.



பெங்களூருவின் கழிவு நீர் காவிரியில் கொட்டப்பட்டுத் தமிழகத்திற்கு அனுப்பப்படுவதை அம்பலப்படுத்தும் சூழலியலாளர் நித்யானந்த் ஜெயராமன்.

மணற்கொள்ளையையும் ஆக்கிரமிப்பையும் எதிர்த்துப் போராடும் தமிழ் மக்கள் காவிரி உரிமைக்காகவும் போராடுகிறார்கள். எதற்கும் போராடாமல் தன் பிழைப்பை மட்டும் பார்க்கும் தி.ஜானகிராமனின் ரசிகர்கள்தான் கும்பகோணம் காவேரி ஸ்நானத்தின் வழியாக காவிரியை நினைவு கூர்ந்து சமஸ் கட்டுரையை சிலாகிக்கிறார்கள்.

காவிரியும், தமிழகத்தின் நீராதாரங்களும் இப்படி சீரழிக்கப்படுகின்றனவே என்ற நியாயமான கோபம் தமிழகத்தின் ஒவ்வொரு விவசாயிக்கும் இருக்கிறது. தன்னுடைய கோபமும் அதுதான் என்பதைப் போல ஒரு தோற்றம் காட்டிவிட்டு, நைச்சியமாக நஞ்சைக் கக்கத் தொடங்குகிறார் சமஸ்.

**காவிரி தமிழகத்துக்கு இரவல் நதியா?**

''எனக்குத் தனிப்பட்ட வகையில் ஒரு கருத்து உண்டு; ரொம்பக் காலத்துக்கு இப்படி நீதிமன்றங்களில் வழக்காடி தண்ணீர் தேவையைத் தீர்த்துக் கொள்ளும் உத்தியை நாம் கையாள முடியாது - தமிழகத்துக்குள்ளான நீராதாரங்களைக் கொண்டே நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும் வகையிலான கட்டமைப்புக்கு நாம் மாற வேண்டும் என்பதே அது.''

''தமிழகத்துக்குள்ளான நீராதாரங்களைக் கொண்டே நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது'' என்று சமஸ் கூறுவதன் பொருள் என்ன? காவிரி ''தமிழகத்துக்குள்ளான'' நீராதாரம் இல்லையா? கர்நாடகத்துக்கு சொந்தமான காவிரி நீரை அடித்துப் பிடுங்குவதற்காகத்தான் நாம் நீதிமன்றத்தில் வழக்காடிக் கொண்டிருக்கிறோமா?

ரொம்பக் காலத்துக்கு வழக்காடும் **உத்தியைக்** கையாள முடியாதாம். உத்தியை கையாள்கிறோமா, வழக்காடும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறோமா? சர்வதேச நதிநீர்ச் சட்டங்கள் முதல் காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பு வரையிலான எதற்கும் கட்டுப்பட முடியாது என்று கர்நாடகம் மறுத்து வருவதால் வழக்காடுகிறோம். மத்திய அரசு இந்த அயோக்கியத்தனத்துக்கு உடந்தையாக இருப்பதால் வழக்காடுகிறோம். தனது தீர்ப்புகள் அவமதிக்கப்பட்டாலும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல்

மணற்கொள்ளையையும் ஆக்கிரமிப்பையும் எதிர்த்துப் போராடும் தமிழ் மக்கள் காவிரி உரிமைக்காகவும் போராடுகிறார்கள். எதற்கும் போராடாமல் தன் பிழைப்பை மட்டும் பார்க்கும் தி.ஜானகிராமனின் ரசிகர்கள்தான் கும்பகோணம் காவேரி ஸ்நானத்தின் வழியாக காவிரியை நினைவு கூர்ந்து சமஸ் கட்டுரையைச் சிலாகிக்கிறார்கள்.

உச்ச நீதிமன்றமே பித்தலாட்டம் செய்வதால் வழக்காடுகிறோம்.

ஆனால் சமஸின் பார்வை வேறு. தமிழகம் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்று மிகவும் பொறுப்புடன் பேசுவது போன்ற தோரணையில் அவர் கூறும் கருத்தின் உட்பொருள், ''தமிழகத்துக்கு காவிரி இரவல் நதி'' என்பதுதான்.



தொழிற்சாலைகள் கழிவுகள் கலந்து ஓடும் விருஷபாவதி நதி.

அதை வெளிப்படையாக சொல்லாமல் சூசகமாக சொல்கிறார். சமஸ் சொல்வதைத்தான் கர்நாடக அரசும் சொல்கிறது. ''காவிரி எங்கள் ஆறு, எங்களுக்கு மிஞ்சித்தான் தான தருமம்'' என்று பேசுகிறது.

துரதிருஷ்டவசமாக சர்வதேச சட்டமோ, மரபுகளோ சமஸின் கருத்துக்கு ஆதரவாக இல்லை. காவிரியில் தமிழகத்துக்கு சம உரிமை இருக்கத்தான் செய்கிறது.

**முன்னாள் நீர்வளத்துறை செயலர் ராமசாமி ஆர். ஐயர் சமஸுக்கு பதிலளிக்கிறார்!**

தமிழ்நாட்டை சேர்ந்தவராக இருந்தாலும், தமிழகத்துக்கு சார்பாக பேசாதவரான முன்னாள் மத்திய நீர்வளத்துறை செயலர் ராமசாமி ஆர். ஐயர் இது பற்றி என்ன கூறுகிறார்?

''சம உரிமை (சம பங்கு அல்ல) என்ற ஹெல்சிங்கி கோட்பாட்டையும், சமத்துவமான பயன்பாடு என்ற ஐ.நா தீர்மானத்தையும் கர்நாடகம் ஏற்க மறுப்பதனால்தான் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைகின்றன. தமிழகத்துடன் தண்ணீரைப் பகிர்ந்து கொள்வது என்ற சொற்றொடரைப் பயன்படுத்தவே கர்நாடகம் மறுக்கிறது. எங்களுக்குப் போக எவ்வளவு தர முடியும் என்றுதான் பேசுகிறது. அதையும் தாங்கள்தான் தீர்மானிப்போம் என்று கூறுகிறது. அதனால்தான் மேலே உள்ள பகுதிகள் ஒரு ஆற்றின் இயல்பான நீரோட்டத்தை தடுப்பதாக (அணை) இருந்தால், கீழே உள்ள பகுதிகளின் ஒப்புதல் இன்றி செய்யக்கூடாது என்ற சர்வதேச நெறியை அது மீறுகிறது. கர்நாடக நீர்ப்பாசனத்துறை செயலரும் சரி, கர்நாடக முதலமைச்சரும் சரி வெளிப்படையாகவே இந்த நெறியை மீறிப் பேசுவது அதிர்ச்சியளிக்கிறது. இதன் படி பார்த்தால் இந்தியாவைக் கேட்காமலேயே பிரம்மபுத்திராவுக்கு குறுக்கே சீனா அணை கட்டிக்கொள்ளலாம் என்று ஆகிவிடும்.''

கர்நாடக அரசின் நிலையை மட்டுமல்ல, உச்ச நீதிமன்றத்தின் அணுகுமுறையையும் விமரிசனம் செய்திருக்கிறார்.

''நடுவர் மன்றம் அமைக்க உத்தரவிட்டது உச்சநீதிமன்றம்தான். ஆனால் நடுவர் மன்றத்தில் தமிழகம் இடைக்கால நிவாரணம் கோரிய போதும் சரி, ஆணையத்தின் இடைக்கால தீர்ப்பை அமல்படுத்த கர்நாடகம் மறுத்தபோதும் சரி, தமிழகம் எழுப்பிய சட்டரீதியான கேள்விகளுக்கு உச்ச நீதிமன்றம் பதிலளிக்காமல் நழுவியது. நடுவர் மன்றத்தின் இறுதி தீர்ப்புக்கு எதிராக 2007-இல் கர்நாடகம் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தபோது, அரசமைப்பு சட்டத்தின் உறுப்பு 262-இன் படி தனக்கு அதிகாரமில்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியிருக்க வேண்டும். மாறாக, மேல்முறையீட்டை அனுமதித்து அதனைக் கிடப்பில் போட்டிருக்கிறது'' என்று சாடியிருக்கிறார்.

இரு மாநில விவசாயிகளையும் இணைத்து இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியாக, சென்னை மிட்ஸ் (MIDS) அமைப்பின் பேரா.ஜனகராஜனுடன் இணைந்து ''காவிரி குடும்பம்'' என்ற அமைப்பு உருவாக்கப்பட்டதைப் பாராட்டுகிறார். அதன் முன்னோடியாக இருந்த கர்நாடக விவசாயி புட்டண்ணையா என்பவரும், பின்னாளில் ''தமிழகத்துக்கு தண்ணீர் விடக்கூடாது'' என்று போராடத் தொடங்கிவிட்டதை விமரிசிக்கிறார். கடைசியில் கோமாளித்தனமானது என்று கூறிக்கொண்டே வேறொரு தீர்வையும் முன்வைக்கிறார்.

''கர்நாடகம் செய்வது சரியல்ல. இருந்த போதிலும் நடுவர் மன்ற இறுதித்தீர்ப்பில் தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுவிட்டதாக கர்நாடகம் கருதுவதால், அவர்களுடைய மனப்போக்கை மாற்றும் பொருட்டு, 192 டி.எம்.சி-யில், 20 டி.எம்.சி தண்ணீரை குறைத்துக் கொள்வதாக தமிழகம் தானே முன்வந்து கூறலாம். இதன் மூலம், இதற்குத் நிரந்தரத்தீர்வு காண முயற்சிக்கலாம். மாதம் தோறும் முறையாக தண்ணீர் திறந்து விடக் கோரலாம்'' என்கிறார்.

கிட்டத்தட்ட பிச்சையெடுக்கும் நிலை அது. ராமசாமி ஐயர் கூறிய நிலையைக் காட்டிலும் தாழ்ந்த, நாயி

தமிழகம் சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்று மிகவும் பொறுப்புடன் பேசுவது போன்ற தோரணையில் சமஸ் கூறும் கருத்தின் உட்பொருள், தமிழகத்துக்கு காவிரி இரவல் நதி என்பதுதான். அதை வெளிப்படையாகச் சொல்லாமல் சூசகமாகச் சொல்கிறார்.

னும் தாழ்ந்த நிலைக்குத் தற்போது தமிழகத்தை தள்ளியிருக்கிறது உச்ச நீதிமன்றம். அதற்குப் பின்னரும் தண்ணீர் கிடைக்கவில்லை. இதனைத் தெரிந்து கொள்ள ராமசாமி ஐயர் இல்லை. அவர் சென்ற ஆண்டே இறந்து விட்டார்.

மேற்கண்ட விவரங்கள் பலருக்குத் தெரிந்திருக்க கூடியவைதான். இருந்த போதிலும் பூ என்றோ புட்டம் என்றோ நாம் சொல்வதைக் காட்டிலும், ஐயர் சொல்றா மாதிரி அதைச் சொல்லும்போதுதானே உலகம் அதை நம்புகிறது! எனினும் ராமசாமி ஐயர் கூறும் விசயங்கள் குறித்த அறிவு இருப்பதற்கான அறிகுறி எதுவும் சமஸின் எழுத்தில் தென்படவில்லை. ஆனாலும் தமிழ் சமூகத்துக்கு அறிவுரை கூறும் ''தகுதி'' தனக்கு இருப்பதாகவே அவர் கருது கிறார்.

> காவேரி ஒப்பந்தத்தில் மைசூர் அரசின் மீது அதிகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதற்கு காரணம் பிரிட்டிஷாரின் வலிமை அல்ல. மாறாக, ஆற்றின் தலைக்கட்டுப் பகுதியில் உள்ளவர்கள் மீதுதான் அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். சிந்து நதி விசயத்தில் பாகிஸ்தானைக் காட்டிலும் இந்தியா மீது கட்டுப்பாடு அதிகம்.

**தமிழகம் கர்நாடகத்தை ஆதிக்கம் செய்கிறதாம் – சொல்கிறார் சமஸ்!**

''இன்றைக்கு வரலாற்று நியாயங்களின் அடிப்படையிலேயே நமக்கான தண்ணீரைத் தர வேண்டும் என்று பேசுகிறோம். அந்த வரலாற்றின் அடிப்படை என்ன? அந்த நியாயத்தின் அடிப்படை என்ன? ஒருவகையில் அது ஆதிக்க வரலாறு; ஆதிக்க நியாயம்!'' என்கிறார்.

ஆதிக்க வரலாறு, ஆதிக்க நியாயம் என்ற சொற்றொடர்களைப் பார்த்துப் பயப்படவேண்டாம். பிரிட்டிஷ் அரசுக்கும் மைசூர் சமஸ்தானத்துக்கும் போடப்பட்ட ஒப்பந்தத்தைத்தான் அப்படி மிரட்டலான மொழியில் சொல்கிறார் சமஸ்.

''இப்படி ஒரு கருத்து கர்நாடக மாநிலத்தில் பரவலாக நிலவுகிறது என்ற போதிலும், 1924 ஒப்பந்தத்தைப் படித்துப் பார்க்கும்போது அது ஒரு நியாயமற்ற ஆவணமாகத் தெரியவில்லை. ஒப்பந்தத்தில் மைசூர் அரசின் மீது அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதற்கு காரணம் பிரிட்டிஷாரின் வலிமை அல்ல. மாறாக, ஆற்றின் தலைக்கட்டுப் பகுதியில் உள்ளவர்கள் மீதுதான் அதிக கட்டுப்பாடுகள் விதிக்கப்படும். சிந்து நதி விசயத்தில் பாகிஸ்தானைக் காட்டிலும் இந்தியா மீது கட்டுப்பாடு அதிகம். அதேபோல கங்கை விசயத்தில் வங்கதேசத்தைக் காட்டிலும் இந்தியா மீதுதான் கட்டுப்பாடு அதிகம். 1924-ல் கர்நாடகம் பாதிக்கப்பட்ட மாநிலம் என்று ஒரு வாதத்துக்கு வைத்துக் கொண்டாலும், அதற்குப் பின் காவிரியில் வரிசையாக அணைகளைக் கட்டி விட்டனர். இப்போது தமிழகம்தான் பாதிக்கப்பட்ட மாநிலம்!'' என்கிறார் ராமசாமி ஐயர்.

காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க முடியாது என அறிவித்துள்ள மோடி அரசைக் கண்டித்துத் தமிழகத்தில் நடந்த ரயில் போராட்டம்.



தமிழகத்தின் ''ஆதிக்க நியாயத்துக்கு'' எதிராக சமஸ் வெளிப்படுத்தும் ஆவேசம் கண்டு நிலை குலையாமல் இருக்க வேண்டுமானால் நமக்கு கொஞ்சம் புவியியல் ஞானம் தேவைப்படுகிறது. பல்வேறு ஆறுகள் உற்பத்தியாகின்ற மேற்குத் தொடர்ச்சி மலையின் கணிசமான பகுதி கர்நாடகத்தில் இருப்பதால், தமிழகத்தைக் காட்டிலும் பன்மடங்கு அதிக நீர்வளமிக்கது கர்நாடக மாநிலம்.

**தமிழகத்தைப் போல மூன்று மடங்கு நீர்வளம் கொண்டது கர்நாடகம்!**

தமிழகத்தின் ஆறுகள் ஏரிகள் குளங்கள் உள்ளிட்ட மொத்த நீராதாரங்களுக்கு ஓராண்டில் சராசரியாக கிடைக்கும் நீரின் அளவு - 853 டி.எம்.சி. இதில் வெளி மாநிலங்களிலிருந்து (காவிரி உள்ளிட்ட) ஆறுகள் மூலம் கிடைக்கும் நீரின் அளவு 243 டி.எம்.சி. வங்கக் கடலில் கலக்கும் நீரின் அளவு 177 டி.எம்.சி.

கர்நாடகத்துக்கு ஆறுகள் அளிக்கும் நீராதாரத்தின் அளவு 3,475 டி.எம்.சி. இவற்றில் மேற்கு நோக்கி ஓடி அரபிக்கடலில் கலக்கும் 13 ஆறுகளிலிருந்து ஓடும் நீரின் அளவு மட்டும் 2,000 டி.எம்.சி. இதில் கடலில் கலக்கும் நீரின் அளவு சுமார் 1,500 டி.எம்.சி. 3,475 டி.எம்.சியில் பாசனத்துக்குப் பயன்படுத்தப்படும் நீரின் அளவு 1,872 டி.எம்.சி.

கர்நாடகத்தின் பதினொரு பெரிய அணைகளின் கொள்ளளவு 705 டி.எம்.சி. தமிழகத்தின் பதினொரு பெரிய அணைகளின் கொள்ளளவு 190 டி.எம்.சி.

கர்நாடகத்தில் மேற்கு நோக்கி ஓடும் ஆறுகளில்

காவிரிப் பாசனப் பகுதிக்கு மிக அருகாமையில் ஓடும் ஆறுகள் தரும் நீரின் அளவு மட்டும் 923 டி.எம்சி. காவிரிப் பாசனப்பகுதி மாவட்டங்கள் பல வற்றுக்கு இவற்றைத் திருப்பி விட முடியுமென்று கூறுகிறார் தமிழக பொதுப்பணித்துறையின் முன்னாள் தலைமைப் பொறியாளர் சி.எஸ். சுப்புராஜ். இவ்வாறு அந்த ஆறுகள் சில வற்றை கிழக்கு நோக்கி திருப்புவதன் மூலம் சுமார் 142 டி.எம்.சி நீரை காவிரிப் பாசனப்பகுதிக்கு கொண்டு வருவதற்கான வரைவுத் திட்டத்தை 2002-இல் எஸ்.எம்.கிருஷ்ணா அரசு உருவாக்கியிருந்ததாக கூறுகிறார் **முன்னாள் கண்காணிப்புப் பொறியாளர் நடராசன்.**



மணற் கொள்ளை உள்ளிட்ட சகல விதமான கொள்ளைகளையும் தலைமை தாங்கி நடத்தும் அம்மா யார்? நாமா?

கர்நாடகத்தின் மக்கட்தொகை சுமார் 6.1 கோடி என்பதையும், தமிழகத்தின் மக்கட்தொகை சுமார் 7.21 கோடி என்பதையும் இந்த இடத்தில் நினைவிற் கொள்ள வேண்டும்.

எனவே கர்நாடகம் தனது பாசனப்பரப்பை அதிகரித்துக் கொள்வதற்கான நீராதாரத்தை வழங்காமல் தமிழகம் பறித்துக் கொள்வதைப் போல சமஸ் உருவாக்கும் சித்திரம் உண்மைக்கு மாறானது. பெங்களூருவைச் சேர்ந்த சமூகப் பொருளாதார ஆய்வுக்கழகம் 2013-இல் வெளியிட்ட ஆய்வறிக்கையின்படி பெங்களூருவின் குடிநீர்த் தேவைக்காக நாளொன்றுக்கு 140 கோடி லிட்டர் காவிரி நீர் எடுக்கப்படுகிறது. அதில் 48% நீர் வீணடிக்கப்படுகிறது. குடிநீரை வீணடிப்பதில் நாட்டிலேயே கல்கத்தாவுக்கு முதலிடம் (50%). பெங்களூருவுக்கு இரண்டாமிடம்.

இதைப்பற்றி கேள்வி எழுப்புவதற்கான தகுதி தமிழகத்துக்கு உண்டா, அல்லது ''கர்நாடகத்துக்குள்ளான'' நீராதாரம் பற்றி நாம் கேள்வி எழுப்பக் கூடாது என்று சமஸ் கூறுவாரா? மகாராட்டிரத்தில் உற்பத்தியாகி கர்நாடகம் ஆந்திரம் வழியாகச் சென்று வங்காள விரிகுடாவில் கலக்கும் கிருஷ்ணா நதி, எந்த ''மாநிலத்துக்குள்ளான'' நீராதாரம்? மகாராஷ்டிரத்துக்கு 666 டி.எம்.சி, கர்நாடகத்துக்கு 911 டி.எம்.சி, ஆந்திரத்துக்கு 1,001 டி.எம்.சி என்று கிருஷ்ணா நதி தீர்ப்பாயம் சமீபத்தில் தீர்ப்பு வழங்கியிருப்பதை சமஸ் அறிவாரா?

**காலையில் பெங்களூருவின் கழிவுநீர், மதியம் தமிழகத்தின் குடிநீர்!**

''காவிரி குடும்பம்'' என்ற முயற்சியின் அங்கமாக பலமுறை கர்நாடகத்துக்கு சென்று வந்துள்ள ரங்கநாதன், அங்கே புன்செய் நிலங்களில் கரும்பு போன்ற நன்செய் பயிர்களை வலியப் பயிர் செய்து, கோடையில் கூட ஏராளமான தண்ணீரை வீணடிப்பதாக கூறுகிறார். அங்கே பாசனப்பரப்பு பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. அதே நேரத்தில், காவிரி டெல்டாவின் நெல் உற்பத்தி 38 லட்சம் டன்னிலிருந்து 18 லட்சம் டன்னாக வீழ்ச்சியடைந்திருக்கிறது. கூலி விவசாயிகளுக்கு ஆண்டுக்கு 80 நாட்கள் மட்டுமே வேலை கிடைக்கிறது. இவை 2013-இல் ரங்கநாதன் கூறியவை. இன்று அதற்கும் வழியில்லாத நிலையை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம். நெல் விளைவதற்கு மட்டுமே ஏற்ற பகுதியான டெல்டாவில் மாற்றுப் பயிர்களைப் பற்றி யோசிக்குமாறும் நீர் மேலாண்மை சரியில்லை என்றும் அறிவுரை சொல்கிறார் சமஸ்.

பெங்களூருவின் கழிவு நீர் ஆண்டொன்றுக்கு 20 டி.எம்.சி, விருஷபாவதி ஆற்றில் விடப்பட்டு, காவிரி நீராக கணக்கிடப்பட்டு மேட்டூருக்கு அனுப்பப்படுகிறது. பெங்களூருவின் கழிவறைகளிலிருந்து காலையில் வெளியேற்றப்படும் கழிவு நீர், அன்று மதியம் நமக்கு குடிநீராக வந்து சேருகிறது என்று எழுதுகிறார் **சூழலியலாளர் நித்யானந்த் ஜெயராமன்.**

பெங்களூருவைச் சேர்ந்த சமூகப் பொருளாதார ஆய்வுக்கழகம் 2013இல் வெளியிட்ட ஆய்வறிக்கையின்படி, பெங்களூருவின் குடிநீர்த் தேவைக்காக நாளொன்றுக்கு 140 கோடி லிட்டர் காவிரி நீர் எடுக்கப்படுகிறது. அதில் 48% நீர் வீணடிக்கப்படுகிறது. குடிநீரை வீணடிப்பதில் நாட்டிலேயே கல்கத்தாவுக்கு முதலிடம் (50%). பெங்களூருவுக்கு இரண்டாமிடம்.

''விருஷபாவதி ஆற்றங்கரையில் புளியஞ்சாதம் சாப்பிட்ட சுகானுபவம்'' பற்றி தி.ஜானகிராமன் யாருக்காவது ''லட்டர்'' எழுதியிருந்தால், அந்த இலக்கியத்தை உடனே சமஸுக்கு அனுப்பி வையுங்கள். அப்புறமாவது கர்நாடகத்தின் தகுதி குறித்து அவர் கேள்வி எழுப்புகிறாரா பார்ப்போம்.

தமிழகம் 2000 ஆண்டுகளுக்கு முன்னால் அணை கட்டிவிட்டதாம், அவர்கள் முக்

கால் நூற்றாண்டுக்கு முன்னால் தான் அணை கட்டியிருக்கிறார்களாம். ''காலத்தால் முன்னேறிய மாநிலம், தங்களுடைய முன்னுரிமை தொடரவேண்டும் என்று பேசுவதுதான் சமூக நீதியா?'' என்று வருண சாதி ஆதிக்கம் செய்வோரின் இடத்தில் தமிழகத்தையும், ஒடுக்கப்பட்ட சாதியினரின் இடத்தில் கர்நாடகத்தையும் வைத்து சமூக நீதி அரசியலை தாக்குகிறார் சமஸ்.

புல்லரிக்கிறது! எச்.ராஜா, நாராயணன், ராகவன், சுமந்த் சி ராமன், மாத்ருபூதம், பெருமாள் மணி, பானு கோம்ஸ் உள்ளிட்ட அறிஞர்கள் அனைவரும் ரூம் போட்டு யோசித்திருந்தாலும் திராவிட இயக்கத்தை மடக்குவதற்கு இப்படி ஒரு கேள்வி அவர்களுடைய மூளையில் உதித்திருக்குமா?

கட்டுரையின் முடிவில் சமஸுடைய தத்துவஞானத்தின் ஒளி குமரியிலிருந்து காஷ்மீர் நோக்கி பரவத் தொடங்குகிறது.



கர்நாடகத்துக்கு ஆறுகள் அளிக்கும் நீராதாரத்தின் அளவு 3,475 டி.எம்.சி. இவற்றில் மேற்கு நோக்கி ஓடி அரபிக்கடலில் கலக்கும் 13 ஆறுகளிலிருந்து ஓடும் நீரின் அளவு மட்டும் 2,000 டி.எம்.சி.
படம்: மைசூருவில் ஓடும் காவிரி!

''இன்றைக்கு சிந்து நதி உடன்பாட்டில், பாகிஸ்தானுடனான பகிர்வை ஏன் மாற்றிப் பரிசீலிக்கிறோம்? வளரும் காஷ்மீரின் தேவைகளுக்கு ஏற்ப நமக்கான நீரை அதிகம் எடுத்துக் கொண்டு, பாகிஸ்தானுக்கான பகிர்வைக் குறைக்க வேண்டும் என்று எந்த நியாயத்தின் அடிப்படையில் பேசுகிறோம்? இன்றைக்கு இல்லாவிட்டாலும் நாளைக்கு இந்த நியாயமே கோலோச்சும்'' என்கிறார் சமஸ்.

துருக்கி யூப்ரடிஸ் நதியைத் தடுத்து இராக் மக்களைத் தவிக்க விட்டது போல, ஜோர்டான் நதியைத் தடுத்த இஸ்ரேல் பாலஸ்தீனியர்களைத் தவிக்கச் செய்ததைப் போல, சிந்து நதியைத் தடுப்பதும் நியாயமாம். ஆனால் அது பாகிஸ்தானை தண்டிப்பதற்காக இல்லையாம். காஷ்மீரை முன்னேற்றுவதற்காம்!

பாருங்கள்! மோடிக்கும் ராஜ்நாத் சிங்குக்கும் தெரியாத இரகசியம் சமஸுக்குத் தெரிந்திருக்கிறது.

''இந்தியா சிந்து நதியைத் தடுப்பது எப்படி நியாயமோ, அப்படி கர்நாடகம் காவிரியை தடுப்பதும் நியாயம்'' என்று விளக்குகிறார் சமஸ். எப்படியோ பாகிஸ்தானின் இடத்துக்கு தமிழ்நாட்டைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டார். சென்ற இதழ் (அக்டோபர் 2016) புதிய ஜனநாயகத்தின் தலையங்கம், ''பா.ஜ.க-வின் பாகிஸ்தானா தமிழ்நாடு?'' என்று கேள்வி எழுப்பியிருந்தது. ஆமாம் என்று அதற்கு பதிலளித்திருக்கிறார் சமஸ்.

> இந்தியா சிந்து நதியைத் தடுப்பது எப்படி நியாயமோ, அப்படி கர்நாடகம் காவிரியை தடுப்பதும் நியாயம் என்று விளக்குகிறார் சமஸ். எப்படியோ பாகிஸ்தானின் இடத்துக்கு தமிழ்நாட்டைக் கொண்டு வந்து நிறுத்தி விட்டார்.

அவருடைய கட்டுரையின் கடைசிப் பத்தி இப்படி முடிகிறது.

''அது காவிரியோ, கிருஷ்ணாவோ, முல்லைப்பெரியாறோ நதிநீர்ப் பகிர்வில் நமக்குள்ள உரிமைகள் தனி. அவற்றை நாம் பறிகொடுப்பதற்கில்லை. ஆனால் உரிமைகளைப் பேசுவதற்கான தார்மீகத் தகுதி தமிழினத்துக்கு இருக்கிறதா?''

இந்த வரிதான், சமஸ் யாரென்பதை அனைவருக்கும் அடையாளம் காட்டும் முத்திரை வாக்கியம். தொலைக்காட்சி விவாதத்தில் ''அக்லக்கை கொன்றது சரியா?'' என்று பா.ஜ.க நாராயணனிடம் நெறியாளர் கேட்டால், ''யாரைக் கொலை செய்தாலும் அதை நாங்கள் கண்டிக்கிறோம்'' என்று நாராயணன் பதில் சொல்வார். ஒரு சிறிய இடைவெளி விட்டு ''அக்லக் பசுமாட்டைக் கொன்றிருக்கிறாரே அதை கண்டிக்காத உங்களுக்கு என்னைக் கேள்வி கேட்கும் தகுதி இருக்கிறதா?'' என்று திருப்பியும் கேட்பார். இதுதான் சங்க பரிவார மூளை. சமஸின் மூளை.

''எந்தச் சமூகமாவது சாப்பாட்டுத் தட்டின் ஓரத்தில் கழிவுகளை வலிய எடுத்து வைத்துக்கொண்டு சாப்பிடுமா?'' என்று சமஸ் எழுப்பியிருக்கும் கேள்விக்கு நமது பதில் - சாப்பிடும், சமஸ் அவர்களே, சாப்பிடும்.

''சிந்து நதியைப் போல காவிரியைத் தடுப்பதும் நியாயமே'' என்று கூறும் உங்கள் எழுத்தை மூக்கைப் பிடித்துக் கொள்ளாமல் படிக்க முடிந்த தமிழ்ச் சமூகம், தனது தட்டின் ஓரத்தில் கழிவை வைத்துக் கொண்டு சாப்பிடுவதற்கா கூச்சப்படப் போகிறது?

● சூரியன்

## பத்திரிகை செய்தி

# மல்கான்கிரி போலிமோதல் கொலை: சொந்த நாட்டு மக்கள் மீது நடத்தப்பட்ட சர்ஜிக்கல் ஸ்டிரைக்!

கடந்த 24.10.2016 அன்று ஆந்திரா-ஒரிசா எல்லைப் பகுதியில் நடந்த தேடுதல் வேட்டையில் 28 மாவோயிஸ்டுகளைச் சுட்டுக் கொன்றுவிட்டதாக அறிவித்திருக்கிறார் ஆந்திர மாநில டி.ஜி.பி. சம்பாசிவராவ். ஒடிசா முதல்வர் காவல்துறைக்கு பாராட்டு தெரிவித்திருக்கிறார்.

மாவோயிஸ்டுகள் மீது சுற்றிவளைத்துத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், அவர்களும் திருப்பிச் சுட்டதாகவும் சொல்கிறது காவல்துறை. மாவோயிஸ்டுகளை முன்பே பிடித்துவைத்து நிராயுதபாணிகளான அவர்களை போலி மோதலில் போலீசு சுட்டுக் கொன்றுள்ளது என்று குற்றம்சாட்டியுள்ளார் எழுத்தாளர் வரவரராவ். மாவோயிஸ்டுகளுக்கு உணவு கொண்டு செல்பவர் மூலம் உணவில் நஞ்சு கலந்து அவர்களை வீழ்த்திவிட்டு, அதன் பின்னர் சுட்டுக் கொன்றிருப்பதாக மாவோயிஸ்டு அமைப்பினைச் சார்ந்த ஷ்யாம் அளித்துள்ள பத்திரிகைச் செய்தி கூறுகிறது.

துப்பாக்கிச் சண்டை எதுவும் நடக்கவில்லை, தூங்கிக் கொண்டிருந்த நிலையிலோ அல்லது செயலிழக்கச் செய்யப்பட்டிருந்த நிலையிலோதான் இவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். மேலும் சிலர் கைது செய்யப்பட்டு பின்னர் கொல்லப்பட்டிருக்கலாம். தனது உயிருக்கு ஆபத்து வரும்போதுதான், எவர் ஒருவரையும் சுட்டுக் கொல்லும் உரிமையை போலீசாருக்கு சட்டம் வழங்குகிறது. கைது செய்து வழக்கு நடத்தினால், தாங்கள் விரும்புகின்ற வகையில் அவர்களுக்கு எதிரான மரண தண்டனையை நிறைவேற்ற முடியாது என்ற காரணத்தினால்தான், தண்டனையைத் தாங்களே நிறைவேற்றுவதற்கு இத்தகைய படுகொலைகளை போலீசார் நடத்துகின்றனர்.

ஆந்திராஒரிசா எல்லைப் பகுதியில் மல்கான்கிரி எனுமிடத்தில் ஆந்திர போலீசு நடத்திய போலி மோதல் கொலையில் கொல்லப்பட்ட மாவோயிஸ்டுகளின் சடலங்கள்.



கொல்லப்பட்டவர்களில் எத்தனை பேர் மீது வழக்கு இருந்தது, அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள் என்ற கேள்விகள் எதற்கும் பதிலளிக்காமல், மாவோயிஸ்டு என்றாலே சுட்டுக் கொன்றுவிடலாம் என்பது எழுதப்படாத சட்டமாகி வருகிறது. மாவோயிஸ்ட் அமைப்பில் இருப்பதாலே ஒருவரைக் கைது செய்ய முடியாது, அவ்வாறு கைது செய்ததற்கு அரசு இழப்பீடு தரவேண்டும் - என சமீபத்தில் கேரள உயர் நீதிமன்றம் தீர்ப்புச் சொல்லியுள்ளது. இருந்தபோதிலும், இத்தகைய தீர்ப்புகள் விதிவிலக்குகள். மாஜிஸ்டிரேட்டுகள் கண்ணை மூடிக்கொண்டு எல்லா கைதிகளையும் ரிமாண்டுக்கு அனுப்புவது போல, மாவோயிஸ்டு என்றால் சுட்டு விடலாம் என்பதுதான் நீதித்துறையின் அணுகுமுறையாகவும் மாறி வருகிறது. ‘‘போலீசு என்கவுண்டர்களுக்கு கொலை வழக்கு பதிய வேண்டும்’’ என்ற தேசிய மனித உரிமை ஆணையத்தின் உத்தரவெல்லாம் குப்பைக் கூடையில்தான் எறியப்படுகிறது.

ஆயுதங்கள் வைத்திருந்தார்கள், தாக்க முயன்றார்கள் என்று சொல்லி தனது குற்றத்தை போலீசு நியாயப்படுத்துகிறது. இந்தியாவில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் துணை அமைப்புகள் வெளிப்படையாக ஆயுதப் பயிற்சிகளே அளிக்கிறார்கள்; சக இந்திய குடிமக்களைக் கலவரம் செய்து கொல்வதற்கும் பெண்களை வல்லுறவு செய்வதற்கும்தான் ஆயுதங்களைப் பயன்படுத்துகிறார்கள். போலீசுத்துறை அவர்கள் மீது எங்கேயும் எந்த நடவடிக்கையும் எடுத்ததில்லை.

மாறாக, மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்படக் காரணம், மத்திய இந்தியாவின் வனப்பகுதியிலிருந்து பழங்கு

டிகளை வெளியேற்றி விட்டு அவற்றை ஆக் கிரமித்து பல லட் சம் கோடி மதிப் புள்ள தாதுப்பொருட் களை இந்திய மற்றும் பன்னாட்டு முதலா ளிகள் கொள்ளைய டிப்பதற்கு உதவுவது தான். இந்திய அரசும், மாநில அரசுகளும் ஒப்பந்தங்கள் மூலம் அவற்றை ஏற்கனவே தாரைவார்த்து விட்ட போதிலும், அந்த ஒப்பந்தகளை நிறை வேற்ற மாவோயிஸ்டு கள் தடையாக இருப்ப துதான் அரசும் போலீ சும் அவர்கள் மீது இத்தகைய படுகொலைகளை நடத் துவதற்குக் காரணம்.



''பஸ்தார் கார்ப்பரேட்டுகளுக்குச் சொந்தமானதல்ல. பஸ்தார் எங்களின் பூமி'' என்ற முழக்கத்தை முன்வைத்து நிலப்பறிப்புக்கு எதிராக கூடூர் எனுமிடத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தும் பழங்குடியின மக்கள். (கோப்புப் படம்)

கொல்லப்பட்டவர்கள் யாரும் அந்நிய நாட்டு பயங் கரவாதிகள் அல்ல. மாறாக, ஆந்திர மாநிலம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள்தான். நாட்டின் இயற்கை வளங்களை கொள்ளையடிப்பதை எதிர்த்து நிற்கும் பழங்குடி மக்களின் போராட்டத்திற்கு உறுதுணையாக இருந்தவர்கள்தான். ஆனால், இத்த கைய அநீதியை கட்சிகளும் ஊடகங்களும் கண்டிக்க முன்வராதது இந்தியாவில் ஜனநாயகத்திற்கான வெளி மென்மேலும் சுருங்கி வருவதைக் காட்டுகிறது.

தாங்கள் சட்டத்தின் ஆட்சி நடத்தி வருவதாகவும், மாவோயிஸ்டு அமைப்பினர் சட்டத்தின் ஆட்சியில் நம் பிக்கை வைக்கவில்லை என்பதுதான், அவர்கள் மீது அரசு கூறும் குற்றச்சாட்டு. ஆனால், போலி மோதல் கொலை சம்பவங்களில் மட்டுமின்றி, தனது எல்லா நடவடிக்கைகளிலும் அரசும், போலீசும், நீதித்துறை யும், கட்சிகளும்தான் சட்டத்தை மீறி வரு கின்றன. ஜனநாயகத் துக்கு ஆபத்து என்று யார் கூச்சல் போடுகி றார்களோ, அவர்கள் தான் ஜனநாயகத்தைப் படுகொலை செய் யும் கொலையாளிக ளாக இருக்கின்றனர். சொந்த நாட்டு மக்கள் மீது நடத்தப்பட்ட அப் பட்டமான இந்தப் படு கொலையை மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம் வன்மையாகக் கண்டிக்கிறது.

கொல்லப்பட்ட போராளிகளில், மாவோயிஸ்டு அமைப்பின் தலை மைக்குழு உறுப்பினரான தோழர் ராமகிருஷ்ணாவின் மகனும் ஒருவர். தையல் வேலை செய்து வாழ்க்கை நடத்தி வரும் ராமகிருஷ்ணாவின் மனைவி பத்மா, மக் களுக்காகப் போராடி மடிந்த தனது மகனை எண்ணிப் பெருமை கொள்வதாகப் பேட்டியளித்திருக்கிறார். ஆனால், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்ட அரசியல் சட்டத்தின் மீது சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்ட மத்திய அமைச்சரோ, அக்லக் என்ற இசுலாமிய முதிய வரைக் கொலை செய்த கிரிமினலின் உடலுக்குத் தேசி யக் கொடி போர்த்தி மரியாதை செய்து கொண்டிருக் கிறார். இந்த நாட்டில் எளிய மக்களுடைய வாழ்வுரி மைகளும் ஜனநாயக உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையை பத்மாவைப் போன்ற தாய்மார்க ளிடமிருந்துதான் நாம் பெறவேண்டியிருக்கிறது.

**- சே.வாஞ்சி நாதன்,**
மாநில ஒருங்கிணைப்பாளர்,
மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையம்.

## 32-ஆம் ஆண்டில் புதிய ஜனநாயகம்

அன்பார்ந்த வாசகத் தோழர்களே,

இந்த இதழிலிருந்து புதிய ஜனநாயகம் 32-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. இந்த அரசியல் ஏடு தொடர்ந்து வெளிவர பலவகையிலும் உதவிவ ரும் வாசகர்களாகிய உங்களுக்கும், பல்வேறு இடர்ப் பாடுகளை எதிர்கொண்டு இந்த இதழை உழைக்கும் மக்களிடம் கொண்டுசெல்ல அயராது உழைத்துவ ரும் முகவர்கள் - விற்பனையாளர்களுக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நிலவுகின்ற அரசமைப்பும் அதன் கட்டுமானங் களும் முற்றிலும் அம்பலப்பட்டு தனிமைப்பட்டுப் போயுள்ள நிலையில், மக்கள் தமது சொந்த அதிகா ரத்தைச் செலுத்துவதற்கான தேவை இன்று முன்ன ணிக்கு வந்துள்ளதை விளக்கி, பரந்துபட்ட உழைக் கும் மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டும் மகத் தான கடமையை நிறைவேற்ற உங்களது உறுதியான ஆதரவுடன் 32-ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர்கிறோம்.

வாசகத் தோழர்கள் அனைவருக்கும் நூறாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் நவம்பர் -7 சோச லிசப் புரட்சி நாள் வாழ்த்துகள்!

-ஆசிரியர் குழு.

# தமிழக வழக்கறிஞர்கள் மீது வாழ்நாள் தடை ! வ.உ.சி.க்குப் பின்னர் இதோ, முதன்முறையாக!!

**தமிழக வழக்கறிஞர்கள் மீது வாழ்நாள் தடை ! வ.உ.சி.-க்குப் பின்னர் இதோ, முதன்முறையாக!! தங்களுடைய நடத்தையையும் தீர்ப்பையும் நியாயப்படுத்த முடியாத நீதிபதிகள், தம்மை அம்பலப்படுத்தும் தமிழக வழக்குரைஞர்களைக் குறுக்கு வழியில் ஒழித்துக்கட்டி வருகிறார்கள்.**

மதுரையைச் சேர்ந்த திரு.ஏ.கே.இராமசாமி, நெடுஞ்செழியன், வாஞ்சிநாதன், இராமமூர்த்தி, கருணாநிதி ஆகிய 5 வழக்கறிஞர்களுக்கு வாழ்நாள் முழுவதும் தொழில் செய்யத் தடையும், மேலும் எட்டு வழக்கறிஞர்களுக்கு மூன்று ஆண்டு தடையும் விதித்து செப் 16,2016 அன்று தீர்ப்பளித்துள்ளது கர்நாடக பார் கவுன்சில். சென்னையில் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் ஜிம்ராஜ் மில்டன், பார்த்தசாரதி ஆகியோருக்கு வாழ்நாள் தடையும், வழக்கறிஞர் மகேந்திரனுக்கு மூன்று ஆண்டுகள் தடையும் விதித்து தீர்ப்பளித்துள்ளது தமிழ்நாடு பார்கவுன்சில்.

இப்படி ஒரு தடையை பிரிட்டிஷ் ஆட்சி வ.உ.சி.-க்கு விதித்தது. தேசத்துரோக குற்றம் சாட்டப்பட்டு 40 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதால் வ.உ.சி.-யின் வழக்கறிஞர் உரிமத்தைப் பறித்தது பிரிட்டிஷ் நீதிமன்றம். அந்தக் காலத்திலேயே விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட மற்ற இந்திய வழக்கறிஞர்கள் மீது இத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. 1947-க்குப் பின்னர், இன்று வரை எந்த வழக்கறிஞர் மீதும் இத்தகையதொரு கொடிய நடவடிக்கையை அனைத்திந்திய பார் கவுன்சில் எடுத்ததில்லை.

தமிழக வழக்குரைஞர்களுக்கு எதிராக கர்நாடக பார் கவுன்சில் எடுத்துள்ள அநீதியான ஒழுங்கு நடவடிக்கையைக் கண்டித்துத் தமிழக வழக்குரைஞர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)




வழக்கறிஞர், மருத்துவர், தணிக்கையாளர் போன்ற தொழில்களுக்கான உரிமத்தினை வழங்குகின்ற / பறிக்கின்ற அதிகாரம் பார் கவுன்சில், மெடிக்கல் கவுன்சில் போன்ற அமைப்புகளுக்கே உண்டு இந்த அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான் சென்னை மதுரை வழக்கறிஞர்களைத் தண்டித்திருக்கிறது பார் கவுன்சில்.

நீதிபதி கிருபாகரனின் கட்டாய ஹெல்மெட் தீர்ப்பை எதிர்த்தும், நீதித் துறையின் ஊழல் தீர்ப்புகளை எதிர்த்துக் குரல் கொடுத்தார்கள் என்பது மதுரை வழக்கறிஞர்கள் மீதான குற்றச்சாட்டு. மதுரை வழக்கறிஞர்களுக்கு ஆதரவாக நீதிமன்றத்திற்கு வெளியில் முழக்கமிட்டார்கள் என்பது சென்னை வழக்கறிஞர்கள் மீதான குற்றச்சாட்டு. கொலை, கொள்ளை உள்ளிட்ட குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக சிறை வைக்கப்பட்ட வழக்கறிஞர்கள், நீதிபதிகளுக்கு சப்ளை அண்டு சர்வீஸ் செய்யும் வழக்கறிஞர்கள் போன்றோரை பார் கவுன்சில் எக்காலத்திலும் தண்டித்ததில்லை.

''நெறி பிறழும் வழக்கறிஞர்களை விசாரணையின்றி நீக்குவதற்கு நீதிபதிகளுக்கு அதிகாரம் உண்டு'' என்ற சர்வாதிகார சட்டத்திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு காரணமாக காட்டப்பட்ட ஆர்.கே ஆனந்த் வழக்கில் நடந்தது என்ன? சாட்சியை விலைபேச முயன்ற ஆர்.கே.ஆனந்த் என்ற மூத்த வழக்கறிஞருக்கு உச்ச நீதிமன்றம் விதித்த ''தண்டனை'' ஒரே ஒரு ஆண்டு காலத்துக்கு கட்டணம் வாங்காமல் தொழில் செய்ய வேண்டுமென்பதுதான். ஊழலை எதிர்த்த தமிழக வழக்கறிஞர்களோ ஓராண்டு காலமாக விசாரணையே இல்லாமல் தற்காலிக நீக்கம் செய்யப்பட்டார்கள். இப்போது அவர்களுக்கு வாழ்நாள் தடை!

முன்னுக்குப் பின் முரணான, அபத்தமான, சட்ட விரோதமான தீர்ப்புகளை நீதிபதிகள் வழங்குவது

இன்று சகஜமாகிவிட்டது. எது முட்டாள்தனமான தீர்ப்பு, எது ஊழல் தீர்ப்பு என்று பிரித்தறிய முடியாத வண்ணம் நீதித்துறை முழுவதும் குமாரசாமிகள் நிரம்பியிருக்கிறார்கள் என்பது நாடறிந்த உண்மை. உயர்நீதிமன்ற உச்ச நீதிமன்ற நீதிபதிகளில் 50% பேர் ஊழல் பேர்வழிகள் என்று பகிரங்கமாக பல ஓய்வு பெற்ற நீதிபதிகள் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். ஆனால் எந்த ஊழல் நீதிபதியும் தண்டிக்கப்பட்டதில்லை. நீதித்துறை ஊழலை எதிர்ப்பது ஒவ்வொரு வழக்கறிஞரின் கடமை என்று பார் கவுன்சில் விதிகளே கூறுகின்றன. கிரானைட் வழக்கு மற்றும் தாதுமணல் வழக்கு களில் முறைகேடாக வழங்கப்பட்ட தீர்ப்புகளை வீதிக்கு கொண்டுவருவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில்தான் மதுரையில் ஊழல் எதிர்ப்பு பேரணி நடத்தினார்கள் வழக்கறிஞர்கள்.





தமிழக பார் கவுன்சில் மூன்று வழக்குரைஞர்களுக்கு எதிராக எடுத்துள்ள ஒழுங்கு நடவடிக்கையைக் கண்டித்து ஒட்டப்பட்ட சுவரொட்டி.

தங்களுடைய நடத்தையையும் தீர்ப்பையும் நியாயப்படுத்த முடியாத நீதிபதிகள், குற்றம் சாட்டுபவர்களை குறுக்ஃகு வழியசில் ஒழித்துக் கட்டி விட்டார்கள். ஊழல் அரசியல்வாதிகளும் போலீசும் தங்களை எதிர்ப்பவர்களை நேரடியாகத் தாக்காமல், கூலிப்படையை ஏவிக் கொல்வது போல, பார் கவுன்சிலை ஏவி வழக்கறிஞர்களைப் ''போட்டுத் தள்ளிவிட்டார்கள்'' நீதியரசர்கள்.

விசாரணை என்பது ஒரு நாடகம் போல நடத்தப்பட்டது. வழக்கறிஞர் சட்டத்தின் படி, ''குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும்''. ஆனால் யாருக்கெதிராகவும் குற்றம் அவ்வாறு நிரூபிக்கப்படவில்லை. எடிட் செய்யப்பட்ட வீடியோக்கள் ஆதாரமாக காட்டப்பட்டன. ஆனால், மின்னணு சாட்சியங்கள் தடயவியல் ஆய்வுக்குப் பின்னரே ஏற்கப்படவேண்டும் என்ற விதி பின்பற்றப்படவில்லை. தண்டிக்கப்பட்ட வழக்கறிஞர்கள் அடையாளம் காட்டப்படவில்லை.

தமிழக வழக்குரைஞர்களுக்கு எதிரான அநீதியான போரை நடத்தும் சர்வாதிகாரிகள்: தலைமை நீதிபதி கவுல் (இடது) மற்றும் நீதிபதி ராமசுப்பிரமணியன்.





தலித் மக்களுக்கு எதிரான நிலப்பிரபுத்துவ சாதி ஆதிக்கப் பஞ்சாயத்துகளில் கூட, நடுநிலை கடைப்பிடிக்கப்படுவதைப் போன்ற தோற்றத்தை ஏற்படுத்தும் முயற்சி இருக்கும். இங்கேயோ, பார் கவுன்சிலின் விசாரணை நடக்கும்போதே, யார் யாரை எப்படி தண்டிக்க வேண்டும் என்று, தனது தீர்ப்பொன்றில் வெளிப்படையாகவே வழிகாட்டினார் உயர்நீதிமன்ற நீதிபதி இராமசுப்பிரமணியம். அது மட்டுமல்ல, ''ஆந்திரத்துக்கு மாற்றலாகிச் சென்றாலும் அங்கிருந்து தலைமை நீதிபதி கவுலுடன் தொடர்பு கொள்வேன். அங்கிருந்தே தாக்குவேன்'' என்று பொது மேடையிலேயே பிரகடனம் செய்தார்.

''எங்க கிட்டயே சட்டம் பேசுறியா'' என்று கேட்கும் போலீசாரைப் போல, ''நீதிபதி கிட்டயே சட்டம் பேசுறியா'' என்று முண்டா தட்டினார்கள் நீதியரசர்கள். இருந்தாலும் வழக்கறிஞர் சமூகம் பணியவில்லை. இரண்டு மாதங்களுக்கும் மேலாகத் தொடர்ந்த வழக்கறிஞர் போராட்டத்தில் தலைமை நீதிபதி கவுல், ராமசுப்பிரமணியம், இவர்களின் கையாளாக செயல்பட்ட தமிழக பார்கவுன்சில் தலைவர் செல்வம் மற்றும் பிரபல நீதித்துறை தரகர் பிரபாகரன், அனைத்திந்திய பார் கவுன்சில் தலைவர் மனன் குமார் மிஸ்ரா உள்ளிட்ட தங்கள் எதிரிகளை வழக்கறிஞர்கள் அடையாளம் கண்டார்கள். உயர்நீதிமன்ற முற்றுகைப் போராட்டத்தின் மூலம், நீதித்துறையின் போலி கவுரவத்தை வழக்கறிஞர் சமூகம் வீதிக்கு கொண்டு வந்தது.

நீதிபதிகளாகத் தெரிவு செய்யப்படுவோருக்கு அதற்குரிய தகுதிகள் எதுவும் கிடையாது என்ற போதிலும், வழக்கறிஞர்கள் எனப்படுவோர் கவுரவம் சிவாஜியைப் போல இருக்க வேண்டும் என்பது ஆளும் வர்க்கத்தினரின் கருத்து. அவ்வாறின்றி தமிழக வழக்கறிஞர்கள் காவிரி, முல்லைப் பெரியாறு, கூடங்குளம், மூவர் தூக்கு, ஈழம் என்று எல்லா அரசியல் சமூகப் பிரச்சினைகளுக்காகவும் போராடுகிறார்கள். ஜே.என்.யு. மாணவர்களைத் தாக்கிய பாட்டியாலா வழக்கறிஞர்கள் ஆதிக்க சாதி இந்து வெறியர்கள் என்றால், தமிழக வழக்

கறிஞர்கள் அதற்கு எதிராக குரல் கொடுப்பவர்களாக இருக்கிறார்கள். நீதித்துறை ஊழலுக்கு எதிரான போராட்டம் என்பது அவர்களது போராட்டப் பண்பின் ஒரு விளைவு.

வாழ்நாள் தடை என்ற நடவடிக்கையின் மூலம் வழக்கறிஞர்களை நிரந்தரமாக ஒடுக்கி விடலாம் என்பது நீதித்துறையை ஆட்டிப்படைக்கும் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனக் கும்பலின் கனவு. தண்டிக்கப்பட்டிருப்போரில் நான்கு பேர் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் செயல்வீரர்கள். வினவு தளத்திற்கு வாஞ்சிநாதன் அளித்த பேட்டிதான் அவருக்கு எதிரான முக்கியமான குற்றச்சாட்டு. ''சீப்பை ஒளித்து விட்டால், கல்யாணத்தை நிறுத்தி விடலாம்'' என்று கனவு காண்கிறார்கள் இந்த நடவடிக்கையின் சூத்திரதாரிகளான நீதிபதிகள்.

முன்னணியாளர்கள் சிலரை வேட்டையாடுவதன் மூலம் நீதித்துறையின் முகத்திரை கிழியாமல் பாதுகாக்க முடியாது. அது ஏற்கெனவே கிழிந்து தொங்குகிறது. நீதித்துறை வழியாக நியாயம் கிடைக்கும் என்ற பிரமை, புத்தி சுவாதீனம் உள்ள தமிழக வழக்கறிஞர்கள் யாருக்கும் கிடையாது. அந்த பிரமை தகர்ந்து விட்டது என்பதற்கான நிரூபணம்தான் சமீபத்திய வழக்கறிஞர் போராட்டம்.

சட்டத்திருத்தத்தின் மூலம் அந்தப் போராட்டத்தை தூண்டிய பெருமை நீதியரசர்களுக்கே உரியது என்பதை யாரேனும் மறுக்க முடியுமா? மர்மமான முறையில் பதவிக்கு வந்த நீதிபதிகள் நேர்மையான முறையில் நடக்க முடியாது. விசாரணைக்கு அப்பாற்பட்டவர்களாக விளங்கும் நீதிபதிகள், நீதிமான்களாகவும் இருக்க முடியாது. வழக்கறிஞர் சமூகம், நீதித்துறையின் யோக்கியதையை வீதியில் பேச வேண்டிய நிலைமையை நீதியரசர்களே உருவாக்குவார்கள். இது வெறும் நம்பிக்கை யல்ல. கொழுத்துவிட்ட நண்டு வளையில் தங்குவது இயலாது என்பது விதி.

● தொரட்டி

# மரபீனிக் கடுகு: இந்திய உணவுச்சந்தையைக் கைப்பற்றத் துடிக்கும் வல்லரசுகளின் இன்னுமொரு ஆயுதம்!

**2002-இல் பி.டி.பருத்தி, 2009-இல் பி.டி.கத்திரிக்காய், ஆகியவற்றைத் தொடர்ந்து தற்போது 2016-இல் மரபீனிக் கடுகு வந்திருக்கிறது!**

2002-இல் பி.டி.பருத்தி, 2009-இல் பி.டி.கத்திரிக்காய், ஆகியவற்றைத் தொடர்ந்து தற்போது 2016-இல் மரபீனிக் கடுகு வந்திருக்கிறது!

டெல்லி பல்கலைக் கழகத்தின் ''தாவரங்களின் மரபியல் ஆராய்ச்சி''ப் பிரிவைச் சேர்ந்த பேராசிரியர் பெண்டல் மற்றும் அவரது குழுவினர், DMH-11 (DHARA MUSTARD HYBRID-11) எனப்படும் மரபீனிக் கடுகுப் பயிரை, தங்கள் கண்டுபிடிப்பு என உரிமை கொண்டாடி, வர்த்தகப் பயன்பாட்டுக்கு அனுமதிகோரி மத்திய அரசிடம் விண்ணப்பித்துள்ளனர்.

மரபீனிப் பயிர்களை நம் நாட்டில் அனுமதிப்பதா, வேண்டாமா? என்பதை தீர்மானிக்கும் அதிகார அமைப்பான ''மரபணு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு'' (GEAC), மரபீனிக் கடுகு பற்றி முடிவெடுக்க, தனியாக ஒரு தொழில்நுட்ப வல்லுநர் குழுவை நியமித்தது. இத்துணைக் குழு ''மரபீனிக் கடுகுப் பயிரை நம் நாட்டில் பயிரிட அனுமதிக்கலாம்'' என பரிந்துரை செய்துள்ளது. மனிதனுக்கோ,விலங்குகளுக்கோ எவ்வித ஆபத்தும் இல்லை என மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகமும் அறிவித்து விட்டது. ஆனால், பல்வேறு தரப்பிலி

மரபு மாற்று விதைகள், உணவுப் பொருட்களை உற்பத்தி செய்யும் பன்னாட்டு நிறுவனங்களை இந்தியாவிலிருந்து வெளியேறக் கோரித் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் தலைநகர் டில்லியில் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)



கடுகும் பாரம்பரிய முறையில் தயாரிக்கப்படும் கடுகு எண்ணெயும்.

ருந்தும் கடுமையான எதிர்ப்பலைகள் கிளம்பியதை அடுத்து, கடந்த 24.6.2016-இல் இந்தியாவில் பயிரிடு வதற்கு அனுமதிக்கும் முடிவை தற்காலிகமாகத் தள்ளி வைத்துள்ளது ''மரபணு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு''(GEAC).

ஏற்கெனவே நாடு முழுவதும் எழுந்த விவசாயிக ளின் எதிர்ப்பின் காரணமாக பி.டி.கத்திரியை மத்திய அரசு நிரந்தரமாகத் தடை செய்துள்ள நிலையில், அடுத் தடுத்து மரபீனிப் பயிர்களுக்கான ஆராய்ச்சிகள் தொடர் வதற்கு காரணம் என்ன? இந்த ஆராய்ச்சிக்கு பல்லாயி ரம் கோடிகளை முதலீடு செய்யும் பன்னாட்டு நிறுவ னங்களின் நோக்கம் என்ன?

மரபீனிக் கடுகு என்பது மண்ணில் இயற்கையாக உயிர்வாழும் ''பேசில்லஸ் அமைலொ லிக்யுபாசி யன்ஸ்'' *(bacillus amyloliquefaciens)* என்ற பாக்டீரி யாவிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 'பர்னாஸ்', 'பர்ஸ் டர்', மற்றும் 'பார்' ஆகிய மூன்று ஜீன்களை உள்ளடக் கியது. இதில் பர்னாஸ் ஜீன், ஆண் பூக்களின் வளர்ச்சி யைத் தூண்டக்கூடியது. பர்ஸ்டர் ஜீன், தாய் தாவரத்தில் உள்ள ஆண் மலட்டுத்தன்மையை தடுத்து பெண்பூக்க ளின் வளர்ச்சியை அதிகரிக்கும். பார் ஜீன், என்பது குளு ஃபோசினேட் *(glufocinate)* என்ற களைக் கொல்லியை எதிர்த்து கடுகுப்பயிர் வளர்வதற்கு உதவும். இம்மூன்று ஜீன்களையும் ஒன்றாக இணைத்து DMH-11 என்ற மரபீ னிக் கடுகுப்பயிரை உருவாக்கி யுள்ளார்கள்.

**களவாணிளும்-கைக்கூலிகளும்!**

மரபீனிக் கடுகுக்கு டெல் லிப் பல்கலைக்கழகப் பேரா சிரியர் பெண்டால் குழுவினர் உரிமைக் கொண்டாடினாலும், ஏற்கெனவே, இது, ''2002-இல் பேயர் நிறுவனத்தின் ப்ரோ- அக்ரோ விதைக்கம்பெனி உரு வாக்கிய மரபீனிக் கடுகின் தொழில்நுட்பம்தான்'' என்று பல சமூகவியலாளர்கள் அம்பலப்படுத்துகிறார்கள். மேலும், இந்த பெண்டால் கருத்து திருட்டுக்காகவும், தொழில்நுட்ப திருட்டுக்காவும் ஏற்கெனவே சிறைத் தண்டனை பெற்றவர் என்பதும் அமபலமாகியுள்ளது! கண்டுபிடிப்பாளர்களே திருடர்கள் என்றால், இதற்குப் பரிந்துரை செய்த துணைக்குழு உறுப்பினர்கள் கைக்கூ லிகளாகத்தானே இருக்க முடியும்.

- கே.வேலுத்தம்பி துணைக்குழுவின் தலைவ ரான இவர், ராக்ஃபெல்லர் அறக்கட்டளையின் நிதியுத வில் நடைபெறும் நோய்தாக்குதலை எதிர்த்து வளரும் மரபீனி அரிசி ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்.

- எஸ்.ஆர்.ராவ் - சைன்ஜென்டா நிறுவனத்தின் நிதியுதவியில் நடைபெறும் தங்க அரிசி ஆராய்ச்சியில் பணிபுரிந்து வருபவர்.

- பி.செசிகெரன் - பேயர், மான்சாண்டோ, பி.எ. எஸ்.எஃப்.போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் உறுப்பி னராக உள்ள 'சர்வதேச வாழ்வியல் அறிவியல் கழக'த் தின் உறுப்பினர். மத்திய அரசின், தேசிய ஊட்டச்சத்து நிறுவனத்தின் (NIN) முன்னாள் இயக்குனர்.

இவர்களைப் போன்ற, பன்னாட்டு நிறுவனங்களின் கைக்கூலிகளின் கையில்தான், நமது தாவரங்களின் மர பியல் ஆய்வுகளும், எதிர்கால விவசாயமும் சிக்கியுள் ளது.

> ஊடுருவித் தாக்கும் மரபணு தொழில்நுட்பம் ஒரு நாட்டின் தட்பவெப்ப சூழலுக்கு ஏற்ப உருவாகி வளர்ந்த மரபணுப் பயிர்களை அழித்து, அந்நாட்டின் பல்லுயிர் தன்மையை ஒழித்துக்கட்டிவிடும். ஒருமுறை இத்தகைய மாற்றம் நடந்துவிட்டால், அதன் பிறகு எப்போதுமே அதை மீட்டெடுக்கவே முடியாது.

**மரபீனிக் கடுகின் இலக்கு இந்தியா வின் எண்ணெய்ச் சந்தை!**

அறிவியல் ரீதியாகவே மர பணு தொழில்நுட்பம் ஆபத் தானது என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. ''ஊடுரு வித் தாக்கும் மரபணு தொழில் நுட்பம் ஒரு நாட்டின் தட்ப வெப்ப சூழலுக்கு ஏற்ப உரு வாகி வளர்ந்த மரபணுப் பயிர் களை அழித்து, அந்நாட்டின் பல்லுயிர் தன்மையை ஒழித்துக்

கட்டிவிடும். ஒருமுறை இத்தகைய மாற்றம் நடந்துவிட்டால், அதன் பிறகு எப்போதுமே அதை மீட்டெடுக்கவே முடியாது'' என்று அறிவியலாளர்களே அலறுகிறார்கள்.

''மனித உடல்நலனுக்கு கேடு விளைவிக்கும். இயற்கையின் சமநிலை சீர்குலையும். நிலமும் நீரும் நஞ்சாகிவிடும். இதனால் சுற்றுச்சூழல் கடுமையாக பாதிக்கப்படும். குளுஃபோசினேட் களைக்கொல்லியை தொடர்ந்து பயன்படுத்துவதால் எதற்கும் கட்டுப்படாத வீரிய களைச்செடிகள் உருவாகும்'' என்று உலகம் முழுக்க சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எச்சரிக்கிறார்கள்!




கனடாவின் செர்ப்ரூக் பல்கலைக்கழக மருத்துவ மையத்தின் மருத்துவர்கள் சமீபத்திய ஆய்வில் அமெரிக்காவில், மரபீனி சோளம் பயிராகும் பகுதியில் வாழும் 93% கர்ப்பிணிப் பெண்களின் ரத்தத்தில் பி.டி. மரபீனியின் விஷம் பரவி இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

கனடாவின் செர்ப்ரூக் பல்கலைக்கழக மருத்துவ மையத்தின் மருத்துவர்கள் சமீபத்திய ஆய்வில் அமெரிக்காவில், மரபீனி சோளம் பயிராகும் பகுதியில் வாழும் 93% கர்ப்பிணிப் பெண்களின் ரத்தத்தில் பி.டி. மரபீனியின் விஷம் பரவி இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

எல்லாவற்றுக்கும் மேலாக, இந்திய மரபணுப் பொறியியலின் தந்தை என்று கருதப்படும் டாக்டர் புஷ்ப பார்கவா, ''மரபணுக் கடுகு தொடர்பான ஆய்வில் பல ஓட்டைகள் உள்ளன. உயிரிப் பாதுகாப்பு சோதனைகள்(BIO SAFTY) போதாது. ஒழுங்குமுறை/ கட்டுப்பாடு சரியில்லை'' என்று குற்றம் சாட்டுகிறார்.

ஆனால் பன்னாட்டு நிறுவனங்களோ, தமக்கு லாபம் ஈட்டித்தராத எந்த அறிவியலையும் (இயற்கை, சுற்றுச்சூழல், விவசாயம் பற்றிய அறிவியலை) கண்டு கொள்வதில்லை. அவர்களின் ஒரே குறிக்கோள் சந்தையும், லாபமும்தான். மரபீனிக் கடுகின் இலக்கு இந்திய சமையல் எண்ணைச் சந்தை.

**கடுகு விவசாயம்**
**– ஒரு பார்வை**

இந்தியாவின் தெற்கு, மேற்கு மாநிலங்களில் கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவை முக்கிய சமையல் எண்ணெயாக பயன்படுவது போல, வடக்கு, கிழக்கு மாநில மக்கள் பாரம்பரியமாக கடுகு எண்ணெயைத்தான் சமையலுக்கு பயன்படுத்தி வருகிறார்கள். ராஜஸ்தான், ம.பி., அரியானா, உ.பி. மாநிலங்களில் அதிகளவில் கடுகு விவசாயம் நடக்கிறது. பெரும்பாலும் மானாவாரி நிலங்களிலும், சில இடங்களில் சிறு விவசாயிகளால் கோதுமையின் ஊடுபயிராகவும் கடுகு பயிரிடப்படுகிறது. இவ்வாறு நாடு முழுவதும் சுமார் 60.36 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டு ஆண்டுக்கு 80 லட்சம் டன் கடுகு அறுவடையாகி வருகிறது. பெரும்பாலும் பாரம்பரிய

சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் முன் மரபீணி கடுகுக்கு எதிராக டெல்லியில் நடந்த ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)



முறையிலான எண்ணெய் பிழியும் 7000 முதல் 9000 வரையிலான தொழில்கூடங்களில்தான் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. மிகக் குறைந்த அளவிலேயே நவீன தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்ய்யப்படுகிறது.


**உற்பத்தியும் இறக்குமதியும்**

இயல்பில், அதிக காரநெடியும், பிசுபிசுப்புத் தன்மையும் கொண்ட கடுகு எண்ணெயில் இதய நோய்க்குக் காரணமான கரையாத கொழுப்புகளைக் கரைக்கும் வேதியியல் பொருள்கள் உள்ளன என இந்திய கடுகு ஆராய்ச்சி நிறுவனம் கூறுகிறது. இதன் புண்ணாக்கு கால்நடைத் தீவனமாகவும், இலைகள் மக்களின் கீரை உணவாகவும் பயன்படுகிறது. மக்களின் இந்த பாரம்பரிய உணவுப் பழக்கத்தை 1990-இல் கொண்டுவரப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கை தலைகீழாய் புரட்டிப் போட்டுவிட்டது.

**பன்னாட்டுக் கம்பெனிகளின் காவல் நாயாக மத்திய அரசு!**

''உள்நாட்டு உணவுப்பொருள் உற்பத்தியைக் குறைத்து, தாராள இறக்குமதியை ஊக்குவிப்பது'' என்ற மக்கள்விரோதக் கொள்கையை மத்திய அரசு நடைமுறைப்படுத்தியதால், பாமாயில், சோயா எண்ணைகளை பன்னாட்டுக் கம்பெனிகள் இந்தியச் சந்தையில் இறக்கிவிட்டன. 1998-இல் சர்வதேச சந்தையில் ஒரு டன் 150 டாலருக்கு விற்ற சோயா எண்ணெய்க்கு, அமெரிக்கா 190 டாலர் மானியம் கொடுத்து தனது எண்ணெய் நிறுவனங்களின் ஏற்றுமதியை ஊக்குவித்தது. ஏசியான் நாடுகளுடன் இந்தியா செய்து கொண்டுள்ள சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தைப் பயன்படுத்திக் கொண்டு மலேசியா, இந்தோனேசியா நாடுகள் மிகக் குறைந்த விலையில் பாமாயிலைக் கொண்டுவந்து குவித்தன. இதனால் உள்நாட்டு சமையல் எண்ணெய்கள் விலையிழந்து, எண்ணெய் வித்து உற்பத்தி செய்யும் விவசாயமும் அழியத் தொடங்கிவிட்டது. இத்துடன், நிறம், வாசனை, ருசியற்ற சோயா, பாமாயில் எண்ணெய்களை நம் உள்நாட்டு எண்ணெய்களுடன் எளிதாகக் கலந்து விற்கும் கலப்பட எண்ணெய் மோசடிகளும் அதிகரித்தது.

நமது நாட்டின் சமையல் எண்ணெயின் ஒரு வருடத் தேவை சுமார் 217 லட்சம் டன். இதில் உள்நாட்டு உற்பத்தி 89.78 லட்சம் டன். மீதி 127.31 லட்சம் டன் இறக்குமதி செய்யப்படுகிறது. (அட்டவணை ) அதாவது, உள்நாட்டின் 68% தேவைக்கு அந்நிய நாடுகளை நம்பியே இருக்க வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 80,000 கோடி ரூபாயை சமையல் எண்ணை இறக்குமதிக்காக மத்திய அரசு செலவிடுகிறது.



''மரபணுக் கடுகு தொடர்பான ஆய்வில் பல ஓட்டைகள் உள்ளன'' எனக் குற்றஞ் சுமத்திய இந்திய மரபணுப் பொறியியல் விஞ்ஞானி டாக்டர் புஷ்ப பார்கவா.

நமது நாட்டின் சமையல் எண்ணெயின் ஒரு வருடத் தேவை சுமார் 217 லட்சம் டன். இதில் உள்நாட்டு உற்பத்தி 89.78 லட்சம் டன். மீதி 127.31 லட்சம் டன் இறக்குமதி செய்யப்படுகிறது. அதாவது, உள்நாட்டின் 68% தேவைக்கு அந்நிய நாடுகளை நம்பியே இருக்க வேண்டிய அவல நிலையில் இந்தியா இருத்தப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு 20% என அதிகரித்து வரும் இறக்குமதிச் சந்தையை முழுமையாக பன்னாட்டு நிறுவனங்களுக்கு தாரைவார்க்கும் நோக்கத்திற்காகவே தனது உள்நாட்டு எண்ணெய் வித்து விவசாயத்தை திட்டமிட்டு ஒழித்துக்கட்டி வருகிறது மத்திய அரசு.

2005-06-இல் உள்நாட்டின் சமையல் எண்ணெய் உற்பத்தி 83.16 லட்சம் டன்னாக இருந்தது. ஒன்பதாண்டுகள் முடிவில் 2014-15-இல் சுமார் 5 லட்சம் டன்கள் மட்டுமே உயர்ந்து 89.78 லட்சம் டன்னாக இருந்தது. இதே காலத்தில் சமையல் எண்ணெய்யின் இறக்குமதி 40.91 லட்சம் டன்னிலிருந்து 127.31 லட்சம் டன் - என மூன்று மடங்காக உயர்ந்துவிட்டது. பன்னாட்டுக் கம்பெனிகளின் காவல் நாயாக மத்திய அரசு செயல்படுவதை, மேற்கண்ட மத்திய வேளாண்மை அமைச்சகத்தின் புள்ளி விவரங்களே நிரூபிக் கின்றன.

''பூச்சி, நோய் தாக்குதல் இல்லாதது'', ''25% அதிக விளைச்சல் திறன்'' என்ற வழக்கமான விளம்பரங்களுடன் வரும் மரபீனிக் கடுகுப் பயிரைவிட கூடுதல் விளைச்சல்தரும் உள்நாட்டுரகங்கள் ஏற்கெனவே நடைமுறையில் இருப்பதைக்கூட புறக்கணித்துவிட்டு, மரபீனிக் கடுகை அனுமதிக்க முயல்வது, உள்நாட்டு விவசாயிகளுக்கு மத்திய அரசு செய்யும் பச்சைத் துரோகம். கடுகு எண்ணெய்ச் சந்தையை, பன்னாட்டு நிறுவனங்களுக்கும், இறக்குமதி எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ருச்சி, காத்ரெஜ், அதானி, ரிலையன்ஸ் போன்ற உள்நாட்டு முதலாளிகளுக்கும் தாரைவார்த்துக் கொடுக்கும் சதி.

மோடியே பன்னாட்டு நிறுவனங்களின் மரபணுக்களால் உருவாக்கப்பட்ட ஒரு வீரிய ரகம்தான். இதனுடன் 'இந்துத்துவா' மரபணுவை சற்று தூக்கலாக பிணைத்துவிட்டால் கிடைப்பதுதான் 'இந்தியாவின் வீரிய வளர்ச்சி'! இப்போது சொல்லுங்கள், மோடி வளர்ச்சியின் நாயகனா, இல்லையா?

● **மாறன்,** வி.வி.மு; கம்பம்.

# சிங்கூர் தீர்ப்பு:
# விவசாயிகளுக்குக் கிட்டிய வெற்றியா?

**பொதுப் பயன்பாடு என்ற போர்வையில் தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களுக்காக விளைநிலங்கள் கையகப்படுத்தப்படுவதை ரத்து செய்யாமல், மொன்னைத்தனமான தீர்ப்பை அளித்திருக்கிறது, உச்சநீதி மன்றம்.**

மே.வங்கத்தின் சிங்கூரில் டாடாவின் நானோ கார் திட்டத்துக்காக விவசாயிகளிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்களை 12 வாரங்களுக்குள் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்க வேண்டுமென கடந்த ஆகஸ்டு 31-ஆம் தேதியன்று உச்ச நீதிமன்றத்தின் இரு நீதிபதிகளைக் கொண்ட அமர்வு தீர்ப்பளித்துள்ளது. பத்தாண்டுகளுக்கு முன்பு சிங்கூர் விவசாயிகளிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்கள் அவர்களுக்குத் திரும்பக் கிடைத்துள்ளபோதிலும், நாடு தழுவிய அளவில் முக்கியத்துவம் பெற்ற சிங்கூர் விவசாயிகளின் போராட்டம் எழுப்பிய மையமான கேள்விக்கு நீதித்துறை இதுவரை விடையளிக்கவில்லை. சிங்கூர் விவசாயிகளின் போராட்டமானது தனது அரசியல் நோக்கத்தை நிறைவேற்ற முடியாமல்போயுள்ளதோடு, அப்போராட்டத்தைச் சட்டவாதத்தில் மூழ்கடிப்பதுதான் இப்போது நடந்துள்ளது.

சிங்கூர் நிலப்பறிப்புக்கு எதிரான வழக்கானது இரண்டு முக்கிய விவகாரங்களைக் கொண்டதாகும். ஒன்று, போலி கம்யூனிச இடதுசாரி அரசாங்கம் டாடாவின் நானோ கார் திட்டத்திற்காக விவசாயிகளின் நிலங்களை ஆக்கிரமித்ததைப் பற்றியது. இரண்டாவது, விவசாயிகளின் போராட்டத்தைத் தனது அரசியல் ஆதாயத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டு 2011-இல் ஆட்சிக்கு வந்த மம்தா பானர்ஜி தலைமையிலான அரசாங்கம், சிங்கூர் விவசாயிகளுக்கு நிலத்தை திருப்பி அளிக்கும் நோக்கத்துடன் நிறைவேற்றிய சட்டத்தை எதிர்த்து டாடா நிறுவனம் தொடுத்துள்ள வழக்கு பற்றியது. முந்தைய 'இடதுசாரி' அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி கையகப்படுத்தப்பட்ட நிலமானது தனக்குச் சொந்தமானது என்றும், மம்தா அரசின் சட்டமானது ஒப்பந்தத்தை மீறும் செயல் என்றும் டாடா நிறுவனம் தொடுத்துள்ள வழக்கு இன்னமும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

நிலப்பறிப்புக்கு எதிராக சிங்கூர் விவசாயிகளின் போராட்டம். (கோப்புப் படம்)



தற்போது, சிங்கூரில் விளைநிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டதைப் பற்றிய வழக்கில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் கோபால கவுடா, அருண் மிஸ்ராஆகியோர் வெவ்வேறு காரணங்களைக் கூறி தனித்தனியாகத் தங்கள் தீர்ப்பை எழுதியுள்ளனர். நீதிபதி கோபால கவுடா, "1894 -ஆம் ஆண்டின் சட்டத்தில் பிரிவு 3 (எஃப்) இல் குறிப்பிட்டுள்ள 'பொது நோக்கத்திற்காக' (Public Purpose) என்கிற விதி சிங்கூரில் நிலம் கையப்படுத்தப்பட்டதற்குப் பொருந்தாது. ஏனெனில், இந்த நிலம் ஒரு தனியார்முதலாளி தொழில் தொடங்குவதற்காகத் தரப்பட்டுள்ளதால் இதில் 'பொதுநோக்கம்' என்பது அறவே இல்லை" என்று தன் தீர்ப்பில் கூறியுள்ளார்.

நீதிபதி அருண் மிஸ்ரா, "ஒரு தனியார் முதலாளித்துவ நிறுவனம் தொழில் தொடங்குவதற்காக விவசாயிகளிடமிருந்து நிலத்தை அரசு கையகப்படுத்தி அளிப்பது என்பதில் 'பொதுநோக்கம்' அடங்கி இருக்கிறது. ஒரு முதலாளி தொழில் தொடங்குவதன் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதோடு, பொருளுற்பத்தியும் பெருகி நாட்டில் வளர்ச்சி ஏற்படுகிறது" என்று தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டு நீதிபதிகளும் பொதுப் பயன்பாடு பற்றி முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தாலும், 1894-ஆம் ஆண்டு சட்டத்தின் பகுதி 7-இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள், நிலம் கையகப்படுத்தப்பட்டபோது சரியாகப் பின்பற்றப்படாததால் சிங்கூரில் நிலங்களைக் கையகப்படுத்தியது செல்லாது என்று இத்தீர்ப்பை அளித்துள்ளனர். மறுபடி, சிங்கூர் விவசாயிகளின் போராட்டம் எழுப்பிய "எது பொதுப்பயன்பாடு?" என்ற மையமான கேள்விக்கு நீதித்துறை இன்றுவரை விடையளிக்கா

மல் நழுவிக் கொண்டுள்ளது.

1894-ஆம் ஆண்டின் காலனிய காலத்து நிலம் கையகப்படுத்தல் சட்டப்படி, ''பொதுப் பயன்பாட்டுக்காக'' எந்த நிலத்தையும் அரசாங்கம் கட்டாயமாக அபகரித்துக் கொள்ளலாம். அன்று ரயில்வே துறைக்காக நிலங்களைக் கையகப்படுத்த வெள்ளைக்காரன் கொண்டுவந்த இந்தச் சட்டத்தைக் கொண்டுதான், போலி சுதந்திரத்துக்குப் பின்னர் ரயில்வே, அணைகள், சுரங்கங்கள், மின்நிலையங்கள் முதலான அரசுத்துறை நிறுவனங்களை அமைக்க இந்திய ஆட்சியாளர்கள் விவசாய நிலங்களைக் கையகப்படுத்தினர். பொதுப் பயன்பாட்டுக்கானது, நாட்டின் வளர்ச்சிக்கானது என்ற நோக்கில்தான் தங்கள் நிலங்களை விவசாயிகளும் கொடுத்தனர். தோற்றத்திலாவது பொதுப் பயன்பாடாக இருந்த நிலை தனியார்மய - தாராளமயத்துக்குப் பிறகு இப்போது அடியோடு மாறிவிட்டது. தொழில் வளர்ச்சியைச் சாதித்து வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்காக விவசாய நிலங்களைக் கையகப்படுத்தி, தனியார் முதலாளிகளுக்கு அளிப்பதில் தவறில்லை - இதுதான் ''பொதுப்பயன்பாடு'' என்று அரசு இப்போது விளக்கமளிக்கிறது. பொதுப்பயன்பாடு என்ற பெயரில் நடக்கும் இந்தக் கார்ப்பரேட் கொள்ளையும் அடக்குமுறையும்தான் விவசாயிகளும் உழைக்கும் மக்களும் எதிர்த்துப் போராட வேண்டிய மையமான விசயமாக உள்ளது.



நிலைக்குமா, நீடிக்குமா?: பறிக்கப்பட்ட நிலம் திரும்பக் கிடைத்த மகிழ்ச்சியில் சிங்கூர் விவசாயிகள்.

சிங்கூர், நந்திகிராமம், கலிங்காநகர் - என நாடெங்கும் தொடர்ந்த விவசாயிகளின் போராட்டத்தால் பொதுக் கருத்து வலுப்பட்டு, முதலாளித்துவ ஊடகங்களே ''பொதுப்பயன்பாடு'' என்ற பெயரில் அரசாங்கமானது பெருமுதலாளிகளுக்கு விளைநிலங்களைப் பிடுங்கி க் கொடுக்கும் அடியாள் வேலை செய்வதை அம்பலப்படுத்தின. நாடெங்கும் நிலப்பறிப்புக்கு எதிரான விவசாயிகளின் வீரியமான போராட்டத்தின் காரணமாகவே அன்றைய மன்மோகன் சிங் தலைமையிலான காங்கிரசு கூட்டணி அரசு 2013-ஆம் ஆண்டு ''நிலம் கையப்படுத்தல், மறுகுடியமர்த்தம், மறுவாழ்வு, சட்டத்தை'' (LARRA-2013) நிறைவேற்றியது.

கடந்த 2014-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் காங்கிரசு கூட்டணியை வீழ்த்தி பா.ஜ.க. தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்தது. விவசாயிகளின் போராட்டத்தால் சிங்கூரிலிருந்து வெளியேறிய டாடா நிறுவனத்தை அழைத்து நானோ கார் தொழிற்சாலை தொடங்க அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்த அன்றைய குஜராத் முதலமைச்சரான மோடி, இப்போது பிரதமராகியுள்ளார். இப்பேர்பட்ட மோடி, ''பொதுப் பயன்பாட்டுக்காக'' விவசாய நிலங்களை ஆக்கிரமித்து நூறு பொலிவுறு நகரங்கள் (Smart Cities) அமைக்கப் போவதாக அறிவித்தார். மன்மோகன் சிங் அரசு கொண்டுவந்த 2013-ஆம் ஆண்டின் நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் பிரிவு 3 (இசட்-ஏ) விதிகள், விவசாய நிலங்களை ஆக்கிரமிக்கத் தடையாக இருப்பதால், அச்சட்டத்தை நீர்த்துப்போகச் செய்து முந்தைய காலனிய காலச் சட்டத்தையே நிலைநாட்டும் வகையில் புதிய சட்டத்தை மக்களவையில் கொண்டு வந்து நிறைவேற்றத் துடித்தார். அரசுத்துறைகளுக்கு மட்டுமின்றி, எந்தவொரு தனியார் முதலாளிக்காகவும் விளைநிலங்களைக் கையகப்படுத்த விவசாயிகளின் ஒப்புதலைப் பெறத் தேவையில்லை, இதற்கெதிராக பாதிக்கப்பட்டோர் வழக்கு தொடுக்க முடியாது என்பதுதான் மோடி கொண்டுவரத் துடிக்கும் புதிய சட்டத்தின் சாரம். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமல் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ள மோடி கும்பலின் நிலம் கையகப்படுத்தல் திருத்தச் சட்டம் எனும் கொடிய பாசிச சட்டமானது விவசாயிகளின் தலைக்கு மேல் கத்தியாக இன்னமும் தொங்கிக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில், டாடா நிறுவனமோ, சிங்கூரில் 900 ஏக்கர் நிலத்தை 99 ஆண்டுகளுக்குக் குத்தகைக்குப் பெற்று 'இடதுசாரி' அரசுடன் ஒப்பந்தம் போட்டுள்ளதையும், அந்த ஒப்பந்தத்தை செயல்படுத்துமாறும் வழக்கு தொடுத்திருக்கிறது. நிலுவையில் உள்ள அந்த வழக்கு விசாரணைக்கு வந்து, குத்தகை ஒப்பந்தம் சட்டப்படி செல்லும் என்று உச்ச நீதிமன்றத்தின் இன்னுமொரு அமர்வு தீர்ப்பளித்தால் என்னவாகும்? நீண்ட போராட்டத்தின் மூலம் சிங்கூர் விவசாயிகளுக்கு நிலம் கிடைத்தாலும், வேறொரு தீர்ப்பின் மூலம் அந்த நிலங்கள் பறிக்கப்படலாம். இந்த அபாயத்தை நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பதன் மூலம் முறியடிக்க முடியாது. மோடி அரசின் கொள்கையை நாடாளுமன்றத்தின் மூலமோ, சட்டத் திருத்தத்தின் மூலமோ தடுத்து நிறுத்திடவும் முடியாது.

இந்நிலையில், ''பொதுப் பயன்பாடு'' என்ற பெயரில் விளைநிலங்களையும் கனிம வளங்களையும் ஆக்கிரமிக்கத் துடிக்கும் கார்ப்பரேட் கொள்ளைக்கும் அடக்குமுறைக்கும் எதிராக விவசாயிகளும் உழைக்கும் மக்களும் சட்டத்துக்கு அப்பாற்பட்ட தொடர்ச்சியான போராட்டங்களைக் கட்டியமைப்பதே இன்று அவசர அவசியக் கடமையாக முன்நிற்கிறது.

● தனபால்

# இந்த தீண்டாமைக் குற்றத்தின் மதிப்பு 2.8 லட்சம் கோடி ரூபாய்!

**பட்ஜெட்டுகளில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியின மக்களின் நலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியை, அம்மக்களுக்காகப் பயன்படுத்தாமல், வெவ்வேறு இனங்களுக்குக் கடத்திக் கொண்டு போவதும், நிதியைச் செலவழிக்காமல் கிடப்பில் போடுவதும் சர்வசாதாரணமாக நடைபெற்று வருகிறது.**

மத்திய மாநில அரசுகளின் பட்ஜெட்டில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மக்களுகளின் மேம்பாட்டிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி பெருமளவில் செலவிடப்படாமலிருப்பது சமீபத்திய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது. கடந்த 35 ஆண்டுகளில் தாழ்த்தப்பட்ட / பழங்குடிமக்களுக்கு ஒதுக்கப்பட்ட சுமார் ரூ. 2.8 லட்சம் கோடிகள் மத்திய - மாநில அரசுகளால் செலவிடப்படவில்லை என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. (http://www.indiaspend.com/cover-story/unspent-money-for-dalitstribals-42-6-billion-8-times-agri-budget-90181)

தாழ்த்தப்பட்ட/பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்கு என சொல்லிக்கொண்டு "பட்டியல் சாதியினருக்கான துணைதிட்டம்" (Scheduled Caste Sub Plan), மற்றும் "பழங்குடியினருக்கான துணை திட்டம்" (Tribal Sub Plan) ஆகிய பட்ஜெட் வறைமுறைகள் 70-களின் இறுதியில் கொண்டுவரப்பட்டன. இதன்படி மத்திய மாநில அரசுகள் தங்களின் மொத்த பட்ஜெட் ஒதுக்கீட்டில் தாழ்த்தப்பட்ட/பழங்குடிளின் மக்கள் தொகைக்கு ஏற்ப குறிப்பிட்ட சதவீகித நிதியை மேற்கண்ட திட்டங்களில் ஒதுக்கி செலவிடவேண்டும்.

அதன்படியும் இறுதியாக நடந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின்படியும் இந்தியாவின் மத்திய பட்ஜெட்டில் 16.5% பட்டியல் சாதியினர் துணைத்திட்டத்திற்கும், 8.6% பழங்குடியினர் துணைதிட்டத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அப்படி ஒதுக்கீடு செய்யப்படுவதில்லை. மேற்கண்ட திட்டங்கள் அமலுக்கு

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கான நிதியைத் திருப்பிவிட்டு டெல்லியில் நிர்மாணிக்கப்பட்ட காமன்வெல்த் விளையாட்டு கிராமம் (இடது); சிதிலமடைந்த நிலையில் உள்ள சென்னை எம்.சி. ராஜா தாழ்த்தப்பட்டோர் விடுதிக் கட்டிடம். (கோப்புப் படங்கள்)





வரத் தொடங்கிய காலம் முதல் 2014-15 ஆண்டுவரை ஒதுக்கப்பட்ட தொகை என்பது, ஒதுக்கப் பட்டிருக்க வேண்டிய தொகைக் காட்டிலும் சுமார் 5 லட்சம் கோடி ரூபாய்கள் (5,27,723.72 ) குறைவாகும்.

இது ஒரு புறமிருக்க ஒதுக்கப்பட்ட நிதியும் கிடப்பில் போடப்பட்டுள்ளது. கடைசி மூன்று ஆண்டுகளை மட்டும் எடுத்துக்கொண்டால் 2012-13 ஆண்டில் மட்டும் ரூ. 3952 கோடிகளும், 2013-14-ல் 6839 கோடிகளும், 2014-15 மிக அதிகபட்சமாக 20,513 கோடிகளும் மத்திய அரசால் பயன்படுத்தப்படவில்லை. அதிலும் மோடி ஆட்சியில் இந்த தலித் வெறுப்பு (பயன்படுத்தப்படாத நிதியின் அளவு) முந்தைய ஆண்டுகளை காட்டிலும் 250% மடங்கு அதிகரித்துள்ளது. இந்த மோடிதான் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான தாக்குதலுக்கு தலைகுனிவதாக கண்ணீர் வடிக்கிறார். அதைக் கேட்டுப் புளகாங்கிதம் அடையும் தலித் தலைவர்களும் இருக்கிறார்கள்.

மாநில வாரியாக எடுத்துக்கொண்டால் தாழ்த்தப்பட்ட மக்களின் நிதி பயன்படுத்தப்படாமல் இருப்பதில் ஆந்திரா, உத்திரபிரதேசம், பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் முன்னிலை வகிக்கின்றன. பழங்குடி மக்கள் மிகுதியாக வாழ்கின்ற ஜார்க்கண்ட், ஒடிசா, ஆந்திரா, தெலிங்கானா ஆகிய மாநிலங்கள்தான் பழங்குடி மக்களுக்கான தொகையை செலவிடாமல் இருப்பதில் முன்னிலை வகிக்கின்றன. 2005 முதல் 2014 ஆண்டுகளில் ஆந்திரம் செலவிடாத தொகை ரூ.19,367 கோடி. உத்திரபிரதேசம் ரூ.16,970 கோடி. 2014-15 ஆண்டிற்கான நிதியில் 61% (ரூ.4643 கோடி) தொகையை செலவு செய்யாமல் வைத்திருக்கிறது தெலிங்கானா. பழங்குடியினருக்கான வளர்ச்சித் திட்டங்களை அமல்படுத்துவதன் மூலம், அவர்களை மாவோயிஸ்டுகள் பக்கம் போகவிடாமல் தடுப்பதாக ஆளும் வர்க்கம் சொல்லிக்கொள்கிறதே அந்த மாநிலங்களின் யோக்கியதை இது.

தலித்திய மாயாவதியின் உத்திரபிரதேசம் பயன்படுத்தபடாத நிதியில் முன்னணி மாநிலங்களின் ஒன்றாக இருக்கிறது. மாயாவதியின் ஆட்சிகாலமான 2007-12 ஆண்டுகளில் சுமார் 3500 கோடிகளுக்கு மேலாக செலவிடப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தை பொருத்தவரை 2002-2015 ஆகிய 13 ஆண்டுகளையும் சேர்த்து மொத்தம் சுமார் ரூ.5000 கோடிகள் செலவிடப்படவில்லை. தாழ்த்தப்பட்டோருக்கான நிதியை செலவிடும் விசயத்தில் கேரளாவும் தமிழகமும் மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பரவாயில்லை என்கிறது இந்தப் புள்ளி விவரம்.



தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையைத் தாமதமின்றி வழங்கக் கோரி திருச்சி ஈ.வெ.ரா. கல்லூரி மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

நிலவும் அரசமைப்பில் பங்கேற்பதன் மூலம் தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விடிவு ஏற்படுத்த முடியும் பேசும் தலித் தலைவர்களால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை கூடப் பெற்றுத் தர முடியவில்லை என்பதே எதார்த்த நிலை.

சரி செலவு செய்யப்பட்டது யாருக்கு?

ஒதுக்கப்படவேண்டிய அளவு நிதி ஒதுக்கப்படவில்லை. ஒதுக்கிய தொகையும் செலவிடப்படவில்லை என்பவை ஒருபுறம். செலவிடப்பட்ட தொகை யாருடைய நலனுக்காக செலவிடப்பட்டது என்பது மிக முக்கியமான கேள்வி. இதற்கு நல்ல உதாரணம் குஜராத்தின் நர்மதா அணைக்கட்டு திட்டம். இத்திட்டம் பழங்குடிமக்களின் வாழ்க்கையை சூறையாடியதால் அம்மக்கள் பல ஆண்டுகளாக போராடி வருகிறார்கள். அவர்களுக்குரிய நிவாரணமோ மாற்று இடமோ தரப்படவில்லை என்பது ஒருபுறமிருக்க, பழங்குடிமக்கள் துணைத்திட்ட நிதியை நர்மதா அணைக்கட்டு திட்ட நிறுவனத்திற்கு ஒதுக்கியிருக்கிறது குஜராத் அரசு. அது மட்டுமல்ல, விவேகானந்தரின் 150-ஆண்டு பிறந்த தின கொண்டாட்டங்களுக்கும் இந்த நிதியை குஜராத் அரசு திருப்பிவிட்டுள்ளது என்பதை அம்பலப்படுத்தியிருக்கிறது தெகல்கா.

ஜார்கண்டு, சட்டிஸ்கார், ஆந்திரா, தெலிங்கானா மாநிலங்களில் பழங்குடி மக்கள் நலன் என்ற பெயரில் செலவிடப்பட்ட தொகை, என்னென்ன இனங்களுக்கு செலவிடப்பட்டுள்ளது என்ற விவரங்களை எடுக்க முடிந்தால் அதிர்ச்சியூட்டும் உண்மைகளை நாம் தெரிந்து கொள்ள இயலும். பழங்குடி மக்களுக்கான நிதி, பழங்குடி ஒழிப்பு - மாவோயிஸ்டு ஒழிப்பு நடவடிக்கைக்காக செலவிடப்பட்டிருப்பதையும் நாம் காணக்கூடும்.

கடந்த காங்கிரஸ் ஆட்சியின் போது தாழ்தப்பட்ட மக்கள் மேம்பாட்டு நிதியை காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளுக்கு திருப்பிவிடப்பட்டது அனைவரும் அறிந்த ஒன்று. அதே போன்று ஜார்கண்ட் மாநிலத்தில் பழங்குடி மக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி மாநிலத்திற்கு விமானம் வாங்குவதற்கும், முதலமைச்சர் வீட்டிற்கு ஹெலிபேட் அமைப்பதற்கும், மாவட்ட தலைநகரங்களில் சாலைகள் அமைப்பது போன்ற வேலைகளுக்கும் திருப்பிவிடப்பட்டுள்ளது. இதேதான் பிற மாநிலங்களிலும் நடந்திருக்கிறது. தொகையில் மட்டும் தான் வேறுபாடு.

மொத்தத்தில் இத்திட்டங்களினால் கணிசமாகப் பயனடைகிறவர்கள் அமைச்சர்கள், கார்ப்பரேட் கட்டுமான நிறுவனங்கள், காண்டிராக்டர்கள்! ஆனாலும் ஆண்டுதோறும் நிதி ஒதுக்கீடு செய்கிறார்கள். தலித் மக்கள் நலனுக்காக எந்த ஆட்சி அதிகம் நிதி ஒதுக்கியது என்று தங்களுக்குள் சண்டையிட்டும் கொள்கிறார்கள்.

இது இந்தியாவில் ஆண்டுதோறும் நடந்து வரும் மிகப்பெரிய ஊழல் முறைகேடுகளில் ஒன்று. எல்லா கட்சிகளுக்கும் அதிகார வர்க்கத்துக்கும் இதில் பங்கிருக்கிறது. ஆனால் இதை ஊழல் என்றோ முறைகேடு என்றோ எவரும் பேசுவதில்லை. தீண்டாமையையும் சாதி ஆதிக்கத்தையும் ஊழலாகவோ முறைகேடாகவோ கருதாத மனப்போக்கு இதனை எப்படி ஊழலாகக் கருத இயலும்?

ஒருபுறம் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு எதிராக அதிகரித்து வரும் வன்முறைகள், பெருகி வரும் சாதி சங்கங்கள், சாதி மறுப்புத் திருமணங்களுக்கு எதிரான வன்முறைகள், முன் எப்போதைக் காட்டிலும் தேர்தல் அரசியலில் அதிகரித்து வரும் சாதி அமைப்புகளின் செல்வாக்கு, பழங்குடி மக்களை வெளியேற்றி அவர்களுடைய நிலத்தை அபகரித்துக் கொள்வதையே வளர்ச்சியாகச் சித்தரிக்கும் பொருளாதாரக் கொள்கை - தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்துக்கான நிதி ஒதுக்கீடு என்ற இந்தப் பிரச்சினையை மேற்கூறிய பின்புலத்தில் வைத்துப்பாருங்கள். நிலவுகின்ற அரசமைப்புக்குள்ளேயே தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்தை சாதித்து விட முடியும் என்ற நம்பிக்கை எத்தனை அபத்தமானது என்பதைப் புரிந்து கொள்ள இயலும்.

கயர்லாஞ்சி படுகொலை வழக்கைக் கையாண்ட அதிகாரிகளில் ஆகப்பெரும்பான்மையினர் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்த போதிலும், போட்மாங்கே குடும்பத்துக்கு இந்த அரசமைப்பில் நீதி கிடைக்கவில்லை. நீதி கிடைக்காததில் வியப்பேதும் இல்லை. தேர்தல் அரசியல் மூலமாகவே தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தை அடைந்து விட முடியும் என்று பேசுவதற்கும், பேசுபவர்களை நம்புவதற்கும் இன்னமும் ஆளிருக்கிறதே, அதுதான் வியப்புக்குரியது.

● அமலன்

# கருப்புப் பண மீட்பு:

# குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை!

**மாதத்துக்கு 2 கேசு கொடுங்கண்ணே என்று கள்ளச்சாராய வியாபாரிடம் பேரம் நடத்தும் போலீசு போல, மோடி கும்பலின் கருப்புப்பண மீட்பு நாடகம் நடந்துள்ளது.**

சுயவிளம்பர மோகத்தில் திளைக்கும் மோடிஅரசு, தனது புதிய சாதனையாக பல்லாயிரம் கோடிகளுக்குக் கருப்புப் பணத்தை மீட்டு விட்டதாக இப்போது ஆரவாரமாக விளம்பரப்படுத்தி வருகிறது.

மோடி அரசு கொண்டுவந்துள்ள "ஐ.டி.எஸ். எனும் வருமானம் அறிவிக்கும் திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.65 ஆயிரம் கோடிக்கும் மேலாக கருப்புப் பணம் மீட்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இதற்கு முன்பு எந்த அரசும் இந்த அளவுக்கு அதிகமான கருப்புப் பணத்தை மீட்டதில்லை" என்று பெருமிதம் கொள்கிறார் பா.ஜ.க. தலைவர்அமித் ஷா.

"இதற்குமுன் காங்கிரசு அரசாங்கம் 1997-ஆம் ஆண்டில் கொண்டுவந்த வீ.டி.ஐ.எஸ். எனும் திட்டத்தின்கீழ் ரூ.30,000 கோடி அளவுக்குத்தான் கருப்புப் பணம் வெளியே வந்தது. ஆனால் முந்தைய ஆட்சியாளர்களின் சாதனைகளை விஞ்சும் வகையில், எதிர்பார்த்ததை விட அதிகமான அளவில் கருப்புப் பணம் வெளியே வந்து மோடி அரசின் திட்டம் மிகப் பெரிய வெற்றியைச் சாதித்துள்ளது" என்று பூரிக்கிறார் அருண் ஜெட்லி.

முன்பு இந்திராகாந்தி ஆட்சியின்போதும், பின்னர் ப.சிதம்பரம் நிதியமைச்சராக இருந்தபோதும் தானாக முன்வந்து கருப்புப் பணத்தை வெள்ளையாக்கிக்கொள்ளும் திட்டங்கள்அறிவிக்கப்பட்டன. முந்தைய திட்டங்களின் பெயரை மட்டும் மாற்றிவிட்டு, அதே வழியில்தான் இந்த சூரப்புலிகளும் இப்போது கருப்புப்பண மீட்பு நாடகத்தை நடத்தியுள்ளனர்.

மோடி அரசு அறிவித்துள்ள ஐ.டி.எஸ். திட்டத்தின்படி, 2016 செப்.30-ஆம் தேதிக்குள் வருமான வரி 30%, அபராதம் 15% - ஆக மொத்தம் 45% தொகையைக் கட்டிவிட்டு இதுவரை கணக்கில் காட்டாத சொத்துக்களைக் கருப்புப்பணப் பேர்வழிகள் சட்டப்பூர்வமாக்கிக் கொள்ளலாம்; அபராதத் தொகையை அடுத்த ஆண்டுக்குள் மூன்று தவணைகளில் செலுத்த சலுகை தரப்படும்; அவர்களைப் பற்றிய எந்தத் தகவலையும் அரசு வெளியிடாது; எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது.




இதன்படி, இப்போது 64,275 பேரிடமிருந்து ரூ.65,200 கோடி தொகை வசூலிக்கப்பட்டதாக கணக்கில் காட்டப்பட்டுள்ளது. அதாவது, சராசரியாக ஒரு கருப்புப்பணப் பேர்வழியிடமிருந்து ஒரு கோடி ரூபாய்தான் வசூலாகியிருக்கிறது. இதிலே, ஒரு தனிநபரிடமிருந்து மட்டும் 10,000 கோடி ரூபாய் கிடைத்ததாம். அந்த நபர் யார்என்று தெரியவில்லை.

தனியார்மய - தாராளமயமாக்கத்துக்குப் பிறகு, கடந்த 20 ஆண்டுகளில் உள்நாட்டிலேயே கருப்புப் பணம் பூதாகரமானதாக வளர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ பாதியளவுக்குக் கருப்புப் பணத்தால்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்று முதலாளித்துவப் பொருளாதாரவாதிகளே கூறுகின்றனர். இந்நிலையில், ஒரு பெரு நகரத்திலேயே கருப்புப்பணப் பேர்வழிகளிடமிருந்தும் அமைச்சர்களிடமிருந்தும் இத்தனை கோடிகளுக்கும் மேலாகக் கைப்பற்றமுடியும். ஆனால், நாடு தழுவிய அளவில் வேட்டை நடத்தி சராசரியாக ஒரு கருப்புப்பணப் பேர்வழியிடமிருந்து ஒரு கோடியைத்தான் மோடி அரசு வெளியே கொண்டுவந்திருக்கிறது.

மாதத்துக்கு 2 கேசு கொடுங்கண்ணே என்று கள்ளச்சாராய வியாபாரிடம் மாமூல் வாங்கும் போலீசுக்காரன் பேரம் பேசுவதைப்போலத்தான், மோடி கும்பலின் கருப்புப்பண மீட்பு நாடகமும் நடந்துள்ளது. வருமானவரி அதிகாரிகள் கருப்புப்பண முதலாளிகளைப் பார்த்துப் பேசி, உங்களுக்கு எந்தப் பிரச்சினையும் வராது, கொஞ்சம் பெரிய மனது வைத்து ஒத்துழையுங்கள், பிரதமரின் லட்சியக் கனவை நிறைவேற்றுங்கள் என்று கெஞ்சி உண்டியல் வசூலைப்போல கேட்க, அவர்களும் தருமம் போடுவது போல கொஞ்சம் கருப்புப் பணத்தை கணக்கில் காட்டியிருக்கிறார்கள். இதற்குத்தான் இத்தனைஆரவாரக் கூச்சல்கள்!

உள்நாட்டில் கருப்புப்பண வேட்டையின் யோக்கியதை இப்படி சந்தி

சிரிக்கும்போது, வெளிநாடுகளில் பதுக்கி வைத்துள்ள கருப்புப் பணத்தை மீட்கப் போவதாக மோடி அரசு அடித்த சவடால்களோ இன்னுமொரு கேலிக் கூத்து.

''வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தை நூறு நாட்களில் மீட்டுக் கொண்டு வருவோம்; அப்படி கொண்டுவரப்படும் கருப்புப் பணத்திலிருந்து ஒவ்வொரு இந்தியனின் வங்கிக் கணக்கிலும் 15 லட்ச ரூபாய் பணத்தைப் போடுவோம்'' என்று அண்டப்புளுகை அள்ளி வீசியது பா.ஜ.க. மோடியின் நூறுநாள் ஆட்சியில் ஒரு சல்லிக்காசு கருப்புப் பணத்தைக்கூட மீட்க முடியாமல் போனதோடு, கருப்புப்பண பேர்வழிகள் வெளிநாட்டில் பதுக்கியுள்ள சொத்துகளுக்கு வரி மற்றும் அபராதமாக 60% செலுத்தி இந்தியாவிற்குள் கொண்டுவரலாம் என்று மோடி கும்பல் சலுகை காட்டியபோதிலும், அதுவும் தோற்றுப்போய், அந்தத் திட்டமும் புஸ்வாணமாகிப் போய்விட்டது.

வெளிநாடுகளில் பதுக்கிவைக்கப்பட்டள்ள கருப்புப் பணத்தைப் பிடிப்பதுதான் எங்கள் கொள்கை. ஆனால், பாருங்கள் அதிலே சிக்கல் வந்துவிட்டது. இருந்தாலும், உள்நாட்டு கருப்புப் பணத்தைக் கைப்பற்றுவதற்கு திட்டங்களை அறிவித்து அதிலே சாதனை படைத்துவிட்டோம் என்று இப்போது கூச்சமின்றி மார்தட்டிக் கொள்கிறது மோடி அரசு.

ஊழல் இல்லாத ஆட்சி, கருப்புப்பண மீட்பு - என்ற இரு முக்கிய வாக்குறுதிகளை வைத்துத்தான் மோடி கும்பல் ஆட்சிக்கு வந்தது. ஆனால் அவையும் அம்பலப்பட்டுப் தோற்றுப்போய்விட்டன.

மோடி என்றால் மோசடிப் பேர்வழி என்பதற்கு இவற்றைவிட வேறென்ன சான்று வேண்டும்?

● குமார்

# பா.ஜ.க. வழங்கும் “தேசியக் கொடிக்கு மரியாதை!”

**முகம்மது அக்லக்கைப் படுகொலை செய்த குற்றவாளிகளுள் ஒருவனான ரவி சிசோடியாவின் சடலத்தின் மீது தேசியக் கொடியைப் போர்த்தியதன் மூலம், கொடிக்கு ஆளும் வர்க்கம் கற்பித்திருந்த புனிதத்தின் மீது காறித்துப்பியிருக்கிறது பா.ஜ.க.**

இந்து மதவெறிக் கும்பலால் அடித்தே கொல்லப்பட்ட முகம்மது அக்லக் படுகொலை வழக்கில் கைது செய்யப்பட்டு, சிறை வைக்கப்பட்டிருக்கும் பயங்கரவாதக் குற்றவாளிகளுள் ஒருவனான ரவி சிசோடியா, கடந்த அக்டோபர் மாதம் சீறுநீரகக் கோளாறு காரணமாகச் சிறையிலேயே இறந்து போனான். கட்சிக்காரன் இறந்து போனால், அவனது உடல் மீது கட்சிக் கொடியைப் போர்த்துவதுதான் வாடிக்கையாக இருந்து வருகிறது. ஆனால், இந்து மதவெறிக் கும்பலோ கிரிமினல் குற்றவாளியான சிசோடியா உடலின் மீது தேசியக் கொடியைப் போர்த்தி, அவனைத் தேசத் தியாகி போலக் கௌரவப்படுத்தி அடக்கம் செய்திருக்கிறது.

உ.பி. மாநிலம், தாத்ரி மாவட்டத்திலுள்ள பெசாரா கிராமத்தைச் சேர்ந்த முகம்மது அக்லக் படுகொலை வழக்கு பத்தோடு பதினொன்றைப் போல சாதாரண வழக்கு அல்ல. மோடி பிரதமராகப் பதவியேற்ற பிறகு, ஆர்.எஸ்.எஸ். கும்பல் முன்னெடுத்துவரும் பசு பாதுகாப்பு என்ற இந்து பயங்கரவாதத் திட்டத்தின் அங்கமாக நடத்தப்பட்ட படுகொலை அது. கைது செய்யப்பட்ட குற்றவாளிகளும் கணக்குக் காட்டுவதற்காகச் சிறையில் தள்ளப்பட்டவர்கள் அல்ல. அக்குற்றவாளிகள் அனைவரும் முகம்மது அக்லக் குடும்பத்தினரால் அடையாளங்காட்டப்பட்டவர்கள்.

சிறையில் விசாரணைக் கைதிகள் இறந்து போவதும், அம்மரணம் குறித்து சந்தேகங்கள் எழுப்பப்படுவதும் பரவலாக நடந்து வருகிறது என்றாலும், இறந்து போகும் கைதிகள் தியாகியாகச் சித்தரிக்கப் படுவதில்லை. ஆனால், அசாதாரணமான சூழ்நிலையில் இறந்து

தேசியக் கொடி போர்த்தப்பட்ட நிலையில் ரவி சிசோடியாவின் சடலம். (உள்படம்) ரவி சிசோடியா.



போகும் தனது கட்சிக் காரர்களைத் தியாகியாகச் சித்தரித்து, பொது மக்களை அச்சுறுத்தக்கூடிய கலவரங்களையும் ரவுடித்தனங்களையும் நடத்துவதை வாடிக்கையாகவே கொண்டிருக்கிறது, இந்து மதவெறிக் கும்பல்.


ரவி சிசோடியாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தும் மோடி அரசின் கலாச்சாரத் துறை அமைச்சர் மகேஷ் சர்மா.

கோவை இந்து முன்னணி செய்தி தொடர்பாளர் சசிக்குமார், பா.ஜ.க. மருத்துவ அணிச் செயலர் டாக்டர் அரவிந்த் ரெட்டி, பரமக்குடி நகர பா.ஜ.க. செயலர் முருகன், விசுவ இந்து பரிசத்தைச் சேர்ந்த சூரி உள்ளிட்ட பலர் கந்துவட்டி, ரியல் எஸ்டேட், பெண் விவகாரம் என ஏதோவொரு காரணத்தால் கொல்லப்பட்டிருப்பதை மறைத்து, அவர்களைத் தியாகியாக்கி கலவரங்களை நடத்தியதைத் தமிழகமும் கண்டிருக்கிறது.

ரவி சிசோடியா விவகாரத்தில் இன்னும் ஒருபடி மேலே போய், அவனது மரணத்திற்கு உ.பி. மாநில அரசு நட்ட ஈடு தரவேண்டும் எனக் கோரியதோடு, சிசோடியாவின் சடலத்தை உடனடியாக அடக்கம் செய்யாமல் போட்டு வைத்திருந்து, பதட்டச் சூழ்நிலையை உருவாக்கி, உ.பி. மாநில அரசைப் பணிய வைத்தது.

உ.பி. மாநில அரசு இந்து மதவெறிக் கும்பலின் மிரட்டலுக்குப் பணிந்து ரவி சிசோடியாவின் குடும்பத்திற்கு 20 இலட்ச ரூபாய் நட்ட ஈடு அளித்தது. மத்திய கலாச்சார துறை அமைச்சர் மகேஷ் சர்மா, உ.பி. மாநில பா.ஜ.க. எம்.எல்.ஏ. சங்கீத் சோம் உள்ளிட்டோர் சிசோடியாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். "சிசோடியாவின் மரணத்திற்குப் பழிக்குப் பழி வாங்குவோம்" என இந்து மதவெறிக் கும்பல் முழக்கமிட, தேசியக் கொடியால் போர்த்தப்பட்ட சிசோடியாவின் உடல், மயானத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அடக்கம் செய்யப்பட்டிருக்கிறது. இதன் வழியாக தேசபக்தி என்பதற்குப் புதிய பொருளைக் கற்பித்திருக்கிறது, ஆர்.எஸ்.எஸ்.

இந்திய தேசியக் கொடியைப் புனிதப் பசுவாகத் தூக்கி வைத்துக் கொண்டாடுவதிலும், அதனின் புனிதத்தை மீறுவது மன்னிக்க முடியாத குற்றமாக ஊருக்கு உபதேசிப்பதிலும் மற்ற கட்சிகளைவிட, இந்து மதவெறிக் கும்பல்தான் முந்திக் கொண்டு நிற்கும். இப்படி ஊருக்குப் பொருத்தப்படும் நியாயம் தனக்குப் பொருந்தாது என்பதை கிரிமினல் குற்றவாளி சிசோடியாவின் உடல் மீது தேசியக் கொடியைப் போர்த்திக் காட்டியிருக்கிறது, அக்கும்பல்.

சிசோடியாவைத் தியாகியாகச் சித்தரிப்பதன் வழியாக, உ.பி.யில் முகம்மது அக்லக்கைப் படுகொலை செய்தது; குஜராத் மாநிலம், உனாவில் பசுவைக் கொன்று அதன் தோலை உரித்தார்கள் எனப் பழிபோட்டுத் தாழ்த்தப்பட்டோரைத் தாக்கியது; அரியானாவில் மாட்டுக் கறியைச் சாப்பிட்டதாக ஊதிவிட்டு, ஒரு ஏழை முசுலீமின் வீடு புகுந்து, அவரது குடும்பத்தாரைக் கொலைவெறியோடு தாக்கி, அக்குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு இளம் பெண்களை வன்புணர்ச்சி செய்தது எனத் தொடரும் சட்டவிரோத அட்டூழியங்கள் அனைத்தையும் நாட்டிற்குத் தேவையான நியாயமான நடவடிக்கைகள் எனக் காட்டிவிட முயலுகிறது, ஆர்.எஸ்.எஸ்.


தனது இந்து மதவெறி பயங்கரவாதக் குற்றங்கள் அனைத்தையும் தேசியத்தோடு முடிச்சுப் போடுவது ஆர்.எஸ்.எஸ்.-க்குக் கைவந்த கலை. பாபர் மசூதியைத் தரைமட்டமாக்கிய குற்றத்தை, தேசிய அவமானச் சின்னத்தை இடித்துத் தள்ளியதாக நியாயப்படுத்தியது. குஜராத்தில் நடந்த போலி மோதல் கொலைகள்

குஜராத் மாநிலம் உனாவில் இந்து மதவெறிக் கும்பலால் தாக்கப்பட்ட தாழ்த்தப்பட்ட இளைஞர்கள்.


அனைத்தும் பாகிஸ்தானால் ஏவிவிடப்பட்ட முசுலீம் பயங்கரவாதத்திற்கு எதிரான தேசபக்த நடவடிக்கைகளாகச் சித்தரிக்கப்பட்டன.

சோராபுதீன் போலி மோதல் கொலையில் குற்றஞ்சாட்டப்பட்ட அமித் ஷா விடுவிக்கப்பட்டு, தேசியத் தலைவராக்கப்பட்டார். குஜராத்தில் போலி மோதல் கொலைகளை நடத்திய போலீசு அதிகாரிகள் பிணையில் விடுவிக்கப்பட்டு, அதிகாரமிக்க பதவிகளில் மீண்டும் அமர்த்தப்பட்டனர். உ.பி. முசாஃபர் நகர் கலவரத்திற்குத் தலைமை தாங்கிய மகேஷ் ஷர்மா கலாச்சாரத் துறை அமைச்சர்; சங்கீத் சோம் உ.பி. சட்டமன்ற உறுப்பினர். ரவி சிசோடியாவின் உடலுக்குத் தேசியக் கொடி.





இந்து மதவெறிக் கும்பலால் அடித்துக் கொல்லப்பட்ட முகம்மது அக்லக் (இடது) மற்றும் அக்கொலை வழக்கு இந்து மதவெறிக் கும்பலுக்குச் சாதகமாக நடத்தப்படுவதை அம்பலப்படுத்திய முன்னாள் உச்சநீதி மன்ற நீதிபதி மார்க்கண்டேய கட்ஜு.

அக்லக் படுகொலை வழக்கும் கூட இந்து மதவெறிக் கும்பலுக்குச் சாதகமாக வளைக்கப்படுகிறது. அக்லக் படுகொலை செய்யப்பட்ட நாளன்று, அவர் வீட்டில் இருந்து எடுக்கப்பட்ட கறியைப் பரிசோதித்து, அது ஆட்டுக் கறிதான் என விரிவான ஆய்வறிக்கையை அளித்தது, தாத்ரியில் உள்ள ஆய்வகம். ஆனால், இந்த அறிக்கை புறக்கணிக்கப்பட்டு, மதுராவில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியில் மீண்டும் ஆய்வு செய்யப்பட்டு, அந்தக் கறி மாட்டுக் கறி என எந்தவிதமான ஆதாரமும் இன்றி ஒற்றை வரி அறிக்கையைப் பெற்றிருக்கிறது, உ.பி. மாநில சமாஜ்வாதி அரசு. இதன் அடிப்படையில் அக்லக் குடும்பத்தினர் மீது பசுவதைத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்ய வேண்டுமென உ.பி. மாநில போலீசு வாதாடியதை ஏற்றுக்கொண்டு, முதல் தகவல் அறிக்கையைப் பதியுமாறு உத்தரவிட்டிருக்கிறது, உ.பி. கீழமை நீதிமன்றம்.

தன்னை மதச்சார்பற்ற கட்சியாகக் கூறிக்கொள்ளும் சமாஜ்வாதிக் கட்சி ஆட்சியின் இலட்சணமே இப்படி இருக்கும்பொழுது, உ.பி.யில் பா.ஜ.க. அதிகாரத்தில் இருந்திருந்தால், சிசோடியாவை அரசு மரியாதையோடு அடக்கம் செய்திருப்பார்கள்.

அக்லக் குடும்பத்திற்கு இழைக்கப்பட்டுள்ள இந்த அநீதியை அம்பலப்படுத்தியும் கண்டித்தும் உச்சநீதி மன்ற நீதிபதிகளுக்குக் கடிதம் எழுதினார், உச்சநீதி மன்ற முன்னாள் நீதிபதி கட்ஜு. அதன் பிறகும்கூட அக்லக் குடும்பம் பழி வாங்கப்படும் விவகாரத்தில் உச்ச நீதி மன்றம் தலையிடவில்லை. இந்து மதவெறியின் சோதனைச் சாலையாக உள்ள குஜராத்தான் இந்தியாவிலேயே அமைதியான மாநிலம் எனச் சான்றளிக்கிறார், உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி தாக்கூர். இப்படி பொது அறம், நீதிக்கு எதிராகப் பேசும் நீதிபதிகள் இருக்கையில், அக்லக் குடும்பத்திற்கு நீதி வழங்கப்படும் என நம்புவது மூட நம்பிக்கையைவிடக் கேடானது.

> தேச பக்திக்கு அத்தாரிட்டியாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் ஆர்.எஸ்.எஸ்.பா.ஜ.க. கும்பலோ, இந்து மதவெறியே தேச பக்தி, இந்திய தேசியம் என்பதே இந்து தேசியம்தான் எனக் காட்டுகிறது. அந்த வகையில் இந்திய தேசியக் கொடி தனக்கு உரிய இடத்தில் சிசோடியாவின் உடல் மீது போர்த்தப்பட்டிருக்கிறது.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான முசுலீம் இளைஞர்கள் தீவிரவாதிகளாக முத்திரை குத்தப்பட்டு, போலீசால் சோடிக்கப்பட்ட தீவிரவாத வழக்குகளின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டு, பத்து பதினைந்து ஆண்டுகள் சிறையில் கழிந்த நிலையில், நீதிமன்றங்களால் சாவகாசமாக நிரபராதிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். அப்படியான நிரபராதிகளுக்கு, அவர்கள் முசுலீம்கள் என்பதாலேயே உரிய நட்ட ஈடு வழங்க அரசும், நீதிமன்றங்களும் மறுத்து வருகின்றன. அப்படி வழங்கினால், போலீசின் செயல்திறன் வீழ்ந்து போகும் என அநியாயமாகச் சப்பைக் கட்டுகின்றன. ஆனால், அக்லக் படுகொலை வழக்கிலிருந்து ரவி சிசோடியா விடுவிக்கப்படும் முன்பே, அவனது குடும்பத்திற்கு இருபது இலட்ச ரூபாய் நட்ட ஈடாக அரசால் வழங்கப்படுகிறது.

‘‘தேசம், தேசியக் கொடி, தேசிய ஒருமைப்பாடு, தேச பக்தி’’ என்றாலே சாமியாடும் நிலைக்குச் சென்றுவிடும் நடுத்தர வர்க்கம், இவையெல்லாம் நாட்டின் நலன், வளர்ச்சி, பாதுகாப்போடு சம்பந்தப்பட்டவையாகக் கற்பிதம் செய்து வைத்திருக்கிறது. ஆனால், தேச பக்திக்கு அத்தாரிட்டியாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. கும்பலோ, இந்து மதவெறியே தேச பக்தி, இந்திய தேசியம் என்பதே இந்து தேசியம்தான் எனக் காட்டுகிறது. அந்த வகையில் இந்திய தேசியக் கொடி தனக்கு உரிய இடத்தில் - சிசோடியாவின் உடல் மீது போர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், இது யாருக்கு அதிர்ச்சி ஏற்படுத்த வேண்டுமோ, அவர்கள், வலிக்காத மாதிரியே நடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

● குப்பன்

# "ராவணனை எரிக்காதே !" ஓங்கி ஒலிக்கும் அசுரர்களின் கலகக் குரல்!

**பார்ப்பனியத்தை மக்களின் தொண்டைக் குழிக்குள் திணிக்கும் முயற்சி அதிகரிக்க அதிகரிக்க எதிர்ப்பும் அதிகரிக்கிறது. அந்த வகையில் தமிழகத்தைத் தொடர்ந்து, வட மாநிலங்களிலும் அசுரர்களைத் தங்களது மூதாதையர்களாகக் கொண்டாடும் கலகப் பண்பாடு.**

''இந்த அடையாளம் எங்களுக்கு தீராத அவமானங்களையே வழங்கியுள்ளது. மற்ற மக்கள் எங்களைக் கேலி செய்கின்றனர். அரக்கர்களைப் போல் எங்களுக்கும் பெரிய பற்கள் இருக்கிறதா என கிண்டலாக கேட்கின்றனர்'' என்கிறார் இருபத்தோரு வயதான அமர்.

அமர், அசுர் பழங்குடியினத்தைச் சேர்ந்தவர். ஜார்கண்ட் மாநில பழங்குடியினரிலேயே சிறுபான்மையிலும் சிறுபான்மையினரான அசுர் பழங்குடியினத்தவரின் மொத்த மக்கள் தொகை சுமார் 26,500. அம்மக்கள் இன்றும் தங்களை அசுர வாரிசுகளாக கருதிக் கொள்கின்றனர். அங்கே மகிஷாசுர் அசுர்களின் மூதாதை.

பழங்குடி மக்களைக் கொன்றொழித்த ஆரியப்படைகளின் வெற்றிக் கதையான மகிஷாசுர வதம் துர்கா பூஜையாகக் கொண்டாடப்படுகின்றது. இன்று சட்டிஸ்கார், ஜார்கண்ட் பழங்குடிகள் மீது நடத்தப்படும் ஆக்கிரமிப்பு - மாவோயிஸ்டு அழிப்பு நடவடிக்கைகளின் அன்றைய வடிவமே மகிஷாசுர வதம்.

மகிஷன், இராவணன், சம்பூகன் போன்றோரின் துண்டிக்கப்பட்ட தலையிலிருந்து வழிந்தோடிய குருதி, தொன்மங்களாகவும் இனக்குழுச் சடங்குகளாகவும் இன்றும் பழங்குடி மக்களின் நினைவில் திட்டுத் திட்டாய் உறைந்திருக்கின்றது. உயிர்த்தெழும் தருணத்துக்காகக் காத்திருக்கிறது.

ஆரிய படைகளின் ஆக்கிரமிப்பிலிருந்து மகிஷனின் தலைமையிலான அசுரர் படை தங்களைக் காப்பாற்றியதை அந்த மக்கள் இன்னும் மறக்கவில்லை. போரில் தோற்ற ஆரியர்கள், பெண்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தக் கூடாது என்ற அசுரர்களின் யுத்த தருமத்தைப் பயன்படுத்தி, துர்கா என்கிற பெண்ணை போருக்கனுப்பி, அவள் மூலம் வஞ்சகமான முறையில் மகிஷாசுரனைக் கொன்றுவிட்டதாகச் சொல்கிறது இம்மக்களின் தொன்மம். பாரதப் போரில், பீஷ்மனுக்கு எதிராக சிகண்டியை (திருநங்கை) முன்னால் நிறுத்தி வஞ்சகமான முறையில் அவரைக் கொலை செய்த கிருஷ்ணனின் தந்திரத்தை விவரிக்கும் வியாசன், மகிஷாசுர வதம் என்ற சூதுக்கு சான்று கூறுகிறான்.

ஒவ்வொரு ஆண்டும் நவராத்திரிக் கொண்டாட்டங்களின் போது வங்காளத்தின் நகர்ப்புறங்கள் கேளிக்கையில் மூழ்கியிருக்க, அசுர் இன மக்களோ அநீதியாய் வீழ்த்தப்பட்ட தம்மினத் தலைவருக்காய் துயரில் ஆழ்ந்திருப்பர். ஒன்பது நாட்களும் அவர்கள் வீடுகளை விட்டு வெளிவருவதில்லை. வெளியாட்களிடம் பேசுவதில்லை. ஒன்பதாம் நாளன்று உறவினர்கள் கூடி தங்கள் முன்னோர்களுக்கு எளிமையான படையல் வைக்கின்றனர். அப்போது தங்கள் நாசி, வயிறு மற்றும் மார்பகங்களில் எண்ணையைத் தடவிக் கொண்டு வெள்ளரிக்காய் தின்னும் சடங்கு ஒன்றையும் செய்கின்றனர்.

''மகிஷாசுரனை வஞ்சகமாக ஏமாற்றிய துர்கா அவரது வயிற்றைக் கிழித்துவிட்டாள். அவன் மூக்கிலிருந்தும் மார்பிலிருந்தும் ரத்தம் வடிந்ததை நினைவு கூர்ந்து, நாங்கள் அங்கெல்லாம் எண்ணை தடவிக்கொள்கிறோம். பழிக்

மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள கத்சிரோலி மாவட்டத்தைச் சேர்ந்த கோண்டு பழங்குடியின மக்கள் ராவணனை அரக்கனாகச் சித்தரித்து எரிப்பதைத் தடை செய்யக் கோரி கோர்சி நகரில் நடத்திய ஆர்ப்பாட்டம்.



குப் பழியாக எதிரிகளின் ஈரலைத் தின்பதற்கான உரு வகமாகவே வெள்ளறிக்கா யைத் தின்கிறோம்'' என்கி றார் சுஷ்மா அசுர்.

பார்ப்பன இந்து மதம், கொலைகளைக் கொண் டாடும் மதம். நவராத் திரி முடிந்த பத்தாவது நாளான விஜயதசமியைத் தான், இராவணன் கொல் லப்பட்ட நாளாக கருதுகி றது பார்ப்பன மரபு. அன்று தான் இராவணின் கொடும் பாவி கொளுத்தப்படும் இராமலீலா. இதே விஜயதசமி நாளில்தான் ஆர்.எஸ்.எஸ். ஆண்டுதோறும் வெற்றி ஊர்வலம் நடத்துகிறது. உத்திரபிரதேச மாநிலம் லக் னௌ நகரில் நடந்த ராம் லீலாவில் ''ஜெய் ஸ்ரீராம்'' என்று கூவி தேர்தல் பிரச்சாரத்தைத் துவங்கி வைத் தார் மோடி. ராமனாக மோடியையும், இராவணனாக நவாஸ் ஷெரீபையும் சித்தரித்தன சங்க பரிவாரத்தினர் இறக்கியிருந்த விளம்பரங்கள்.



மேற்கு வங்க மாநிலம் புருலியா பகுதியில் மகிஷாசுரனை வணங்கும் பழங்குடியினர்.

இராவணவதம் கோலாகலமாக கொண்டாடப்பட் டுக் கொண்டிருந்த அதே சமயத்தில், தங்களை இராவ ணின் வழித்தோன்றல்களாக கருதும் மத்திய இந்தியா வின் கோண்டு பழங்குடியின மக்கள் அறிவிற் சிறந்த தங்கள் மூதாதையர் அநீதியாக கொல்லப்பட்டதையும், அந்தக் கொலை கொண்டாடப்படுவதையும் எதிர்த்து கடந்த மாதம் பேரணி நடத்தியுள்ளனர். மகாராஷ்டி ராவின் கட்சிரோலி மாவட்டத்தைச் சேர்ந்த கோர்ச்சி நகரில் சுமார் 3,000 கோண்டு பழங்குடியின மக்கள் கலந்து கொண்ட பேரணி ஒன்றும், பெந்திரி கிராமத் தில் சுமார் 6,000 பேர் கலந்து கொண்ட கூட்டு வழிபா டும் நடந்துள்ளது.

அசுர் மற்றும் கோண்டு பழங்குடியினத்தவர்கள் பல நூற்றாண்டுகளாக போற்றிப் பாதுகாத்து வைத்தி ருந்த தமது அடையாளங்களை, தேவ மரபுக்கு எதிரான அசுர மரபை, கம்பீரமாகப் பிரகடனம் செய்வது கண்டு திகைக்கிறது பார்ப்பனியம்.

மகிஷன் பட்ட காயங்களின் மேல் எண்ணை தடவிக் கொண்டி ருந்த அசுரர்கள் தங்களை வெளிப் படுத்திக் கொள்ளவில்லை. கோமாதா குண்டர்களால் ஊனா வில் உரிக்கப்பட்ட தலித்துகளின் முதுகுத் தோலில், அரியானாவின் ஜாட் வெறியர்கள் மிளகாய்த்தூள் தடவிய போதும், போட்மாங்கே வின் கண்களில் அக்லக்கின் ரத்தம் வழிந்த போதும், ரண்வீர் சேனா வின் துப்பாக்கி ரவைகள் இஸ்ரத் ஜஹானின் இதயத்தைத் துளைத்த போதும், பெஸ்ட் பேக் கரியில் ஆர்.எஸ்.எஸ். கொளுத்திய நெருப்பில் தண்டகாரண்யக் குடிசை கள் எரிந்த போதும், அசுரர் களின் வாரிசுகள் தங்களை பிரகடனப்படுத்திக் கொள் ளவில்லை.

போரில் தோற்ற ஆரியர்கள், பெண்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தக் கூடாது என்ற அசுரர்களின் யுத்த தருமத்தைப் பயன்படுத்தி, துர்கா என்கிற பெண்ணை போருக்கனுப்பி, அவள் மூலம் வஞ்சகமான முறையில் மகிஷாசுரனைக் கொன்றுவிட்டதாகச் சொல்கிறது ஜார்கண்டைச் சேர்ந்த அமர், அசுர் என்ற பழங்குடியின மக்களின் தொன்மம்.

பார்ப்பனியப் பாலை வனத்தின் சுடுமணற்பரப் பின் அடியில், உயிர்த் தண் ணீரை எதிர்பார்த்துக் காத் திருந்த அசுர விதைகளை சிலிர்த்தெழ வைத்திருப் பது தங்களுடைய கோமாதாவின் மூத்திரம்தான் என்ற உண்மை, இந்துத்துவ மூடர்களுக்குப் புரியவில்லை. கல்கத்தாவில் நடந்த துர்கா பூஜைக்கு அசுர் இனத்தவர் கள் சிலரை அழைத்துச் சென்று அவர்களை ''மைய நீரோட்டத்தில்'' கரைக்க முயற்சித்திருக்கிறார்கள்.

பார்ப்பனியத்தை எதிர்த்து நின்ற கிராத மரபின் வழித்தோன்றல்களான மணிப்பூர், திரிபுரா, அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களின் பழங்குடியி னப் பெண் குழந்தைகளை வேறு மாநிலங்களுக்குக் கடத்திச் சென்று, பார்ப்பனிய விழுமியங்களில் ஊறப் போட்டு, பார்ப்பன வைரஸ்களாக மாற்றி, மீண்டும் அவர்களை வட கிழக்குக்கே அனுப்புகிறார்கள்.

இருப்பினும் ஒன்றுகலத்தல் சாத்தியப்படவில்லை. நாக்பூர் விஜயதசமி நைவேத்தியத்தை வெறித்துப் பார்க் கிறது மாசானிக்கு வெட்டிய பன்றியின் தலை. அனந்த சயனத்தில் உறங்கும் மகாவிஷ்ணுவின் முகத்தில் சுருட் டுப் புகையை ஊதுகிறான் எல்லைக் கருப்பன். ஓணம் பண்டிகையை வாமன ஜெயந்தியாக சித்தரித்த அமித் ஷாவைக் காறி உமிழ்கிறார்கள் மலையாளிகள். இருப் பினும், தேசியம் என்பது பார்ப்பனியமே என்று கரு தும் ஆர்.எஸ்.எஸ். கும்பல், தனது பார்ப்ப மயமாக்கும் முயற்சியைக் கைவிடுவதாக இல்லை.

பார்ப்பனியத்தை மக்களின் தொண்டைக் குழிக்குள் திணிக்கும் முயற்சி அதிகரிக்க அதிகரிக்க எதிர்ப்பும் அதிகரிக்கிறது. அந்த வகையில் தான் இப்போது அசுர் பழங்குடியி னரும் கோண்டு பழங்குடியினரும் தங்கள் மூதாதைகளை உயர்த்திப் பிடித்துள்ளனர்.

பார்ப்பன புராணங்களை ஆய்வு செய்து, அவை ஆரியர்க ளால் இந்த மண்ணின் பூர்வகுடி கள் அழித்தொழிக்கப்பட்ட கதை களின் குறியீடுகளாக உள்ளன என் பதை வரலாற்றறிஞர்கள் நிறுவி யுள்ளனர். தற்போது எழுந்துவ ரும் இந்த எதிர்வினைகள், அந்த

ஆய்வுகளுக்கான ரத்த சாட்சியங்களாக உள்ளன. உ.பி., ம.பி., ஜார்கண்டு, வங்காளம் போன்ற பல இடங்களில் இராவணனும் மகிஷாசுரனும் பழங்குடி மக்களால் வழிபடப்படுகிறார்கள் என்பது சமீப ஆண்டுகளில் தெரிய வந்த உண்மை. இருப்பினும், இவையெல்லாம் தம்மளவிலேயே இந்துத்துவ எதிர்ப்பு உள்ளடக்கத்தைப் பெற்றிருப்பதாக நாம் கருதவியலாது.



ஹைதராபாத்தில் உஸ்மானியா பல்கலைக்கழகத்துக்கு அருகில் உள்ள ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகளுக்கான பல்கலைக்கழகத்தில் அசுரர்கள் வாரம் கொண்டாடும் மாணவர்கள். (கோப்புப் படம்)

அறிவியல் ரீதியிலான ஆய்வுகளோ, நேரடி சாட்சியங்களோ இல்லாத காலத்திலேயே பார்ப்பன புராணங்களை வாசித்து, தனது சொந்த புரிதலின் அடிப்படையில் அதற்கொரு அரசியல் உள்ளடக்கத்தை பெரியார் வழங்கியுள்ளார். ஆரியப் படைகள் திராவிட அசுரர்களின் மேல் நிகழ்த்திய அநீதியான போரும், கொலைகளுமே இராமாயணம் என்பதை மேடைகளில் முழங்கிய பெரியார், இராமனின் படத்திற்கு செருப்பு மாலையிட்டு பார்ப்பனியத்தின் முதுகெலும்புகளைச் சில்லிட வைத்தார்.

வால்மீகி எழுதிய இராமாயணத்தின் பிரதிகளில் இருந்தும், இன்னபிற புராணங்களின் பிரதிகளிலிருந்தும் மேற்கோள்களைக் காட்டி அதிர்ச்சியில் பிளந்த பார்ப்பன வாய்களில் நெருப்பைக் கொட்டினார். பெரியாரின் இராமாயணத்தை மேடைகளில் நாடக மேடைகளில் நிகழ்த்திக் காட்டி சனாதனிகளைக் கலங்கடித்தார் எம்.ஆர்.இராதா. இராதாவின் நாடகத்தில் அவதரிக்கும்போது, ஒரு கையில் மீனும், இன்னொரு கையில் கள்ளுக்கலயமும் ஏந்தியிருந்தான் இராமன். ‘இராமனைக்’ கைது செய்தால் இந்துக்களின் மனம்புண்படுமே எனத் தடுமாறிய போலீசார், வேடத்தைக் கலைக்குமாறும் வண்டியில் ஏறுமாறும் ராதாவிடம் கெஞ்சியும், அதனை மறுத்து, கையில் மீனும் கள்ளுக்கலயமுமாக ராமன் நடந்து சென்ற கண்கொள்ளாக் காட்சியை அன்று தமிழகம் கண்டது.

பார்ப்பனியத்திற்கு எதிராகத் தமிழகத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் அறிவுத் தளத்தோடு நின்றுவிடவில்லை. ராமனுக்கு செருப்பு மாலை சாத்தப்பட்டதோ, பிள்ளையார் சிலைகள் உடைக்கப்பட்டதோ இராவணலீலாவோ அவையனைத்தும் அரசியல் உள்ளடக்கத்துடன் மக்கள் மத்தியில் இயக்கங்களாக முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

அயோத்தியை முன்வைத்து அத்வானி ரத யாத்திரை நடத்திய போதும், பாபர் மசூதியை இடித்த போதும் தமிழகத்தின் வீதிகளில் மக்கள் கலை இலக்கியக் கழகம் இராமனை எரித்தது. சிறீரங்கம் கருவறை நுழைவுப் போராட்டம், அரங்கநாதனின் உறக்கத்தைக் கலைத்தது. நந்தனும், சம்புகனும், ஏகலைவனும் பார்ப்பன பாசிசத்துக்கு எதிரான போராளிகளாக ம.க.இ.க. வின் அசுரகானம் பாடல்களில் உயிர்த்தெழுந்தார்கள். முற்போக்காளர்களோ இராம ஜென்மபூமி என்ற மோசடியை நேருக்குநேர் எதிர்க்கும் துணிவின்றி, ‘‘கடவுளின் பெயரால் கலவரம் எதற்கு’’ என்று மழுப்பினார்கள். அத்வானியின் ராமனுக்கு எதிராக மோடியின் ராமனை நிறுத்தினார்கள்.

ஆம். *1980* களின் பிற்பகுதி தொடங்கியே பார்ப்பன பாசிசம் தீவிரமாகத் தலையெடுக்கத் தொடங்கிவிட்டது என்ற போதிலும், இந்து மதம் என்று இவர்களால் அழைக்கப்படுவதே பார்ப்பன மதம்தான் என்பதையோ, இதன் புராணங்கள் அனைத்திலும் நிரம்பியிருப்பவை ஆரிய நிறவெறியும் வருணாசிரம வெறியும்தான் என்பதையோ முற்போக்காளர்கள் எனப்படுவோரே ஏற்கவில்லை. அவர்களும் பார்ப்பனக் கருத்தாக்கத்துக்கு ஆட்பட்டிருந்தனர் அல்லது அதனை எதிர்க்க அஞ்சினர்.

இராவண காவியமும், இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்ற நாடகமும் தமிழகத்தில் சென்ற நூற்றாண்டிலேயே அரங்கேறிவிட்டன என்ற போதிலும், இப்போதுதான் ஜே.என்.யு.வில் மகிஷாசுரன் தினம் கொண்டாடப்படுகிறது. இப்போதும் கூட பார்ப்பன மரபையும் பார்ப்பனியத்தால் ஒடுக்கப்பட்ட அசுர மரபையும் எதிர் நிறுத்தி இந்து மதத்தின் வரலாற்றையும் அதன் ஆன்மாவையும் புரிந்து கொள்வதற்கு பல அறிவுத்துறையினர் தயாராக இல்லை. தேவ மரபும் அசுர மரபும், பார்ப்பனியமும் பவுத்தமும், இந்தியாவின் பன்முகத்தன்மைக்கான சான்றுகள் என்று இந்துத்துவ வாதிகள் அங்கீகரிக்கவில்லையே என்று அங்கலாய்க்கிறார்கள், அல்லது விமரிசிக்கிறார்கள்.

இராவணனுக்கும் மகிஷாசுரனுக்கும் வரலாறு எழுதி, அவர்களை தேசிய நாயகர்களாக்குவது நம் நோக்கமல்ல. இராம ராச்சியத்துக்கு எதிராக இராவண ராச்சியம் எதையும் நாம் முன்வைக்கவில்லை. ஆனால் வரலாறு திரிக்கப்படும்போது, திரிக்கப்பட்ட அந்த வரலாறு, நிகழ்காலத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் போது, எதிர்காலத்தை விழுங்கி விடுமோ என்று அச்சுறுத்தும்போது நாம் அசட்டையாக இருக்க முடியாது.

‘‘சிங்கங்களுக்கென்று ஒரு வரலாற்றாசிரியன் தோன்றாதவரை, வேட்டைகளின் வரலாறு வேட்டைக்காரர்களையே கொண்டாடும்’’ என்றார் நைஜீரியக் கவிஞர் சினுவா அச்சேபி (*Chinua Achebe*). பசுமாட்டு தேசியத்தின் கொம்பைப் பிடித்து உலுக்குகிறது எருமைமாட்டு தேசியம்.

● சாக்கியன்

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, 2nd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGA RAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி



சோசலிசத்தின் தோல்வி குறித்து பெருங் கூச்சல் போடும் முதலாளி வர்க்கம், அதனைக் காட்டிலும் நெடிய வரலாறு கொண்ட தன்னுடைய தோல்வியைப் பேசுவதில்லை. சுதந்திரச் சந்தையின் இடத்தை ஏகபோகம் கைப்பற்றிக் கொண்டிருப்பதையும், ஜனநாயகம் மெல்ல மெல்ல பாசிசமாக உருமாறி வருவதையும், உலகப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியாமல் முதலாளித்துவம் தவிப்பதையும், முதலாளித்துவத்தின் கருவறையிலேயே கிளர்ந்தெழும் மக்களின் போராட்டங்களையும் அது தனது தோல்வியாக கூறிக் கொள்வதில்லை.

ஆனால் ஒரு நூற்றாண்டுக்குள் சோசலிசம் தோற்றுவிட்டதாக தீர்ப்பு கூறுகிறது. மனித குலத்தின் வரலாற்றுடன் ஒப்பிடும்போது நூறு ஆண்டுகள் என்பது ஒரு நாளின் ஒரு மணித்துளி. பிறந்த முதல் ஐம்பது ஆண்டுகளில் வெற்றி மேல் வெற்றி ஈட்டிய சோசலிசம், பிந்தைய ஆண்டுகளில் சரிவையும் தோல்வியையும் சந்தித்தது உண்மைதான்.

ஒரு நோயைக் குணப்படுத்துவதற்கான மருந்தை மனித உடலில் சோதித்துப் பார்த்து, அதன் விளைவுகள் - பக்க விளைவுகள் என்ன என்பதை ஓரளவு புரிந்து கொள்வதற்கே அறிவியலுக்கு, ஒரு மனிதனின் ஆயுட்காலமே தேவைப்படுகிறது. சோசலிசம் என்பது சமூக அறிவியல். இது மனித சமூகத்தின் வாழ்நிலை மீதான சோதனை; சிந்தனை மீதான சோதனை. சடப்பொருளின் மீதோ, தன்னிலை உணரவியலாத உயிர்ப்பொருளின் மீதோ நடத்தப்படும் இயற்கை விஞ்ஞான சோதனை அல்ல. சிந்திக்கின்ற மனிதர்கள் மீதான சோதனை. உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமையை ஒழிப்பது மட்டுமல்ல, அந்தக் கருத்தாக்கத்தையே சமூகத்தின் நினைவிலிருந்து அகற்றுவதற்கான சோதனை.

உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமை ஒழிக்கப்பட்டுவிட்டாலும், சமூகத்தில் பரவியிருக்கும் முதலாளித்துவ வர்க்க சிந்தனை உடனே அகன்று விடுவதில்லை. அது கம்யூனிஸ்டு கட்சிக்கு உள்ளேயும் தலையெடுக்கிறது. மக்களுக்கு பதில் சொல்லும் கடமையிலிருந்து தவறிய அதிகாரத்துவப் போக்காக, திறமைக்கு முன்னுரிமையும் சலுகையும் அளித்து அதிகாரத்தில் அமர்த்த வேண்டுமென்றும், ''இலக்குதான் முக்கியம்; வழிமுறை முக்கியமல்ல'' என்றும் கூறுகின்ற முதலாளித்துவ சிந்தனைப் போக்காக அது வெளிப்படுகிறது.

இத்தகைய போக்குகள் அதிகாரத்தில் இருக்கும் ஒரு கம்யூனிஸ்டு கட்சிக்குள் தலையெடுக்குமானால், அதற்கு எதிராகப் போராட மக்களைக் களத்தில் இறக்க வேண்டும். சோசலிச அரசே அமைந்தாலும் வர்க்கப் போராட்டம் தொடரத்தான் செய்யும் என்றார் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் தோழர் மாவோ. சொன்னது மட்டுமல்ல, சோசலிசத்தின் கீழ் தொழிலாளி வர்க்கம் தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு நடத்த வேண்டிய கலாச்சாரப் புரட்சியின் அறைகூவலாக, ''தலைமையகத்தைத் தகர்த்தெறியுங்கள்'' என்ற அறைகூவலையும் விடுத்தார்.

இருப்பினும், சீனக் கம்யூனிஸ்டு கட்சியை முதலாளித்துவப் பாதையாளர்கள் கைப்பற்றிக் கொள்வதை சீனத் தொழிலாளி வர்க்கத்தால் தடுக்கவியலவில்லை. இன்று முதலாளித்துவ மீட்புக்குப் பின்னர் சமூகத்தில் அதிகரித்து வரும் சீரழிவுகளும் ஏற்றத்தாழ்வுகளும் சோசலிசம் குறித்த ஏக்கத்தை சீன மக்களிடம் தோற்றுவித்து வருவதை சீன முதலாளி வர்க்கத்தாலும் தடுக்கவியலவில்லை.

முதலாளித்துவ மீட்புக்கு எதிராக சீனத்தில் கலாச்சாரப் புரட்சி தொடங்கிய அதேகாலத்தில், நாடாளுமன்ற நாற்காலி கம்யூனிஸ்டு இயக்கமாக மாறிவிட்ட இந்திய கம்யூனிஸ்டு இயக்கத்திலும் ஒரு புரட்சி வெடித்தது. மே, 1967-இல் நக்சல்பரி கிராமத்தில் வெடித்தெழுந்த உழவர் புரட்சி, ஒரு புரட்சிகர கம்யூனிஸ்டு கட்சியின் உருவாக்கத்துக்கு வித்திட்டது. இடது விலகல் காரணமாக இ.பொ.க (மா-லெ) பின்னடைவைச் சந்தித்த போதிலும், இந்த அரசமைப்பைத் தூக்கியெறிய வேண்டுமென்று அது விடுத்த அறைகூவல், இன்றைக்கு முன்னிலும் பொருத்தமானதாகியிருக்கிறது. ஆளும் வர்க்கம் தோற்கடிக்கப்படவில்லை என்பது உண்மைதான். எனினும், அது ஆளும் அருகதை இழந்து தோற்றுவிட்டது. தன்னை அகற்றும் வலிமையை பாட்டாளி வர்க்கம் பெற்றிருக்கவில்லை என்ற காரணத்தினால், அது அதிகாரத்தில் நீடிக்கிறது.

உலக முதலாளி வர்க்கத்தின் நிலையும் அதுதான். முதலாளித்துவத்தின் முடிவை, அதனை ஒழித்துக் கட்ட வேண்டிய பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுக் கடமையை முன்னறிந்து சொன்ன மார்க்சும் மார்க்சியமும் செத்துவிட்டதாக முதலாளித்துவம் பிரச்சாரம் செய்யாத நாளில்லை. மார்க்சியம் சாகவில்லை என்பதை தொழிலாளி வர்க்கம் புரிந்திருக்கிறதோ இல்லையோ, முதலாளி வர்க்கம் தெளிவாகப் புரிந்திருக்கிறது.

''இத்தனை நாடுகளில் தோல்வியடைந்த பின்னரும் சோசலிசம் என்ற இந்தக் கருதுகோள் வெவ்வேறு வடிவங்களில், வெவ்வேறு நாடுகளில் தலையெடுப்பது ஏன்? சோசலிசம் என்பது மனிதனின் உள்ளுணர்விலேயே உறைந்திருக்கிறதா? ஒருவேளை அது மனித மூளையின் அங்கமாக இருந்தால், அதனை சமாளித்து சுதந்திரச் சந்தையின் ஆதாயங்களை மனிதர்களுக்குப் புரிய வைப்பது எப்படி?'' (https://www.cato.org/events/socialismhumannature) என்று ஆராய்ச்சி நடத்துகிறது அமெரிக்க முதலாளித்துவம். மூளையை அறுத்தெறிவதன் மூலம் சோசலிசக் கருத்தை வெல்ல முடியுமா என்று சிந்திக்கிறது.

சோசலிசம் பெறவிருக்கும் வெற்றியை இதைக் காட்டிலும் தெளிவாக யாரேனும் கூற இயலுமா? இரு நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் மனித குலத்தின் சிந்தனையில் உயிர் வாழும் மார்க்ஸை அகற்ற முடியாத முதலாளித்துவத்தின் தோல்வியைத்தான் மேலும் தெளிவாக யாரேனும் விளக்க இயலுமா?

●

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.




2016 2017

# 2016, நவம்பர் - 7

# ரசிய சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டு தொடக்கம்

2017, மே - 5
காரல் மார்க்ஸ் பிறந்த
200-வது ஆண்டு



2017, மே
நக்சல்பாரி எழுச்சியின்
50-ஆவது ஆண்டு தொடக்கம்



2016
சீனக் கலாச்சாரப் புரட்சியின்
50-ஆவது ஆண்டு நிறைவு

